


பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

# வாழ்வும் வாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பகவான்
# ஸ்ரீ சத்ய
# சாயிபாபா

# வாழ்வும்
# வாக்கும்

★

தெல்லியூர் பப்ளிக்கேஷன்ஸ்
14, குமாரசாமி வீதி—யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு — 1973

வெளியீடு உரிமையும்:

தெல்லியூர் பப்ளிக்கேஷன்ஸ்

குமாரசாமி வீதி

யாழ்ப்பாணம்.

''நீரினுள் மூழ்கித்தான் முத்தைக்கொண்டுள்ள சிப்பியைப் பெறலாம். உண்மையின் ஆழத்தை அறிய அதிலேயே மூழ்குங்கள்; அதனை உண்ணுங்கள்- அதன் உருசியை அறியுங்கள்!!

✵ ✵

''சத்தியத்தையும் அன்பையும் விருத்தி செய்யுங்கள் இதுவேண்டும்—அது வேண்டுமென்றுகோரி நீங்கள் பிரார்த் திக்கவே வேண்டியதல்லை. நீங்கள் கேட்காதிருக்கவே யாவும் உங்களுக்கு கிடைக்கும்!!

★ ★

''உண்மையை உணருமுன்னர் பிரகடனம் செய்யாத் தடுமாற்றமிருக்கும்போது அமைதியாக — மௌனம இருங்கள். உண்மை காலிக்கும்போது—நம்பிக்கை வள போது அதனைப் பாதுகாருங்கள். உலகை வளர்க் பெரும் பயன் பெருகும்.!!

அச்சுப்பதிப்பு:

கூட்டுறவு அச்சகம்

யாழ் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மொழிதல்

சத்தியம்—தர்மம்—சாந்தி—பிரேமை, இவற்றை நிலைநாட்ட ஸ்ரீ சத்யசாயிபாபா அவதரித்துள்ளார். இவ்வுலகிலே மனிதன் சந்தோஷமாக வாழவே பிறப்பெடுக்கின்றான். ஆனால், அவனது இன்றைய நிலைமை மிகவும் பரிதாபகரமாகவே இருக்கின்றது. மனிதன் தன்னைத்தானே இழிவுபடுத்திக் கொண்டுவிட்டான். தனது உயர்ந்த பண்புகளை ஆசைக்கு ஆட்படுத்தி இழிந்து விட்டான். தனது திறமைகளையும் உயர்வையும் தாழ்த்திக் கொண்டான்; தன் வாழ்வின் பாதையையே திருப்பி விட்டுவிட்டான்.

நற்குணம்—ஒழுக்கம்—நீதி—அறம்—பொறுமை—பணிவு —அன்பு ஆதியாம் தர்மத்தின் துறைகளை எள்ளி நகையாடி இகழும் மனிதன்— பெற்றோரிடத்திலே, பெரியோரிடத்திலே, தெய்வத்தினிடத்திலே பக்தியில்லை-மரியாதையில்லை—நம்பிக்கையில்லை என்று நெறிகெட்டு நடக்கின்றான். பகுத்தறிவென்று கூறி பரிதவிக்கும் வாழ்வில் ஈடுபடுகின்றான். மலிவான பிரச்சாரத்தினை நாடித்திரிகின்றான். இத்தகைய சூழலில்—நெருக்கடிகள் மிகுந்த காலத்தில்—தன் உள்ளத்தின் அறிவொளியை மறந்து மக்கள் மயங்கித்திரியும் வேளையில் அவர்களுக்கு வழிகாட்ட இறைவனின் அருட்கருணையால் மகாத்மாக்கள் தோன்றி வழிகாட்டும் பணியை மேற்கொள்வர். இன்றைய சூழலில் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா இவர்களுக்கு வழிகாட்டத் தோன்றிய ஓர் அவதார புருடராவர்.

மக்கள் உள்ளங்களில் நிறைந்துள்ள வாழ்வின் ஒளியைச் சுட்டிக்காட்டி, வாழும் வழி கூறி, மனப்பயம் நீக்கி, மருட்சியையும் மயக்கத்தையும் போக்கி, தெய்வத்துடன் மக்களுக்குள்ள நெருங்கிய உறவை வளர்க்கும் பணியினை அமைதியின் உறைவிடமான பிரசாந்தி நிலையத்திலிருந்து பகவான் ஆற்றி வருகின்றார். மக்கள் குலத்தின் ஆச்சாரியனாக—மனிதனின் ஆத்மார்த்த பிணிகளுக்குச் சிறந்த மருத்துவனாக, ஆண்டவனின் பாதாரவிந்தத்தை அடையும் வழிக்கு மக்களை இட்டுச் செல்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சாயி குடும்பத்தினர் யாரென்று நான் உங்களுக்கு கூறுகின்றேன். உண்மை அவருடைய தந்தை; அன்பு அவர் தாய்; பற்றற்ற நிலையே மனைவி அல்லது கணவன்; பேரறிவே மகன்; மனவலிமையே மகள்; நல்லறமே உற்றார் உறவினர்; துறவிகளும் சாதுக்களும் தான் அக்குடும்பத்தின் நண்பரும் தோழரும்—சாயிகுடும்பத்தின் அமைப்பு இதுவேயாகும்.

நீங்களே உங்களைச் சாயி பக்தர்களென்று கூறிக் கொண்டால் மட்டும் போதாது. நான் உங்களை அவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும். என்போதனைகளின்படி நீங்கள் நடந்து கொண்டாற்றான் நான் உங்களை ஏற்றுக் கொள்ளுகின்றேன். அப்போதனைகளும் கடினமானவைகளல்ல. உண்மையாக — நேர்மையாக — அன்பு நிறைந்தவர்களாக இருங்கள்; ஒவ்வொன்றையும் இறைவன் எனக்கருதுங்கள். உண்மையையும் பொய்மையையும் பகுத்தறிவதே வாழ்வின் அடிப்படை இலட்சியம். சிப்பியிலிருந்து முத்தை எடுத்ததும் அந்த ஓடுகளை வீசிவிடுமாறுபோல தெய்வ அருட்கருணையின் உண்மையை — சக்தியை எடுத்துக் கொண்டு மற்றவற்றை விலக்கிவிடுக. உடம்பும் ஆன்மாவும் வேறு வேறு என்பதை என்றும் எப்பொழுதும் உணர்ந்தும்—அந்த உணர்ச்சியோடும் வாழவேண்டும். ஆண்டவனே உண்மை என்னும் தத்துவத்தை அறிவதற்கு இந்தப் பகுத்தறிவு அவசியம்.

ஆத்மாவுக்கு ஆதியோ அந்தமோ கிடையாது. அது போலவே சாந்தி வாழ்வுக்கும் சமாதான அமைதி நிலைமைக்கும் உண்டு. உணர்ச்சியில் — சொல்லில் — செயலில் சமாதான அமைதியானது பரிணமிக்க வேண்டும். எல்லா இன்பங்களுக்கும் சந்தோஷங்களுக்கும் சமாதானமே தொட்டில். உலகில் நிரந்தரமானது ஆத்மாமட்டுமேயாகும். மற்றதெதுவும் நிரந்தரமன்று. இறைவனின் சக்தியே இவ் ஆத்மா. சந்தோஷமும் சாதாரண அமைதியும் வெளிப்பொருள்களில் கிடையாது. உன் உள்ளத்து ஒளியிலேயே அவை இருக்கின்றன. மற்றவர்களது கருத்திற்காக—அபிப்பிரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்துக்காக உன் வாழ்வை அமைத்துக்கொள்ளாதே. விழிப் படைந்த உனது மனச்சாட்சியை—உன் உள்ளத்தின் உண் மைவழியையே கடைப்பிடித்து நடக்குக. உண்மையின்— சத்தியத்தின் வழிச்செல்வோருடன் உன்னையும் இணைத்துக் கொள். வசதியுள்ள போதெல்லாம் மற்றவர்களுக்குச் சேவை செய். அப்படிச் செய்யுங்கால் அதன் பலனையோ, யாருக்குச் செய்யப்படுகின்றதென்பதையோ சிறிதேனும் சிந்தியாதே. பொன்னான உன்பொழுதை அர்ப்பணித்து எல்லாவற்றினையும் இறைவனுக்கென்றே மண்ணுக்காதே. நடந்தால் மனக்கவலை—சஞ்சலம்—ஏன்?— ஆனந்தத்துக்குக் கூட இடமிருக்காது.

எல்லோரும் சமம். எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கும் ஆன்மா சமமான பலமுடையது. சூரியன் உதிக் கும்போது குளத்திலிருக்கும் தாமரைமலர் மொட்டுக்கள் எல்லாம் மலர்வதில்லை. மலர்ச்சிபெறத்தக்க முதிர்ச்சிய டைந்த மொட்டுக்களே மலர்கின்றன. முதிரா முகைகள் தாங்கள் இதழ்விரித்து மலரும் காலத்திற்குக் காத்திருக் கும். இதேபோன்று மக்களிடையேயும் உண்டு. முதிர்ந்த கனிகள் என்றாவது உதிர்ந்தேயாகவேண்டும். முதிராமுன் னர் பேதங்கள் காணப்படும். எவ்வளவு ஆறுதலாக நடந் தாலுஞ்சரி—எந்தச் சுற்றுப்பாதைவழிச் சென்றாலும் சரி எல்லா ஆத்மாக்களும் தாம் போய் அடையவேண்டிய தானத்தினை அடைந்தேயாகவேண்டும்.

நாமஸ்மரணையுடன் உங்கள் மனத்தினுடைய போ ராட்டத்தை அடக்கிக் கொள்ளுங்கள். அடுப்பின்மேல் இருக்கும் பால் பொங்கினால் எரிந்து கொண்டிருக்கும் விறகை வெளியில் எடுத்து விடுவதால் பயனில்லை. குளிர்ந்த சலத்தை பொங்கிவரும் பாலின்மேல் உடன் தெளித்தால் அது பொங்காது குறைவடையும். அதன்பின் விறகை வெளியில் இழுத்து அணைத்து விடலாம். அதனைப்போலவே மனத்தைக் குளிர்ச்சியடைய உடன் செய்யக்கூடியது நாமஸ் மரணை ஒன்றுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன விளக்கு ஒன்று இருந்தாற் போதும்; அதனை வைத்துக்கொண்டு இருளடர்ந்த பெரும் வனந்தரத்தையே தாண்டி விடலாம். பெரிய சமுத்திரத்தினைத் தாண்டவேண்டுமானல் சமுத்திரத்தின் அளவுடைய விசாலமான படகு தேவையில்லை. ஒரு சிறு படகுமட்டும் போதும். அதைப் போல—பவசாகரமான இந்த உலகைத்தாண்ட வேண்டுமானல் பிரமாண்டமான யக்ஞயாகங்கள், அகோர தவங்கள் வேண்டியதில்லை. பகவான் நாமஸ்மரணை என்னும் சிறு நாம உச்சரிப்பினுல் அதனைச் சுலபமாகத் தாண்டி விடலாம்.''

இவ்வாறெல்லாம் வாழ்வுக்கு வழிகாட்டும் சத்திய ஒளியின் நல்வாழ்வையும் அவர் கூறிய—கூறும் அருள்வாக்குக்களையும் மக்கள்முன் படைக்கவேண்டும் என்னும் எண்ணத்தால் தூண்டப்பட்டு எங்களால் முடிந்தளவு பணியினை ஆற்றும் பாங்குடன் இவ்வவதார புருடரின் வாழ்க்கையினையும் அருளிய வாக்குகளில் சில துளிகளையும் தொகுத்து இந்நூலாக வெளியிடுகின்ருேம், இம்மகானைப்பற்றிய நூலை எழுதுவதென்ருல் அகிலத்தை ஒரு சிறு அறையில் அடைத்துவைக்க முயல்வதுபோன்ற செயலாகும்.

பகவான் கிருஷ்ணர், பாலனுக இருந்த காலையில், அவரின் குறும்புகளைத் தாங்கவியலாத யசோதை, அவரை ஒரு மரத்துடன் கட்டிவைக்க முனைந்தாள்; ஆனுல், கட்டிவைக்க எடுத்த கயிருே பற்றவில்லை: பின் இன்னும் நீளமான கயிற்றை எடுத்தாள்-அதுவும் பற்றவில்லை; மேலும் நீளமான கயிற்றினை எடுத்தாள்—அதுவும் பற்றவில்லை. அந்தத் தெய்வக் குழந்தையைக் கட்டி வைக்கக்கூடிய கயிருே அவளுக்குக் கிடைக்கவில்லை என்பது முன் அறிந்த வரலாறு. இங்குபகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் வரலாற்றையோ அவரது வாக்குச் சிதறல்களையோ எடுத்துக் கூறுதற்கு எம்போன்ருேரால் இயலுமா?

''எனது இரகசியத்தை எவரும் அறியமாட்டார்கள். உங்களால் செய்யக்கூடிய சிறந்த செயல் அதிலேயே நீங்கள் மூழ்கி விடுதலேதான். அனுகூலபிரதிகூல விவாதங்களை நடத்துவதால் எந்தவிதமான பயனும் கிட்டாது. நீரினுள் மூழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கித்தான் முத்தைக் கொண்டுள்ள சிப்பியைப் பெறலாம். உண்மையின் ஆழத்தை அறிய அதிலே மூழ்குங்கள்; அதனை உண்ணுங்கள்—அதன் உருசியை அறியுங்கள். அதன் பின்னர் உங்கள் உள்ளம் நிறைவுபெற என்னைப்பற்றி விவாதியுங்கள்—சிந்தியுங்கள். சத்தியத்தையும் அன்பையும் விருத்தி செய்யுங்கள். இது வேண்டும்—அதுவேண்டும் என்று நீங்கள் பிரார்த்திக்க வேண்டியதேவை கிடையாது. நீங்கள் கேட்காதிருக்க யாவும் உங்களுக்குக் கிடைத்துவிடும். இந்த இரகசியங்களை அறிவதற்கு முன்னுல் உங்களிடம் பற்றியுள்ள அழுக்குகளைக் கழுவி விடுங்கள் — உதறிவிடுங்கள். நீங்கள் பூர்ணத்துவத்தை அடையுமுன்னர் எதனையும் பிரகடனப்படுத்தாதீர். எதனையும் முற்றுற அறியும் வரை மௌனமாக இருங்கள். நம்பிக்கையானது உதயமாகும்போது ஒழுக்கம்—சுயவடக்கம் ஆதியனவற்ருல் அந்த நம்பிக்கையைச் சுற்றி வேலியடையுங்கள். ஆடுமாடுகள் தளிர்க்குருத்துக்களை கடித்து நாசமாக்கி விடுவதை தடுக்க வேலி அடைக்கிறேம். இங்கும் நாஸ்திகர்—நம்பிக்கையற்றவர்-குதர்க்கவாதிகள் போன்ற நீசர் நாக்குக்கு வேலியடையுங்கள், சிறிய துளிர் வளர்ந்து, கன்ருகி—மரமாகிப்படர்ந்து விட்டால் அதனை ஆரம்பத்தில் அழிக்க முனைந்த அதே ஆடுமாடுகளுக்கு அந்தத் துளிரே ஆதரவான நிழல் கொடுத்து ஆதரிக்கும். மனிதகுலத்துக்கும் நம்பிக்கைகொண்ட உங்களால் என்றும் ஆதரவுண்டாகும்.''

என்று பகவான் கூறிய வாக்குக்களையும் நாம் சிந்திக்கவேண்டும். எதனையும் இலகுவில் நம்பமறுத்த உள்ளம்—பிறர்கேட்டவிடத்தும் பங்குபற்றுதற்கு மறுக்குமனம்—இன்று இவர் ஓர் அவதார புருடர் என்பதை நம்புகின்றது. யார் செயல்?

''தெய்வானுக்கிரக—தெய்வத்தன்மையுடைய அவதார புருடர் யார் என்பதை அறிவதற்குரிய உண்மையான பரிசோதனை—மக்களின் உள்ளத்திலே நம்பிக்கையின் வித்தை ஊன்றுதற்குரிய திறமை —மக்களின் உள்ளத்திலே ஊறிக்கிடக்கும் அவா—வெறுப்பு-பொருமை-பயம் ஆதியவற்றை அழித்து அவர்களை விடுதலைபெறச் செய்யும் திறமை உண்டா என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிவதே'' என ஒரு பெரியார் கூறியிருந்தார். இந் தக்குணம் நிறைந்தவர் பகவான் பாபா என்பதை உணர்ந்த பின்னரே இதனை எழுத மனங்கொண்டோம்.

''மனிதனைக் கடவுளிடம் அழைத்துச் செல்லும் மிகப் பழமையான பாதையைச் செப்பனிடவே யான் வந்தேன். உண்மையான திறமைமிக்க எந்திரவிதியாளராக - மேற் பார்வையாளராக - தொழிலாளராக மாறுங்கள் - என்னு டன் சேருங்கள். நான் குறிப்பிடும் பாதையானது வேதங் கள்—உபநிஷதங்கள்—சாஸ்திரங்கள் தான். அவற்றை உங் களுக்கு எடுத்துக்காட்டவும் அவற்றைப் புதுப்பிக்கவும் நான் வந்துள்ளேன். சமயத்திலும் தெய்வத்திலும் நம்பிக் கையென்னும் விதைகளை உங்கள் உள்ளங்களாய களனி யில் விதைக்க—தர்மத்தை நிலைநாட்டுவதற்காக பிரார்த் தித்த பல்லாயிரம் மக்களது கோரிக்கைகளை நிறைவேற்ற நான் வந்துள்ளேன். நீரினுள் மூழ்கி இறக்கப்போகும் ஒரு வனைக் காப்பாற்ற விரும்புபவன் அந்த நீருள் குதித்தே மூழ்குபவனைக் காப்பாற்ற வேண்டும். மக்களால் அறிந் துணர்ந்து நடப்பதற்கு ஆண்டவனும் மனித உருவில் மக்க ளிடையே தோன்றவே வேண்டும்.''

என்றெல்லாம் எடுத்துரைக்கும் பகவானின் அமுததாரைகள் மக்கள் குலத்தை உய்விக்கும் என்பதைப் பூரணமாக நம்பும் உளப்பாங்கு அமைந்தமையால் இதனைப்படைக்கின்றோம். பக வான் கீதையில் எடுத்துரைத்தாங்கு, பணி செய்வது தான் எங்கடன்.

உலகத்திலுள்ள ஆத்மீக நூல்கள் யாவும் வாழ்வுக்கு வழி காட்டிகளேயன்றி வேறன்று. அவைகள் அந்த எழுத்துக்களின் வலிமை அளவுக்கு மக்களை அழைத்துச்சென்று அவ்வளவுடன் நின்றுவிடும் தன்மையன. உண்மையான அறிவு மக்கள் உள் ளத்திலே பிறக்கவேண்டும். ''கீதை — உபநிஷதம் போன்ற வேதங்களை நீங்கள் படிக்கவேண்டியதில்லை. உங்கள் உள்ளங் களில் இறைவனை அழைத்தீர்களானல் உங்களுக்காக விசேட மாகத் தயாரிக்கப்பட்ட கீதையை நீங்கள் கேட்கலாம்'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் கூறிய அமுதமொழியின் உண்மை உள்ளத்திற் பதிந்துள்ளது.

''ஆண்டவன் எங்களை நேசிப்பது நேசிப்பதற்கும் நேசிக்கப்படுவதற்காகவுமேயன்றி வேறொன்றுக்காகவுமன்று. எல்லாம் உங்கள் உள்ளத்துள்ளேயே இருக்கின்றன. உள்ளம் கூறுவதைக் கேளுங்கள்—அது கூறும் வழியில் நடவுங்கள்'' என்று பகவான் கூறும் வாக்கு உண்மை உணர்ந்தோருக்கு உறுதுணையாவதாகும்.

இச்சிறுபிரசுரம் பகவானைப் பற்றியே அறியாதார்க்கும்—அறிந்தும் தாம் தேடிச்செல்லும் உண்மைக்கு வழிகாட்டும் சக்தியாக இவர் விழங்குகின்றுர் என்பதைத் தெளியவைப்பதற்கும்—தெளிந்து செல்லும் பக்தகோடிகளுக்கு அவர்களுடன் கலந்துறவாடுவதற்கும் விழைந்து வெளியிடப்படுகின்றதெனலாம். அவதாரபுருடர்கள் அற்புதங்களை நிகழ்த்தியமை—இன்று நேற்று மட்டுமல்ல—கீழைத்தேசத்தில் மட்டுமல்ல—உலக நாடுகளில் பல்வேறு காலங்களில், ஐபாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூட நடந்துள்ளன. பண்டு நடந்தவற்றை சிறுவயதில் நாம் படித்த நூல்களில் பரக்கக்கண்டோம். பின்னர், நேற்றுக் கூறியவர்களிடம் கேட்டோம். இன்று அவதாரபுருடர்கள் செய்வதை—சொல்வதைக் கண்டும் கேட்டும் இன்புறுகின்றேம். நாமும் அனுபவித்து—பிறருக்கும் கூறி அறிவு பெறுகின்றேம்; உலகவேத நூல்கள் பகவான் கிருஷ்ணரும் இயேசுபெருமானும் முகம்மது நபியும் புத்தபகவானும் ஆற்றிய அற்புதங்களை எடுத்தியம்புகின்றன.

''உண்மை என்றும் வியப்பானது: அது கற்பனையிலும் பார்க்க அசாதாரணமானது.'' என்று ஒரு ஆங்கிலக் கவிஞன் கூறினன். பிரயாணம் செய்பவன் நீரிலே செல்லும்போது வள்ளம் அவனுக்கு உபயோகப்படுகின்றது. அந்த வள்ளத்தினுள் நீர் புகுதலாகாது. புகுந்தால், அவனின் பிரயாணம் தடைப்படுவதுடன் நீரினுள் மூழ்கவும் நேரும். அதுபோலவே, நாங்களும் இந்த உலகத்திலே இருந்து, வாழ்வாய நாடகத்தில் தாங்கும் பாத்திரத்தை முறைப்படி செய்து முடித்து இறையடியை அடைதல் வேண்டுமேயன்றி. இந்த உலகம் எங்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் புகுந்து தன் திருவிளையாட்டை நடாத்த அனுமதித்தலாகாது. அப்படி உலகம் உள்ளத்திற் புகுந்தால் பற்றவேண்டியவற்றை இழந்தவர்களாகி, மாய்கையில் உழலவேண்டிநேரும். மனிதன் தனது வலக்கரத்தால் இறைவனையும் இடக்கரத்தால் உலகையும் தழுவிவாழ வேண்டும். படிப்படியாக இடக்கரம் நழுவி உலகத்தை விட்டுவிடும். ஆனால், வலக்கரம் அப்படியன்று. அது இறைவனை மேலும் மேலும் இறுகப்பற்றிக் கொள்ளும். தான் பற்றியபற்றை அது விடாது. மனிதன் தன் வலக்கரத்தால் உலகைப்பற்றுவானாயின் அவனுக்கு மீட்சியில்லை என்பதை நம்பலாம். ஆண்டவன் எங்களை நேசிப்பது நேசிப்பதற்கும் நேசிக்கப்படுவதற்குமேயென்பதை மறத்தலாகாது. நாங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றோம். அதற்கு வழிகாட்டியவர் இறைவன், அவர் எங்களை நேசிக்கின்றார். அந்த அன்புக்குப் பாத்திரமாக நாம் மாறவேண்டும்—வாழவேண்டும்—தகுதிபெறவேண்டும்.

## சத்தியம்

''எனக்கும் உனக்கும் அர்ச்ஜுனா, பிறவிகள் பல கழிந்து போயின. அவற்றையெல்லாம் நான் அறிகின்றேன்; பரந்தபா! நீ அவற்றினை அறியமாட்டாய்.''

''நான் பிறப்பற்றவன்; அழிவற்றவன். உயிர்களுக்கெல்லாம் ஈசன்; ஆயினும் எனது பிரகிருதியை வசப்படுத்தி ஆத்ம மாயையினால் அவதரிக்கின்றேன்.

''பாரதா! எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து மறைந்து—மறம் மேலெழுகின்றதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்ளுகின்றேன்.

''நல்லோரைக் காப்பாற்றுதற்கும் அல்லோரைக் கரந்தொடுக்குதற்கும் தர்மத்தை நிலை நாட்டுதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன்.

''அர்ச்சுனா! இங்ஙனம் எனது திவ்வியப் பிறப்பையும் செயலையும் உள்ளபடி அறிபவன உடலை நீத்து மறுபிறப் பெய்துவதில்லை; அவன் என்னையே வந்தடைகின்றான்.

''**ஆசை — அச்சம்**—சினம் நீங்கியவர்களாக **என்மயமாக**—என்னையே அடைக்கலம் புகுந்து, ஞானதபசால் புனிதர்களாக பலர் என் இயல்பை எய்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் என்னை எப்படி வழிபடுகின்றாரோ அவர்களுக்கு நான் அப்படியே அருள் புரிகின்றேன். பார்த்தா! மக்கள் என்றும் என் வழியையே பின்பற்றுகின்றனர்.

"வினைப்பயனை விரும்புகின்றவர்கள் இம்மையில் தேவதைகளைத் தொழுகின்றனர்; ஏனென்றால், வையகத்தில் வினைப்பயன் விரைவில் உண்டாகின்றது.

"குணத்துக்கும் கர்மத்துக்கும் ஏற்ப நான்கு வருணங்களை நான் படைத்தேன்; அதற்குக் கர்த்தா நானெனினும் என்னை அவிகாரி என்றும் அகர்த்தா என்றும் அறிக.

"கர்மங்கள் என்னைத் தீண்டமாட்டா; எனக்குக் கர்ம பலனில் ஆசையில்லை. இங்ஙனம் என்னை அறிபவன் கர்மங்களில் கட்டுண்ணான்."

இவ்வாறு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பாரதயுத்த காலத்தில் — தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கி—கர்மமாயையால் மக்கள் சூழப்பட்டிருந்த காலத்தில் — அம்மாயைத் திரையை அகற்றி, அழித்து மனுக்குலத்தை வாழ்விக்கத் திருவவதாரம் எடுத்த காலத்து — அர்ச்சுனனுக்கு உபதேசித்தார்.

★ ★ ★

"உலகில் தோன்றிய அவதாரங்களெல்லாம் ஒரே ஈசுவரனே. அவன் பிரம்மமாகிய சமுத்திரத்தில் அமிழ்ந்து ஓரிடத்தில் கிளம்பும் போது கிருஷ்ணன் எனவும், இன்னொருதரம் மூழ்கி வேறிடத்தில் கிளம்பும்போது கிறிஸ்து எனவும் அழைக்கப்படுகின்றான்.

"அவதாரபுருடா ஈசுவரனால் அனுப்பப்படும் மனுஷ்ய தூதர் ஆவர். அவர் ஒரு பெரிய சக்கரவர்த்தியின் பிரதிநிதிபோன்றவர். நெடுந்தூரத்துக்கு அப்பாலுள்ள பிரதேசத்தில் கலகம் நிகழும்போது அதனை அடக்குவதற்கு அரசன் தனது பிரதிநிதியை அனுப்புவது போல உலகத்தில் எங்கேயாவது தர்மம் மலினமடைந்து அதர்மம் தலைதூக்குகின்றதோ ஆங்கு தர்மத்தைப் பாதுகாத்து அபிவிருத்திக்குக் கொண்டுவருவதற்காக ஈசுவரன் தனது அவதாரபுருஷனை அனுப்புகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இராமபிரான், சீதாதேவி, கிருஷ்ணர், ராதை இவர்கள் சரித்திரபூர்வமானவர்களல்லர் என்றும் சும்மா உருவகப்படுத்திக் கூறப்பட்டவர்களே யென்றும் இதிகாசங்கள் வெறும் அத்யாத்மிக அர்த்தங்களை மட்டும் உடையனவென்றும் நினைக்காதே. அவர்கள் உன்னைப் போலவே ஊனும் உதிரமும் கொண்ட சரீரத்தை உடையவர்களாக இருந்தனர். ஆனால், அவர்கள் தெய்வீகம் வாய்ந்தவர்களாதலால் அவர்களுடைய வாழ்க்கைகளைச் சரித்திர பூர்வமாகவும் ஆத்மீக உண்மைகளை விளக்குவனவாகவும் கொள்ளலாம். சமுத்திரமும் அதன் அலைகளும்போல பிரம்மமும் அவதாரங்களும் விளங்கும்.

''திவ்விய குணங்களுடனும் திவ்விய சக்திகளுடனும் அவதாரபுருஷர்கள் மண்ணுலகில் அவதரிக்கின்றார்கள் அவர்கள் தாழ்ந்ததிலிருந்து மிகஉயர்ந்த எந்தச்சமாதி நிலையிலும் எளிதில் புகுவார்கள்; திரும்புவார்கள். அரசனது அரண்மனையில் அந்நியர் ஒரு குறிப்பிட்ட எல்லைவரைதான் போக முடியும். ஆனால். அரசனது குழந்தையோ அரண்மனையின் எந்த மூலை முடுக்குக்கும் போய் வரலாம்.

''அவதாரபுருஷர்களை அறிந்து கொள்வது அரிதான காரியமாகும். எல்லையற்ற அகண்ட வஸ்து எல்லைக்குட்பட்ட கண்டத்துள் அடங்கியிருப்பதற்கு அவர்களது வாழ்க்கை ஒப்பாகும்.

''ஸ்ரீ இராமபிரான் இவ்வுலகில் அவதரித்தபோது ஏழு ரிஷிகள் மாத்திரமே அவர் ஈசுவராவதாரம் என்பதைத் தெரிந்துகொண்டிருந்தனர். எனவே, இவ்வுலகில் எப்போது ஈசுவரன் வந்தபோதிலும் சரியே, சிலர் மட்டுமே அவனுடைய தெய்வீக சுபாவத்தைத் தெரிந்து கொள்வர்.

''ஈசுவரன் அநந்தன்; சர்வசக்திமான். அவன் அருள் மயமான தனது தெய்வீக சக்தியை மானிட சரீரத்தில் தோற்றுவித்து, நம்மிடையே ஒரு அவதார புருடனாகத் தோன்றத் திருவுள்ளங் கொள்ளலாம். ஈசுவராவதாரத்தினின்றும் அருள் வெள்ளம் பெருகிப் பக்தர்களை இன்புறுத்துகின்றது. வார்த்தைகளால் இவ்விடயத்தை விளக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. ஞானக்கண்ணுல் தான் இந்த உண்மையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும். இதனை நம்பவேண்டுமானுல், ஈசுவரனை அனுபூதியில் காணவேண்டும். ஆயினும், உவமை மூலமாக இவ்விடயத்தை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். ஒருவன் ஒரு பசுவின் கொம்பு—கால்—வால்—மடி இவைகளில் ஒன்றைத் தொடுவதாக வைத்துக் கொள்வோம். இப்படித் தொடுவது அந்தப்பசுவைத் தொடுவதாகாதா? மானிடர்களான நமக்குப் பசுவினிடத்து முக்கியமானது அதன் மடியிலிருந்து வரும் பாலேயாகும். திவ்வியப்பிரேமையாகின்ற பாலானது நமக்கு ஈசுவராவதாரத்தினிடமிருந்து பெருகுகின்றது.

''ஈசுவரனிடத்து வித்தை, அவித்தை என்னும் இரண்டும் உள்ளன. வித்யா மாயையானது மனிதனை ஈசுவரனிடத்திலே சேர்க்கும். அவித்யா மாயையானது அவனை ஈசுவரனிடத்திலிருந்து புறத்தே போகச் செய்யும். ஞானம்—பக்தி—வைராக்கியம்—பூததயை, இவையெல்லாம் வித்யா மாயையின் தோற்றங்களாகும். இவைகளின் உதவியைக் கொண்டுதான் ஒருவன் ஈசுவரனை அடையமுடியும்.''

உலகுக்கு உத்தமனுய்—உலகுக்கே ஒளியான சைவந்தழைத்தோங்க — மக்கள் குலத்துக்குத் தொண்டுசெய்ய ஸ்ரீமத் சுவாமி விவேகாநந்தரைப் பயிற்றி அளித்த பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது உபதேச மொழிகளில் இவ்வாறு கூறியுள்ளார்.

★ ★ ★

''உங்களுக்கு மனத்திண்மையையும் சந்தோஷத்தையும் அளித்து, பலவீனத்தையும் பயத்தையும் துரத்தி நல்வாழ்வு அளிப்பதே எனது பணியாகும். உங்களை நீங்களே ''பாவிகள்'' என்று தீர்ப்புக் கூறுதீர்கள். நீங்கள் பாவம் என்று எதனைக் கூறுகின்றீர்களோ அது உண்மையில் ஒரு சிறு தவறேயாகும். தீமைவழிச்செல்லாது, நீங்கள் இழைத்த சிறு தவறுக்கும் உண்மையான பரிகாரந் தேடி மனந்திருந்துவீர்களாயின் அது பாபமற்றதாகும் என்பதை மறக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம். நீங்கள் அறியாமை வயப்பட்டுழலும் போது உங்களைக் கவர்ந்து தன்வலைக்குட்படுத்திய பழக்கங்களிலிருந்து நீங்கள் மீழ்வதற்கான மனத்திண்மையினை உங்களுக்கு அருளுமாறு மேலான தலைவனை—இறைவனை அனுதினமும் வேண்டுக—பிரார்த்திக்குக.

''மனச்சஞ்சலம்—ஆசை—அடக்கமற்றதும் அமைதியற்றதுமான மன எழுச்சி ஆதியன உடல் ரோகங்களுக்கு மூல காரணம். மனப்பலவீனம் மட்டுமே பெரிய ரோகத்துக்குக் காரணகர்த்தாவாகிவிடும். அமைதியை நாடுவதே அமைதியின்மைக்கு மூலம். போதுமென்ற மனமே திறனுடைய பொன் செய் மருந்து.

' நல்லவனுக இரு; சந்தோஷத்தை நாடு; திண்மையுடன் வாழு; உண்மையாக நட; குணத்தோடும் பொறுமையோடும் பழகு—நல்லாரோக்கியத்துக்கு இதுவே மருந்து.

''எவரையும் நாஸ்திகனென்ருே அல்லது நம்பிக்கையற்றவனென்ருே அழைப்பதற்கு நான் மறுக்கின்றேன். ஏனென்ருல், எல்லோருமே பெருமானுரால் படைக்கப்பட்டு அவரின் கருணைக்குப்பாத்திரமானவர்களேயாவர். ஒவ்வொருவரது இதயத்திலும் அன்புச்சுனையுண்டு — சத்தியம் நிலைத்திருக்கும். அந்தச்சத்தியமும் — அன்பும் இறைவனே. ஒவ்வொருவரதும் உள்மனத்தே பரிசுத்ததன்மை நிலவுகின்றது சாதிமதங்களாலும் செல்வம் — வறுமையதும் எல்லைகளையெல்லாம் கடந்தவன் — எல்லைகளுக்கும் அப்பாற்பட்டவன் இறைவன். 'ஆண்டவன் இந்தப் பரிசைக் கேட்டான் — அதனைக் கொடுக்காதுவிட்டாற் கோபித்துக் கொள்ளுவான்' என்றெல்லாப் கூறுவது—அதனை நம்புவது மடமையேயாகும்.

''நான் ஆணுமல்ல — பெண்ணுமல்ல; இளமையும் முதுமையுமற்றவன் — நானேயாவுமாய் இருக்கின்றேன். தெய்வீக பேரருள் பெற்று அடைக்கலம் புகுதற்காக ஒழுக்கவரம்புடன் நின்று சாதனைபுரிபவர்களை ஆசீர்வதித்து — அருள்புரிந்து, வழிநடாத்திச் செல்லவே தோன்றியுள்ளேன். என்னைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றவேண்டாம். உங்களுடைய உரிமையென்னும் உணர்வோடு—மனப்பயமேதும் இன்றி என்னிடம் எல்லோரும் வர வேண்டும். உங்கள் தந்தையிடம் எதனையாவது கேட்கும் போது அவரைப் பாராட்டுகின்றீர்களா? தந்தையிடம் கேட்கும் அந்த உரிமையை ஈண்டு கொள்க.

''முதன் முறையாக நீங்கள் இன்றுதான் என்னைக்காணுகின்றீர்கள். ஆனால், யுகயுகாந்திரங்களாக நீங்கள் என் பழைய தொடர்புடையவர்களே. உங்களை நான் நன்கறிவேன். சத்தியத்தின் வழியில்—அன்பின் ஊற்றில்—மனித சமுதாயத்துக்கு ஆத்மீக நெறியில் புனருக்கமளிப்பதே எனது கடமையாகும். என்னை நாடி நீங்கள் ஒரு அடிவைக்கும் போது, உங்களை நாடி நான் மூன்றடிகள் வைக்கின்றேன்.

''பாரித்த பாபச்சுமையுடன்—துக்கத்துடன் எவன்என்னை நாடி வருகின்றானோ அப்பொழுது நான் பேரானந்தமடைகின்றேன். என்னிடமிருக்கும் பொருள் அவனுக்கே மிக மிகத் தேவைப்படுகின்றது.

''தெய்வத்தின் அருட்கருணையானது ஒரு சார்பினருக்கோ — ஒரு வகுப்பினருக்கோ — ஒரு தாத்தினருக்கோ தான் உண்டு என எங்குமே கூறப்பட்டிருக்கவில்லை. துரும்பிலிருந்து மலையீறாக — ஊர்வனவிலிருந்து மனித சமுதாயமீறாக் எல்லோருக்கும் அவ்வருட் கருணைக்கு உரிமையுண்டு ஆண்டவன் அனைத்திலும் — தூணிலும் துரும்பிலும், அகிலத்திலும் — வியாபித்திருக்கின்றான்.

''இருதயசுத்தமும் ஆசை – வெறுப்பு - பொறாமை கோபம்-தாபம் சகலதும் அற்ற மனமும் உடைய பெருமக்கள் மூலமே உலகம் செழிப்பையும் சமாதானத்தையும் அடைய முடியும். நான் அவதார மெடுத்ததன் நோக்கத்தை— நிறைவேற்றும் செயலை இன்னமும் ஆரம்பிக்கவில்லைஇப்பொழுதும் நான் தொடர்பு கொள்ளும் ஆரம்ப நிலைமையிலேயே இருக்கின்றேன். எனது பணியை நான் ஆரம்பித்ததும் உலகு அறியும்-உலகு பயனடையும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பரிசுத்தமான கொண்டாட்டம் நிகழுகின்றது. அதில் பங்குகொள்ள எல்லோரும் வந்துள்ளனர். பலர் தங்கள் துன்பச் சுமையை இறக்கிவைக்கும் ஆவலுடன் வந்துள்ளனர். பலர் தங்கள் உடல் உபாதையையோ மனஉழைச்சலையோ தீர்ப்பதற்காகப் பிரார்த்திக்கின்றனர். சிலர் வறுமையினுல் நலினமடைந்துள்ளனர். எல்லோரும் நிவாரணம் பெறவே துடிக்கின்றனர். அவர்களது துக்கத்தை - துன்பத்தை-மன அமைதியின்மையைப் போக்குவதே எனது வேலையாகும். எல்லா நோய்களையும் குணமாக்குபவன் நாராயணனே. வேதங்கள் கூறுவதும் அதுவே. ஆகவே, அந்தவேலைகளை நான் செய்கின்றேன்.

''பிறப்பற்ற நிலையை அடைவதற்கு—யாகாதி கருமங்களை ஆற்றுவதல்ல—பிறப்பினுல் அடைவதல்ல—பணத்தினுல் அடைவதல்ல - தியாகங்களாலும் பற்றற்ற நிலையாலுமே அதனை அடையலாம். தியாகம் புரிவதற்கானமுதற்படி சேவை. மனித சமுதாயம் கைகடக்க விட்ட கொள்கைகளைக் கடைப்பிடிக்கச் செய்வதற்கு ஆண்டவனே மானிட உருவெடுத்து வந்து மக்களுக்குச் சேவை செய்கின்ருன். மனிதன் மனிதனுக்குச் சேவை செய்யும்போது ஆண்டவன் எவ்வளவு சந்தோஷமடைவான் என்பதைச் சிந்தியுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் சேவையைச்சீராகச் செய்யுங்கள்- மக்கட் குலத்துக்கு மட்டுமன்றி சகல சீவராசிகளுக்கும் சேவை புரியுங்கள். நான் எப்பொழுதும் உங்களுடனேயே இருப்பேன்.

''வாழ்க்கை குறுகியது; எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் வாழ்வு முடிவுறலாம். உடல் வீழ்ந்து—முன்னறிக்கை யின்றி ஆத்மா உங்களை விடுதலை செய்யலாம். உங்களுக்கு வாழ்வு அளித்தவனுக்கு உங்கள் இதயத்தைத் தத்தம் செய்யுங்கள்.

''ஒருவன் தவறிழைக்கின்ருன். அப்பொழுது யார் தவறிழைத்தது? அத்தவறைச் செய்வதற்குத் தூண்டியது யாது? அந்த உடல் செய்தது. அந்த உடல் அதனைச் செய்வதற்குத் தூண்டியது எது? உள்ளந் தூண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் உள்ளந் தூண்டியது? ஏன் அதனைச் செய்யும்படி கட்டாயப்படுத்தப் பட்டான்? கடந்த காலங்களில் எடுத்த பிறவிகளிலும் அவன் இழைத்த கர்மாவின் செல்வாக்கு அவனைத் தூண்டியது. அவனிடத் திருந்த ஆத்மா ஆசையற்றது. அது எச்செயலுக்கும் எக்கருமத்துக்கும் தொடர்பற்றது. ஆத்மா தெய்வீகமானது, அதனை நேசியுங்கள்- அதனைப் போற்றுங்கள். ஒரு ஜென்ம விரோதியெனக் கருதுபவர் வீட்டு வாயிலை நீங்கள் கடத்து செல்லும் போது சுவாமியின் படம் அழகாக வைக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றீர்கள். எதிரியின் வீடாயிற்றேயென்று சுவாமியை வணங்காது போகின்றீர்களா? இல்லை. சுவாமியை வணங்கியே செல்கின்றீர்கள். படம் எங்கிருந்தாலும் அதனைப் போற்றுகின்றீர்கள். அது போலவே ஒவ்வொருவரிடத்துமுள்ள ஆத்மாவை நேசியுங்கள் — போற்றுங்கள். ஆண்டவனே ஒவ்வொருவரிடத்தும் குடி கொண்டிருக்கின்றான்.

''நான் பிரேமையே யென்பதை அறிவீர்கள். பிரேமையின் மூலமாகத் தரும் ஒரே பொருள் ஆநந்தம். எல்லோருக்கும் ஆறுதலையும் திண்மையையும் சாந்தியையும் அருளுவதே எனது செயல். எனது குணங்கள் பண்டு தொட்டு உண்மையானவை. நான் குடியிருக்கும் தோற்றமே புதியது. எனது விருப்பம்—அதனை வார்த்தைகளில் எடுத்தோதுவதானால் — 'மேலும் மேலும் என்னை நேசியுங்கள்; என்னைத்தேடுங்கள்; உங்கள் மத்தியில் நான் இந்த அவதாரத்தினை எடுத்து வந்துள்ளதன் மூலமே அதனை அடையச் செய்யமுடியும்.

''சத்தியமே நீதியின் உச்சம், சமாதானத்திற்குரிய ஒரே வழி அன்புதான். பரிசுத்த இதயங்களில் நிறைந்த ஞான வழியான தர்மமார்க்கம் முட்புதர்களாலும் செடி கொடிகளாலும் கல்மண்களாலும் மறைப்புண்டு வரும்போதும்— அம்மார்க்கத்தின் கண் அமையப்பெற்ற மதகுகளும் பாலங்களும் பிரயாணச் சுகத்திற்கு ஆபத்தை உண்டாக்கக்கூடிய நிலையெய்தும் போதும் அம்மார்க்கத்தை ஆக்கித் தந்த ஞான ஒளியான இறைவனே அந்தப்பாதையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பனிட வேண்டியுள்ளது. இன்றுள்ள காலம் அத்தகைய செப்பனிடப்படவேண்டிய போதாகும். தர்மமார்க்கம் செப்பனிடப்பட்டு புனரமைக்கப்படவேண்டியிருக்கின்றது. அந்த நோக்கோடேயே இந்த அவதாரம் மேற்கொள்ளப் பட்டது''

உலகிலே தர்மம் குன்றி அதர்மம் மேலோங்குங்காலங் களில் எல்லாம் அவதாரபுருடர்கள் தோன்றி மக்களைத் தர்ம நெறிவழிப்படி நடாத்திச் சென்றுள்ளனர். அந்தப்புனித பரம் பரையின் வழியிலே — பாரத புண்ணிய பூமியின் பாரம்பரியப் படி ஆத்மீக ஒளிவிசி, மக்களுக்கு வித்தை — அவித்தை இன்ன தென விளங்கவைதது, அறிவொளியூட்டி, ஆத்மீக நெறிப் படுத்திய வாழ்வுக்கு அழைத்துச் செல்ல புட்டபர்த்தித்திருப் பதியில் திருக்கோலம் கொண்டுள்ள பகவான் ஸ்ரீசத்நியசாயி பாபா இவ்வாறு அருளுகின்றார்.

இந்நிலவுலகின் கண் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மகான்கள் தோன்றுவார்களென்றும் அவர்கள் தர்மத்தை நிலை நாட்டுவார்களென்றும் ஆன்றோர் கூறியாங்கு காலத்துக்குக் காலம் பலரும் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தியுளர். அவர் களில் பகவான் புத்தர் — இயேசு பெருமான் — நபிகள் நாயகம் போன்றோர் மக்களுக்குப் போதித்த போதனைகள் மாட்சிமிக் கவை. மற்றும் பாரத புண்ணிய பூமியில் ஸ்ரீ ஆதிசங்கரர் — ஸ்ரீ இராமானுஜர் — சமயகுரவர்கள் நால்வர் (அப்பர், சுந்தரர், சம்பந்தர், வாசகர்) — ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சர் — ஸ்ரீ விவே கானந்தசுவாமிகள் — ஸ்ரீ சிவாநந்தர் — வள்ளலார் — வள்ளுவர் — ஸ்ரீரமண மகரிஷி — இப்படியாகத் தூயோர் பலர் தோன்றி மக் கள் குலம் மாண்புடன் வாழும் செம்மை நெறிகளைக் காலத் துக்குக் காலம் புகட்டிவந்துளர். இம்மகான்கள் வழியிலே தோன்றிமறைந்த பகவான் ஸ்ரீசிரடி சாயிபாபாவிற்குப் பின்னர் சிவசக்திரூபாவதாரமாக பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா தோன்றி யுள்ளார். அவா அருளும் உபதேசங்கள் அமிர்ததாரைகள். பகவானது அருளுபதேசங்கள் சிலவற்றுடன் பிறநூல்கள் வாயி லாகவும் சென்று — கண்டறிந்து வந்த பக்தர்கள் வாயிலாகவும் கிடைத்த ஒளிச் சிதறல்களைக் கொண்டு இவ்வவதார புருடரின் வாழ்வையும் தொகுத்து இச்சிறுபிரசுரமாக மக்கள் முன் படைக்கின்றோம். குற்றங்களைந்து குணங்கொள்க.

ஓம் ஸ்ரீ சத்ய சாயிபாபா நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணபதி

கஜமுக கஜமுக கண நாதா
சுரமுனி வந்தித குண நீதா —(கஜமுக)

★ ★

கஜவதனு கண நாதா
கௌரீஸ்வர தனய குணுலய
வித்யா தாயக வுத்திப்ர தாயக
சித்தி விநாயக ஹே சுப தாயக —(கஜவதனு)

★ ★

கணேசா சரணம் சரணம் கணேசா!
சாயீசா சரணம் சரணம் சாயீசா! —(கணேசா)

★ ★

விநாயகா விக்ன விநாயகா!
அனுத ரக்ஷக ஆநந்த தாயகா!
உமா மகேஸ்வர ஹே சிவ நந்தன —(விநாயகா)

★ ★

விநாயகா விநாயகா விக்ன விஞசக விநாயகா
விநாயகா விநாயகா விக்ன வித்வம்சக விநாயகா

★ ★

ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச பாஹிமாம்
ஜெயகணேச ஜெயகணேச ஜெயகணேச ரக்ஷமாம்
—(ஸ்ரீ கணேச)

# ஸ்ரீ சிவம்

அரஹர சிவசிவ அம்பலவாணு
சிவ சிவ ஜெயஜெய சிதம்பரேசா —(அரஹர)

★ ★

ஆத்மலிங்கம் பஜோரே! — பரம்
ஆத்மலிங்கம் பஜோரே!
ஆத்மலிங்கம் பஜோரே! — அதி
அற்புதலிங்கம் பஜோரே!
நாகலிங்கம் — நவமணிலிங்கம்
நாபிகமல — உத்பவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரலிங்கம் பஜோரே! — சாயி
ஈஸ்வரலிங்கம் பஜோரே! — பார்த்தி
ஈஸ்வரலிங்கம் பஜோரே!
மாணிக்கலிங்கம் — மரகதலிங்கம்
மாயாவதார — மகேஸ்வரலிங்கம் —(ஆத்ம)

★ ★

ஓம் சிவாய ஓம் சிவாய சம்போசங்கர ஓம் சிவாய
சம்போசங்கர ஓம் சிவாய சம்போசங்கர ஓம் சிவாய
—(ஓம் சிவாய)

★ ★

சம்போ சங்கர சாயீசா
சாம்ப சதாசிவ கௌரீசா
கங்கா ஜடாதர சசிதர சுந்தர
நிருத்ய லோல கைலாச நிவாச —(சம்போ)

★ ★

சம்போ சங்கர சாயீசா சாம்பசதாசிவ கௌரீசா
சம்போ சங்கர கௌரீசா சாம்ப சதாசிவ விஸ்வேசா
சம்போ சங்கர சதாசிவா சம்போ மகாதேவ சந்திரசூடா
சரணம் பவமே சர்வேசா-சற்குரு ஸ்ரீசத்யசாயீசா (சம்போ)

## ஸ்ரீ சக்தி

ஸ்ரீமாதா ஜெகன்மாதா ஸாயிமாதா கௌரிமாதா
நாரணிமாதா பரிபூரணிமாதா ஜெகதாரணிமாதா
பவஹாரிணிமாதா —(ஸ்ரீமாதா)

★ ★

ஜெகதீஸ்வரி ஜெகந்மாதா பவானி!
காருண்ய லாவண்ய அகிலாண்டேஸ்வரி! —(ஜெக)
ஹேசிவ சங்கரி திரிலோக பாலினி!
சரணாக தாம்பரி பாலினி மாதா! —(ஜெக)

★ ★

ஜெய் ஜெய் ஜெய் — தேவி ஜெகதம்பா!
சங்கட ஹரணி மங்கள ஹரணி —(ஜெய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசக்தி - விஞ்ஞானமயி! பிரேமமயி கல்யாணமயி!
சுபதே மாதா - சுபதேமாதா - தேவி ஜெகன்மாதா!
—(ஜெய்)

★ ★

ஜெய ஜெய தேவி கிரிஜா மாதா
ஜெய ஜெக தம்பே ப்ரணவஸ் ரூபிணி
அஷ்ட பூஜாம்சித அகில காரணி!
ஜெய யோகீஸ்வர ஹ்ருதய நிவாசினி —(ஜெய)

★ ★

ஜெய ஜெய தேவி தயாபரி!
ஜனனி சரஸ்வதி பாலயமாம்!
அமலே கமலாசன ஸகிதே!
அற்புத சரிதே பாலயமாம்! —(ஜெய)

## ஸ்ரீ முருகன்

சரவணபவகுக ஓம்முருகா இருவினைகெட வரமருள்முருகா
பர்த்திபுரவாசா சாயிமுருகா சிவமுருகா ஹரஹர
முருகா —(சரவண)

★ ★

சிவசரவணபவ சண்முக ஓம் சிவசரவணபவ சண்முக ஓம்
குருசரவணபவ சண்முக ஓம் குருசரவணபவ சண்முக ஓம்
கதிர்வடிவேலா சண்முக ஓம் கதிர்வடிவேலா சண்முக ஓம்
சுப்ர மண்யா சண்முக ஓம் சுப்ரமண்யா சண்முக ஓம்
ஸ்ரீ சாயீசா சண்முக ஓம் ஸ்ரீ சாயீசா சண்முக ஓம்
—(சிவசரவணபவ)

★ ★

முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவே லரசே சரணம் சரணம்
மயிலூரர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா நாதா சரணம் சரணம்
சாயி நாதா சரணம் சரணம்
சாயி ராமா சரணம் சரணம் —(முடியா)

★ ★

வேல் வேல் வேல் வேல் சக்திவேல் வேல் வேல்
ஆறுபடை வீடுகொண்ட ஆநந்த வேல் வேல் வேல்
குன்றுதோறும் குமரா வடிவேல் வேல் வேல்
ஞானவேல் சக்திவேல் ஞானவேல் சக்திவேல்
கந்தவேல் தங்கவேல் —(வேல்வேல்)

★ ★

கந்தா முருகா கருணாகரனே கார்த்திகேயா
கந்தா முருகா கருணாகரனே கார்த்திகேய கலியுகவரதா
—(கந்தா)

★ ★

## ஸ்ரீ குரு

குருநாதா குருநாதா சற்குருநாதா சாயிநாதா
சச்சிதானந்தா குருநாதா சத்யசாயீசா சாயிநாதா (குரு)

குருபகவான் ஸாயிராம்
ஸற்குரு நாதா ஸ்ரீ பகவான்
தயமயா தீன தயாளோ
சின்மய ரூபா ஸாயி பகவான்
ஸத்ய ஸ்வரூபா ஸாயி பகவான்
பர்த்தி புரீஸா ஸாயி பகவான்
நித்யலோல ஸ்ரீஸாயி பகவான் (குருபகவான்)

★ ★

சற்குரு நாதனே வா வா வா
சச்சிதா நந்தனே வா வா வா
சர்வ தயாளனே வா வா வா
சத்ய சாயி நாதனே வா வா வா (சற்குரு)

★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்யம் ஞானம் ஆநந்தம் பிரம்மம்
சத்யம் ஞானம் ஆநந்தம் பிரம்மம்
சத்யம் ஞானம் ஆநந்தம் பிரம்மம் (சத்யம்)

★ ★

சச்சிதானந்த பிரம்மம் சுத்த சைதன்ய பிரம்மம்
பரஞ்சோதி பரப்பிரம்மம் பராத்பரா ஸாயி
பிரம்மம் (சத்யம்)

★ ★

## பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாஜீ

ஆநந்தமே சாயிநாமமே அற்புதமே சாயி கீதமே
அகண்டமே ஜோதிர்மயமே சுந்தரமே சாயிரூபமே
— (ஆனந்தமே)

★ ★

சாயி நாராயண நாராயண சத்ய நாராயண நாராயண
கான்லோலப்ரபு நாராயண தீனபாலஜெய நாராயண
— (சாயி)

★ ★

சாயிராமா-ரகுராமா! ராஜாராமா— கணஸ்யாமா!
ராமாராமா-பாவனராமா கருணாசிந்தோசத்ய சாயிராமா
— (சாயிராமா)

★ ★

மாதான்ன பூர்ணேஸ்வரி — ஸ்ரீ பர்த்திபுரி ஈஸ்வரி!
ஆதார லோகேஸ்வரி—சாயி அபார க்ருபாகரி!
— மாதா)

★ ★

நாராயணா நாராயணா நாராயணா பஜமன நாராயணா!
சத்ய நாராயணா! பாபா நாராயணா! சாயி நாராயணா!
— (நாராயணா)

★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா
# அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ சத்ய சாயிபாபாய நம:
ஓம் ஸ்ரீ சத்ய ஸ்வரூபாய நம;
ஓம் ஸ்ரீ சத்ய தர்ம பராயணய நம:
ஓம் ஸ்ரீ வரதாய நம:
ஓம் ஸ்ரீ சத்புருஷாய நம:
ஓம் ஸ்ரீ சத்ய குணாத்மனே நம:
ஓம் ஸ்ரீ சாது வர்தனய நம:
ஓம் ஸ்ரீ சாது ஜன போஷணய நம;
ஓம் ஸ்ரீ சர்வக்ஞாய நம; 9
ஓம் ஸ்ரீ சர்வ ஜனப் பிரியாய நம:
ஓம் ஸ்ரீ சர்வ சக்தி மூர்த்தயே நம;
ஓம் ஸ்ரீ சர்வேசாய நம:
ஓம் ஸ்ரீ சர்வ சங்க பரித்யாகினே நம:
ஓம் ஸ்ரீ சர்வாந்தர் யாமினே நம:
ஓம் ஸ்ரீ மஹி மசாத்மனே நம;
ஓம் ஸ்ரீ மஹேஸ்வர ஸ்வரூபாய நம
ஓம் ஸ்ரீ பர்திகிராம மோத்பவாய நம:
ஓம் ஸ்ரீ பர்த்திக்ஷேத்திர நிவாசினே நம் 18
ஓம் ஸ்ரீ யசஃகாய ஷிர்டி வாசினே நம;
ஓம் ஸ்ரீ ஜோடி ஆதி பஸ்வி சோமப்பாய நம:
ஓம் ஸ்ரீ பாரத்வாஜ ரிஷிகோத்ராய நம:
ஓம் ஸ்ரீ பக்த வத்சலாய நம;
ஓம் ஸ்ரீ அபாந்த ராத்மனே நம;
ஓம் ஸ்ரீ அவதார மூர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ சர்வபய நிவாரிணே நம:
ஓம் ஸ்ரீ ஆபஸ்தம்ப சூத்ராய நம: 27
ஓம் ஸ்ரீ அபயப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ ரத்னகர வம்சோத்பவாய நம:
ஓம் ஸ்ரீ ஷிர்டி சாயிஅபேத சக்தியவதாராய நம:
ஓம் ஸ்ரீ சங்கராய நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ஷிர்டி சாயி மூர்த்தயே நம;
ஓம் ஸ்ரீ துவாரகாமாயி வாசினே நம:
ஓம் ஸ்ரீ சித்ராவதீ தடபுட்டப்பர்த்தி விஹாரிணே நம:
ஓம் ஸ்ரீ சக்தி ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ சரணாகத த்ராணாய நம;
ஓம் ஸ்ரீ ஆநந்த தாய நம: 36
ஓம் ஸ்ரீ ஆநந்தாய நம:
ஓம் ஸ்ரீ ஆர்த்தத்ராண பராயணாய நம:
ஓம் ஸ்ரீ அனாத நாதாய நம:
ஓம் ஸ்ரீ அஸஹாய சஹாயாய நம:
ஓம் ஸ்ரீ லோக பாந்தவாய நம:
ஓம் ஸ்ரீ லோகரக்ஷாபராயணாய நம:
ஓம் ஸ்ரீ லோகாநாதாய நம:
ஓம் ஸ்ரீ தீனஜன போஷணாய நம:
ஓம் ஸ்ரீ மூர்த்தித்ரயஸ்வரூபாய நம: 45
ஓம் ஸ்ரீ பர்தி க்ஷேத்திர நிவாசினே நம:
ஓம் ஸ்ரீ முக்திப் ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ கலுஷ விதூராய நம:
ஓம் ஸ்ரீ கருணா கராய நம:
ஓம் ஸ்ரீ சர்வா தாராய நம:
ஓம் ஸ்ரீ சர்வஹ்ருத் வாசினே நம:
ஓம் ஸ்ரீ புண்யபல ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ சர்வபாப க்ஷயகராய நம:
ஓம் ஸ்ரீ சர்வரோக நிவாரிணே நம:
ஓம் ஸ்ரீ சர்வபாத ஹராய நம; 54
ஓம் ஸ்ரீ அநந்த நுதகர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ ஆதி புருஷாய நம:
ஓம் ஸ்ரீ ஆதி சக்தியே நம:
ஓம் ஸ்ரீ சுபரூப சக்தினே நம:
ஓம் ஸ்ரீ அவ்யக்த ரூபிணே நம:
ஓம் ஸ்ரீ காமக் ரோதத்வ ஷிணே நம:
ஓம் ஸ்ரீ கனகாம்பர தாரிணே நம:
ஓம் ஸ்ரீ அற்புத சர்யாய நம:
ஓம் ஸ்ரீ ஆபத் பாந்தவாய நம: 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ப்ரேமாத்மனே நம:
ஓம் ஸ்ரீ ப்ரேம மூர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ ப்ரேம ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ ப்ரியாய நம:
ஓம் ஸ்ரீ பக்தப்ரியாய நம:
ஓம் ஸ்ரீ பக்த மந்தாராய நம:
ஓம் ஸ்ரீ பக்த ஜனஹ்ருதய விஹாராய நம:
ஓம் ஸ்ரீ பக்த ஜனஹ்ருதாலயாய நம:
ஓம் ஸ்ரீ பக்த பராதீனாய நம: 72
ஓம் ஸ்ரீ பக்தி ஞானப்ர தீபாய நம:
ஓம் ஸ்ரீ பக்தி ஞானப்ர தாய நம:
ஓம் ஸ்ரீ ஸுஜ்ஞான மார்க்க தர்சகாய நம:
ஓம் ஸ்ரீ ஞானஸ்வ ரூபாய நம:
ஓம் ஸ்ரீ கீதா போதகாய நம:
ஓம் ஸ்ரீ ஞான ஸித்திதாய நம:
ஓம் ஸ்ரீ ஸுந்தர ரூபாய நம:
ஓம் ஸ்ரீ புண்ய புருஷாய நம:
ஓம் ஸ்ரீ பலப்ர தாய நம: 81
ஓம் ஸ்ரீ புருஷோத்தமாய நம:
ஓம் ஸ்ரீ புராண புருஷாய நம;
ஓம் ஸ்ரீ அதீதாய நம:
ஓம் ஸ்ரீ காலா தீதாய நம:
ஓம் ஸ்ரீ ஸித்திரூபாய நம:
ஓம் ஸ்ரீ ஸித்த ஸங்கல்பாய நம:
ஓம் ஸ்ரீ ஆரோக்யப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ அன்ன வஸ்திர தாய நம:
ஓம் ஸ்ரீ ஸம்ஸாரதுக்க க்ஷயகராய நம: 90
ஓம் ஸ்ரீ ஸர்வாபீஷ்ட ப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ கல்யாண குணாய நம:
ஓம் ஸ்ரீ கர்மத்வம்ஸினே நம:
ஓம் ஸ்ரீ ஸாதுமானஸ சோபிதாய நம:
ஓம் ஸ்ரீ ஸர்வமத ஸம்மதாய நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாதுமானச பரிசோதகாய நம:
ஓம் ஸ்ரீ சாது கானுக்ரஹவடவ்ருக்ஷப்ரதிஷ்டா
பகாய நம:

ஓம் ஸ்ரீ சகலசம்சய ஹராய நம:
ஓம் ஸ்ரீ சகல தத்வ போதகாய நம: 99
ஓம் ஸ்ரீ யோகீஸ் வராய நம:
ஓம் ஸ்ரீ யோகீந்த்ர வந்திதாய நம:
ஓம் ஸ்ரீ சர்வமங்கள கராய நம:
ஓம் ஸ்ரீ சர்வசித்தி ப்ரதாய நம;
ஓம் ஸ்ரீ ஆபன் நிவாரிணே நம:
ஓம் ஸ்ரீ ஆர்த்தி ஹராய நம:
ஓம் ஸ்ரீ சாந்த மூர்த்தயே நம:
ஓம் ஸ்ரீ சுலபப்ரசன்னய நம:
ஓம் ஸ்ரீ பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாய நம: 108

மங்களம் — மங்களம்
மங்களம் !

## மங்களம்.

அப்பனுக்கும் அம்மைக்கும் அத்துவித வஸ்துவுக்கும் மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கும் உத்தம பக்தருக்கும் மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கும் மூவாசை வென்றோர்க்கும்
மங்களம்

முப்பத்து முக்கோடி தேவர்க்கும் முனிவர்க்கும் இருடிகட்கும்
மங்களம்

தன்னைத்தன்னை லறிந்தவர்க்கும் தானமிட்டு வாழ்ந்தவர்க்கும்
மங்களம்

ஆதியந்தமில்லாத ஆத்மாவுக்கும் அத்தனுக்கும் அத்தைக்கும்
மங்களம்

எங்கும் தங்கும் உயிர்களுக்கும் மங்களம்.

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு அவதாரம்

தென்னிந்தியாவில், தர்மாவரத்திலிருந்து பதினெட்டு மைல் தூரத்தில், பெங்களூர் பிராந்தியத்திலே புட்டபர்த்தி என்னும் திருத்தலம் அமைந்துள்ளது. தர்மங் குன்றி — அதர்மம் மேலோங்கும் காலத்தில் மக்களுக்கு அருட்கருணை பொழிவதற்காக அவதாரம் செய்த மகாபுருடர்கள் வரிசையில் பகவான் ஸ்ரீ சீரடிசாயிபாபாவின் அவதாரமாக, அப்பெருமானார் சமாதியடைந்த எட்டாண்டுகளின் பின்னர் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தோன்றினார். ஸ்ரீ சீரடிசாயிபாபா 1918-ல் சமாதியானார். ஆண்டவன் மனித உருவிலே, மக்கள் குலத்தை ஈடேற்றுவதற்கு, அவர்களில் ஒருவராக இருந்து அருள்மழை பொழிவதைக் கடமையாகக் கொண்டு 1926ம் ஆண்டு நவம்பர்மாதம் 23-ந்தேதி செவ்வாய்க்கிழமை அதிகாலையில்—சூரிய உதயத்தின் போது புட்டபர்த்தித் திருப்பதியில் திருவவதாரம் செய்தார்.

அக்ஷய வருடம் கார்த்திகைத் திங்கள் ஏழாம் நாள் திங்கட்கிழமை இரவுமுடிந்து எட்டாம் நாள் செவ்வாய்க்கிழமை உதயமாகும் வேளையில் அக்கிராமத்துமக்கள் சிவனது திருநாம பஜனைகளைப்பாட, ஆலயமணிகள் இனிமையான உதயகால

| | | | |
|---|---|---|---|
| 6 | செவ் | 8 | சந் இராகு |
| 5 | கிரக நிலை | | 10 |
| வியா | | | 11 |
| கேது | வெள் சூரி சனி | இல புதன் | 12 |

| | | | |
|---|---|---|---|
| சந். | புதன் | இலக் | 2 |
| இராகு | அம்சநிலை | | சனி |
| 9 | | | கேது |
| 8 | 7 | 6 | வியா வெள் செவ் சனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசையை எழுப்ப, சிவனுக்குரிய திருவாதிரை நட்சத்திரத்திலே துலாம் இலக்கினத்திலே, மக்கள்குலம் உய்வதற்குரிய ஆத்மீக வழிகாட்டியான ஸ்ரீ சத்யசாயிபாபா—ஸ்ரீ கோண்டமராஜுவின் மூத்தமகனை ஸ்ரீ பெத்தவேங்கப்பாவுக்கும் ஸ்ரீ சுப்பராஜுவின் மகளான ஈஸ்வரம்மாவுக்கும் நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். இவரது ஜாதக விசேடத்தை, கணித்தவர் போற்றினர்.

இச்சாதகத்தின்படி இவரது ஆத்மீகத்தன்மை நன்கு புலப்படுகின்றது நீதியின் கோலாக விளங்கும் துலாம் இராசியை இலக்கினமாகக் கொண்டவர் அறிவியக்கத்தின்—ஞானநிலையின்வழி அமைந்தவராவர். குணப்பண்பும்— அறிவுநுட்பமும் நிறைந்தவராகவும் சமநீதி—சமதர்மம்—பொதுநியாயம்—பட்சபாதமற்ற நிலையுடையவராகவும் அமைந்தவர். தீர்க்கதரிசன ஞானமும் உண்டென்பதைக் கோள்கள் சுட்டுகின்றன. துலாத்தின் தலைவன் வெள்ளியானதால் சந்தோஷமான வாழ்வும் அலங்கார அணிகளில் விருப்பும் இருக்கும். ஏழாம் வீடு செவ்வாயின் இல்லமான மேடமாக இருப்பதால் தன் சொந்த நலங்களிலும் பொதுநலன்களையே பெரிதெனமதித்துப் பிறருக்காக—பிறர் நலன்கருதி செயலாற்றும் பண்பும் இருக்கும். ஆத்மீகவழியில் உயர்தானத்தை அடையக்கூடிய மகாபுருஷருக்குரிய ஜாதகமாக இது அமைகின்றதெனலாம்.

இவருக்கு குழந்தையில் சூட்டப்பெற்ற பெயர் சத்யநாராயணன் என்பதாகும். இவரது தாயாரான ஈஸ்வரம்மா செய்த சத்யநாராயண பூசையின் பலனாக இவர் பிறந்தமையால் இவருக்கு இப்பெயர் சூட்டப்பட்டதென்பர். ஸ்ரீ சேஷமராஜு என்னும் மூத்தசகோதரரும் வெங்கம்மா, பர்வதம்மா என்னும் இரு மூத்த சகோதரிகளும் இவருக்குளர். இவர் பிறந்தகாலையில் அக்கிராமத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும் இவர் குடும்பத்திலிருந்த தம்புராவிலிருந்து இனியநாதம் கேட்டுக்கொண்டிருந்ததாகவும் மத்தளம் தானாக ஒலித்ததாகவும் கூறுவர். ஈஸ்வரம்மாவுக்கு குழந்தைப்பேறு சமீபிக்கும்போது அவரது மாமியார் லக்ஷ்ம்மா சத்யநாராயணபூசை செய்வதற்காகக் குருவின் வீட்டுக்குச் சென்றிருந்தாரென்றும் அங்கு அவர் பூசைகளை முடித்துக்கொண்டு திரும்பிவந்து பிரசாதங்களையும் தீர்த்

தத்தையும் மருமகளுக்குக் கொடுத்து ஆசீர்வதித்தபின் குழந்தை பிறந்ததென்றும் கூறுவர். புட்டபர்த்தி கிராமம் பகவானின் ஜனனத்தால் மட்டுமன்றி அவரது வாசஸ்தலமாக அமைந்த தினலும் மகிமையையடைந்துள்ளது.

புட்டபர்த்தியிலுள்ள மக்கள் எல்லோருக்கும் செல்வக் குழந்தையாக ஸ்ரீ சத்யநாராயணன் விளங்கினர். அக்கிராமத்து மக்கள் போட்டிபோட்டுக்கொண்டு இக்குழந்தையைப் பாராட்டி மகிழ்ந்தனர். தமது கவர்ச்சிகரமான புன்னகையால் எல்லோரையும் தம்பால் ஈர்த்துக்கொண்டார். ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு கிராமத்து மக்கள் பெத்தவேங் கப்பராஜுவின் வீட்டுக்கு அடிக்கடி விஜயம் செய்துகொண்டு இருந்தனரென்றும் குழந்தையைத் தரிசிப்பதே அவர்கள் விருப் பமென்றும் கூறுவர். குழந்தையாக இருக்கும்போதே நெற்றி நிறைய விபூதியும் குங்குமப்பொட்டும் அணிந்துகொள்வதில் நாட்டம் காட்டினர். மாமிசபோசனத்தை அறவே விலக்கினர். சிறுகுழந்தையாக இருக்கும்போது முதலே ஆடு மாடுகள் பன்றிகள் அல்லது கோழிகள் துன்புறுத்தப்படுவதைக் காணச் சகிக்கமாட்டார். இவற்றைப்பிறர் துன்புறுத்தி வதைப்பதை அல்லது கொலைசெய்வதைப் பார்க்கச் சகிக்காது தூரவிலகி விடுவார். மாமிசம் சமைக்கப்படும் குசினிகளுக்குக் கிட்டவும் அண்டமாட்டார். இறைச்சி சமைக்கும் பாத்திரங்களையும் தொடமாட்டார். இளமைமுதல் ஜீவகாருண்யம் நிறைந்தவராக விளங்கினர். தமது வீட்டில் மாமிச உணவுகள் தயாரிக்கப்பட்டால் ஆங்கு உணவு கொள்ள மறுத்துவிடுவார். அக் காலங்களில் அயலிலிருந்த பிராமணரான கணக்காளர் (கர்ணம்) ஒருவரது வீட்டுக்குச் சென்று அவ்வீட்டுத் தலைவியான சுப்பம்மா என்பவரிடம் உணவு ஏற்று உண்பார். தம்முடன் ஒத்தவயதினரான விளையாட்டுத்தோழர் இவரைக் கடுமையாகத் தாக்கினலும் இவர் எதிர்த்து அவர்களைத் தாக்கும் குணமற்றவராக - காருண்யம் நிறைந்தவராக சிறுவயது முதலே இருந்து வந்தார்.

உண்மைக்கு முதலிடம் கொடுத்தும் உயிர்காத்தும் வந்த பண்பு இளமை முதலே இவரிடம் குடிகொண்டிருந்தது. இவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் தோழர்கள் இவரை ''பிராமணப்பிள்ளை'' என்றும் செல்லப்பெயரிட்டு அழைப்பர். மூன்று நான்கு வயதுப் பாலகனாக இருக்கும்போதே ஏழைகளைக் கண்டு இரங்கும் தன்மையராக இருந்தார். பிச்சை எடுக்க வருவோருக்கு ஏதாவது கொடுத்தனுப்புமாறு சகோதரிகளையோ குடும்பத்திலுள்ள பெரியோரையோ வற்புறுத்துவது இவரது வழக்கமாகும். குருடருக்கு வழிகாட்டியாகவும் பிச்சைக்காரருக்கு ஆபத்துச்சகாயனாகவும் விளங்கினார். கிராமத்துக் குழந்தைகள் இவரை தமது குருவாக, வழிகாட்டியாகக் கொண்டனர். தான் பசியோடிருப்பினும் வந்த பிச்சைக்காரருக்கு தனது உணவையே கொடுத்துவிடுவார். பல நாட்களுக்கு வீட்டில் உணவு கொள்ளாதும் இருப்பார். இவரில் பசியின் வாட்டமே தெரியமாட்டாது. இவர் வயிறு நிறைந்திருக்கும். வீதிகளில் ஓடியாடித் திரியும் வயது வந்த காலத்தில் குருடரையும் நொண்டிகளையும் கையைப் பிடித்து வீட்டுவாயில்களுக்கு அழைத்துச் சென்று வழிகாட்டி ஆதரவாகச் சேவை செய்தார். குழந்தையிலேயே சேவை—காருண்யம் இவரிடம் குடிகொண்டிருந்த பண்புகளாகும்.

## குழந்தைகளின் குரு

புட்டபர்த்தி கிராமச் சிறுவருக்கு இளம்வயதிலேயே இவர் குருவாக விளங்கினார். ஒருமுறை ஸ்ரீ இராமநவமி விழாவின்போது ஸ்ரீ இராமருடைய பெரியபடத்தை ஒருவண்டியில் வைத்து அலங்கரித்து ஊர்வலமாக மேளதாள வாத்தியங்களுடன் சிறுவர்கள் கொண்டுவந்தார்கள். அந்த ஊர்வலத்தின்போது ஸ்ரீ இராமருடைய படத்திற்குக்கீழ் சத்யநாராயணன் கம்பீரமாக அமர்ந்து இருந்தார். சிறுவர்களை இதுபற்றிக் கேட்டபோது ''அவர் எங்கள் குரு'' என்று கூறினார்கள். உண்மையிலேயே அன்றே மக்கள் குலத்துக்குக் குருவாகி அமர்ந்துவிட்டார்.

புட்டபர்த்தியிலுள்ள ஒரு சிறிய ஆரம்பபாடசாலையில் இவர் முதன் முதலாகச் சேர்ந்து கல்வி பயின்றார். உரியநேரந்தவறி பாடசாலைக்கு வரும் மாணவருக்கு அந்நாளையில் அப்பாடசாலை அதிகாரிகள் கடுந்தண்டனை விதிப்பது வழக்காகவிருந்தது. முதலில் வகுப்பிற்கு வந்து ஆசிரியருக்கு வணக்கம் தெரிவிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையும் அப்பிள்ளையைத் தொடர்ந்து வரும் பிள்ளையும் தவிர மற்றப்பிள்ளைகளுக்கு பிரப்பம்பழம் கிடைத்துவந்தது. இத்தண்டனையிலிருந்து தப்புவதற்கு பனியிலும் மழையிலும் நனைந்தபடி பிள்ளைகள் பாடசாலைத் தாவாரத்தில் விடிவதற்கு முன்பே வந்துநிற்பது வழக்கமாகிவிட்டது இதனைக்கண்ட சத்தியாவுக்கு மனமுருகியது. அவர்களுக்கெல்லாம் தமது வீட்டிலிருந்து சட்டை துணிகளைக் கொண்டுவந்து, அவர்கள் குளிரால் நடுங்காது பாதுகாப்பாக இருக்க, கொடுத்து உதவுவார். வீட்டிலிருந்த பெரியவர்கள் நிலைமையை அறிந்ததும் துணிமணிகளைப் பாதுகாத்துக் கொண்டனர். துரிதமாக ஒன்றைக் கிரகிப்பதிலும் சொல்லிக் கொடுப்பவற்றை அவதானித்துப் படிப்பதிலும் மற்ற மாணவரிலும் பார்க்க சத்தியா முன்னணியில் நின்றார். ஏழுவயதிலேயே அற்புதமான பாடல்களையெல்லாம் பாடக்கூடியவராக இருந்தார். கிராமத்தில் நடக்கும் கலைக்காட்சிகளிலும் நாடகங்களிலும் தாம் வீட்டில் பயின்ற பாடங்களையும் தோத்திரப் பாக்களையும் பாடுவார். இவர் பாடும் திறனைமட்டுமன்றி பாட்டியற்றும் வன்மையையும் மக்கள் வியந்து பாராட்டுவர்.

## இளமையிற் கல்வி

புட்டபர்த்தியிலிருந்து இரண்டரை மைல் தூரத்திலுள்ள புக்கபட்டணம் என்னும் ஊரிலுள்ள உயர் நிலைப்பள்ளிக்கூடத்திற்கு இவரது எட்டுவயதில் கல்விபயில அனுப்பப்பட்டார். கடும் வெயிலிலும் பெரும் மழையிலும் அந்த இரண்டரை மைல் தூரத்தையும் தாண்டி பாடசாலைக்கு இவர் போய்வர வேண்டியிருந்தது. காலையில் பழைய சாதமும் தயிரும் அல்லது சட்டிணியும் சாதமும் சாப்பிட்டுவிட்டு, மதிய உணவுப்பொட்டலத்துடனும் புத்தகங்களுடனும் தமது தோழருடன் இவர் பாடசாலை சென்று வந்தார். இவருக்குக் கல்விபோதித்த ஆசிரியர்களான ஸ்ரீ பி. சுப்பநாசார், ஸ்ரீ வி. சி. கொண்டப்பா ஆகியவர்கள் இவரது கல்வித் திறமைகள் பற்றிப் பாராட்டிப் பேசுவர். சத்தியநெறிப்படி நின்றொழுகுதலையும் காலையில் நேரந் தவருது வந்து வகுப்பில் தெய்வவழிபாடியற்றலையும், தம்மைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்திருக்கும் தோழருக்கு தமது புத்தகப்பையிலிருந்து எடுத்துக்கொடுக்கும் அபூர்வ பொருள்கள்பற்றியும் ஆசிரியர்கள் கூறியுள்ளனர். இவர் புரிந்து வந்த அற்புதச்செயல்கள் ஒரு நாள் வெளியாயிற்று.

பாடசாலேயில் இவர் பாடங்கேட்கும் காலேயில் அன்று அவதானக்குறைவாக இருந்தாரென்று அதற்குத் தண்டனேயாக வாங்கில் ஏறி நிற்கும்படி அந்தப்பாட ஆசிரியர் கட்டளேயிட்டார். இவரும் வாங்கில் ஏறி நின்ருர். அந்தப்பாடவகுப்பு முடிந்தது. அடுத்தபாடம் தொடங்கும் மணி அடித்தாயிற்று. அடுத்தபாட ஆசிரியரும் வந்துவிட்டார். ஆனல், இவருக்குத் தண்டனே வழங்கிய ஆசிரியர் தமது இருக்கையைவிட்டு எழவில்லே—எழமுடியவில்லே. நாற்காலியோடு அவர் ஒட்டிக்கொண்டார். சத்தியா அன்று வாங்கில் ஏறி நின்றதும் அவரது தோழர்கள் எல்லோரது மனமும் வேதனேப்பட்டது. அவர்கள் தங்கள் தலேகளேத் தொங்கப்போட்டவாறு சோகத்துடன் இருந்தனர் இப்பிள்ளேகளுக்கு ஆங்கிலம் போதித்துவந்த ஆசிரியரான ஜனப் மஹ்பப்கான், சத்தியாவை நல்லமுறையில் பாராட்டி நடத்தி வருபவர். அவர்தான் அடுத்தபாடமெடுக்கும் ஆசிரியர். சத்தியா வாங்கில் ஏறி நிற்பதையும் ஆசிரியர் நாற்காலியை விட்டு எழாதிருப்பதையும் கண்டதும் அவருக்கு விடயம் புரிந்துவிட்டது. அவர் அந்த ஆசிரியரிடம் சத்தியாவை வாங்கிலிருந்து இறங்குமாறு பணிக்கும்படி கூறினர். அப்படியே அந்த ஆசிரியரும் கட்டளேயிட்டார். சத்தியா வாங்கிலிருந்து இறங்கியபின்னரே நாற்காலியிலிருந்து அந்த ஆசிரியரால் எழ முடிந்தது. இச்சம்பவம் விரைவில் எங்கும் பரவியது.

புக்கபட்டணத்திலே முகாமிட்டிருந்த நாடகக்குழுவொன்று இவரது புட்டபர்த்திக் கிராமத்துக்கும் வந்தது. அந்தநாடகத்தில் வரும் நாட்டிய நிகழ்ச்சியில் ரிஷ்யேந்திரமணி என்னும் நாட்டியக்காரி, தன் தலேயில் ஒரு கண்ணுடிப்போத்தலே வைத்துக்கொண்டு தரையில் ஒரு தீப்பெட்டி மீது வைக்கப்பட்டிருந்த ஒரு கைக்குட்டையை நாட்டியமாடிய நிலேயிலேயே எடுத்தாள். இந்த நிகழ்ச்சியை செய்து காட்டும்படி சத்தியாவை எல்லோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் வற்புறுத்தினர். முடிவில் கோதசெருவு என்னும் ஊரிலே நடந்த களியாட்ட விழாவிலே சத்தியா இந்த நிகழ்ச்சியை திறம்படச்செய்து காட்டினர். சத்தியாவும் ரிஷ்யேந்திரமணி போல வேஷம்போட்டுக் கொண்டு, அந்நாட்டியக்காரி செய்தது போன்ற காட்சிகளைச் செய்து மக்களுக்கு மகிழ்ச்சியூட்டினர். நிலத்தில் தீப்பெட்டி மீது, கைக்குட்டைக்குப் பதிலாக வைக்கப்பட்டிருந்த ஊசியை, தமது கண்ணிமையால், நாட்டியமாடிக் கொண்டே எடுத்தார், இவர்வெகு அபாரமாக ஆடிக்காட்டியதை மக்கள் வியந்து பாராட்டினர். கலைஞனில் கலைஞனாக இவர் விளங்கினர்.

கோண்டமராஜுவின் மக்களெல்லோரும் ஒரு வீட்டிலே இருந்தமையால் சுமார் இருபது குழந்தைகளுடன் இவரும் இருக்க நேர்ந்தது. உயிர்களை வருத்தும் முறையிலான விளையாட்டுக்களை சத்தியா இளமைமுதலே வெறுத்து ஒதுக்கி வந்தார். இவருடைய தோழர்களும் இத்தகைய காருண்யமற்ற விளையாட்டுக்களை விலக்கினர். இவருக்குப் பத்து வயதான போது புட்டபர்த்தியில் ஒரு பஜனைக்குழுவை அமைத்து, கடவுளின் அன்பையும் கருணையையும் புகழ்ந்துபாடும் பாடல்களைப் பாடிவந்தார். ஒரேவித அணி அணிந்த பதினெட்டுச் சிறுவர்களைக் கொண்டதாக இப்பஜனைக்குழு விளங்கியது. பாகவத புராணத்தில் கிருஷ்ணருடைய வாழ்க்கை கூறப்பட்டாங்கு அதனைப்பாடல்களில் வடித்து தமது குழுவுக்குப் பயிற்றியிருந்தார். இந்த நாடகங்களில் தாயாக அல்லது குழந்தையாக சத்தியா பாத்திரமேற்று நடிப்பார். இந்தப் பஜனைக்குழுவிற்கு சத்தியாவே அமைப்பாளர்—தனாதிகாரி—ஆசிரியர்—பாடல் தயாரிப்பாளர் — பாடகர் எல்லாமாக விளங்கினர். அயலில் உள்ள கிராமங்களில் கொள்ளைநோய் பரவி மக்கள் இறந்த காலத்தில் புட்டபர்த்தி கிராமம் எதுவிதமான தொல்லைகளும் இன்றி இருந்து வந்தது. பஜனைக்குழுவின் தெய்வீகத்தன்மை தான் இதற்குக்காரணமென அக்கிராமத்து முதியோர் கூறினர். பஞ்சகாலத்தில் நிதிசேகரிப்பதற்காக பாஞ்சுரன், உஷ பரிணயம், திரௌபதி மானசம்ரட்சணம், கம்சவதம் போன்ற நாடகங்கள் நடாத்தப்பட்டன. சில நாடகங்களில் பல பாத்திரங்களை சத்தியாவே ஏற்று நடிப்பதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியநாராயணன் ஒரு அரசாங்க உத்தியோகத்தராக வரவேண்டுமென்னும் நோக்குடன அவர் பெற்ருேர் அவருக்கு உயர்கல்வி அளிக்கத்திட்டமிட்டனர். இத்திட்டத்தின்படி இவரது பன்னிரண்டாவது வயதில் கமலாபுரத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு ஸ்ரீ பகவதி சுப்பராஜு என்பவரது மகளை இவரது மூத்த சகோதரர் சேஷமராஜு அவர்கள் விவாகம் செய்திருந்தார். ஆகவே, தமையனுடன் கமலாபுரம் சென்று உயர் கல்வியை இவர் கற்கவேண்டியதாயிற்று. கமலாபுரத்துக் கல்லூரியில் ஒழுங்காகக் கல்விகற்று நற்பெயர் நாட்டினர். எந்தக் கூட்டத்திலும் சரி—எந்த நாடகத்திலும்சரி—எந்தவிழாவிலும் சரி, ஆரம்ப பிரார்த்தனைப் பாடலை இவரே பாடுவார். அப் பாடசாலையின் சாரணர் படையிலும் இவர் சேர்ந்தார். புஷ்பகிரி என்னும் ஊரில் நடந்த கால்நடைக்காட்சிக்கு இவரது பாடசாலைச் சாரணர் போவதாகவும் ஆங்குச்சேவை புரிவதாகவும் அதற்கான செலவுகளுக்கு ஆளுக்குப் பத்து ரூபா கொடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. சத்தியாவிடம் பணம் இல்லை. சேவைமனப்பான்மையினைத் தமதுதோழரிடம் புகுத்த விரும்பி இச்சந்தர்ப்பத்தை சத்தியா பயன் படுத்திக் கொண்டார். பிறருக்குச் சேவை செய்வது—சுயநலமற்ற சேவையாக இருக்கவேண்டுமென்பதை தமது செயல் மூலம் வலியுறுத்திக் காட்டினுர் இக்காலத்தில் இவரது தமையனுர் சேஷமராஜு தனது பயிற்சியை முடித்து உரவகொண்டா என்னும் இடத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் தெலுங்கு மொழி ஆசிரியராக பதவியில் அமர்ந்து தொண்டாற்றினுர். சத்தியாவையும் தம்முடன் ஆங்கு அழைத்துச் சென்று கல்வியைத் தொடரலாமென அவர் முடிவு செய்தார்.

## பாலசாயி

அரசாங்க உத்தியோகத்திலும் பார்க்க உயர்ந்த தானத்தினை அடைவதற்காகப் பிறந்த சத்தியாவின் தெய்வீக வல்லமைகள் படிப்படியாகப் பரவத் தொடங்கின. எல்லோருடைய உதடுகளிலிருந்தும் இவருடைய வல்லமைகள் பற்றிய செய்திகள் ஒலித்தன. சிறுகுழந்தையாக இருந்தபோது முதல் தம்முடைய கையசைப்பினுல் எங்கிருந்தோ பழங்களையும் புஷ்பங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் இனிய பண்டங்களையும் பெற்றுக்கொடுத்து, மனித அறிவுக்கெட்டாத ஆற்றலை வெளிக்காட்டி வந்த இவரை பாலசாயி எனப்பலரும் அழைக்கலாயினர்.

உணர்வால் ஒன்றைக் கூறக்கூடிய திறமையும் அன்று இவரிடம் இருந்தது. பொருள்களை இழந்தவர்கள் இவரிடம் வந்து தாம் இழந்த பொருள்கள் பற்றி அறிந்து சென்றதால் இவைகளும் இவருக்குப் புகழைத் தேடிக்கொடுத்தன. சத்தியாவின் சகோதரரான ஆசிரியர் சேஷமராஜுவை சந்தித்து அவரது மகிமைகள்பற்றியும் மக்கள் அறிந்து வந்தனர். பாடசாலையிலுள்ள எல்லோருக்கும் சத்தியா, செல்லப்பிள்ளையானர். பாடசாலையின் பிரார்த்தனைக் குழுவுக்கு அவரே தலைவர்—விளையாட்டுக்கு அவரே தலைவராக நின்று எல்லாத்துறைகளிலும் முன்னணியில் நின்றார். நாடகத்துறையிலும் திறமைகாட்டிப் பாராட்டுப் பெற்றார். "சொல்லும் செயலும் ஒன்றா?" என்னும் நாடகத்தை எழுதி எல்லோருடைய அகக்கண்களையும் திறந்தார்.

உரவகொண்டாவில் பல அற்புதச் செயல்களைச் செய்ய இவர் ஆரம்பித்திருந்தார். காணமற்போன ஒரு ஆசிரியரின் பேனை, ஒரு முஸ்லிமின் காணமற்போன குதிரை ஆதியனவற்றைச் சரியாகக் கண்டு கூறினார். இதனால் இவர் புகழ் மேலும் பரவியது. பதின்மூன்று வயதிலே பெரும் பாராட்டுக்களை அடைய ஆரம்பித்தார்.

## மாயை அகன்றது

1940 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8ந் தேதி இவருக்கு வயது பதின் மூன்று நடக்கும் போது குறிப்பிடத்தக்க திடீர் மாற்றமொன்று இவரது வாழ்வில் ஏற்பட்டது. இவருக்கு ஒரு கருந்தேள் குத்திவிட்டதாக அறிந்து நகரமே திடுக்கிட்டது. மாலை ஏழுமணியிருக்கும் போது தமது வலது காற் பெருவிரலில் கருந்தேள் குத்திவிட்டதாக இவர் பலத்த சப்தமிட்டுக் கத்தினார். பாம்போ, தேளோ காணப்படவில்லை. ஆனால் அவர் அறிவு மயங்கி கீழே விழுந்து விறைத்தபடி, மூச்சும் குறைந்து, பேச்சுமின்றிக் கிடந்தார். எல்லோரும் பயந்து விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனர். சத்தியாவின் தூலதேகம் சீரடிசாயி பாபாவினுல் குடி கொள்ளப்பட்ட நிலைமையைக் காட்டும் பரிபூரண மாற்றம் அன்று ஏற்பட்டிருக்கலாமென விளக்கங்கள் கூறப்படுகின்றது. தாமே இந்த மாற்றத்தினைச் செய்துகொண்டதாக பாபாவே பின்னர் கூறியிருக்கின்ருர். இச்சம்பவம் நடந்த நாள் முதல் விளையாட்டுப்பையனைப் போல வாழ்ந்து காலத்தைப்போக்க அவர் விரும்பவில்லை. உரவகொண்டாவில் நடந்தவிடயங்களை இவரது தமையனுர் தமது குடும்பத்தாருக்கு அறிவித்தார் இச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த பெற்றேர் புட்டபர்த்தியிலிருந்து உரவகொண்டாவுக்குச் சென்றனர். சத்தியாவை சாதாரண நிலைமைக்குக் கொண்டுவர எத்தனையோ வைத்திய முறைகளை பின்னர் கையாண்டனர். கருந்தேள் கடிக்குப்பின் அவருடைய மனுேபாவத்தில் ஏற்பட்ட நிலைமை—மௌனநிலை—புதுமையான நடத்தை — உணவு ஏற்க மறுப்பு—பலவும் எல்லோருக்கும் மலைப்பைக் கொடுத்தன. எந்த விஷமும் அவரை எதுவும் செய்யமுடியாது என்பதையும் பற்றுப்பாசங்களைப் படிப்படியாக நீக்கிவருகின்ருர் என்பதையும் தேள்கடிச் சம்பவம் குறிப்பாக உணர்த்தியது.

1940 ம் ஆண்டு மேமாதம் 23 ந் தேதி — *14* வயதடைந்த சத்தியா வழமை போல தமது கடமைகளைச் செய்து முடித்தார் — தம்வீட்டில் உள்ளவர்களை அழைத்து எல்லோரையும் தம்மைச் சுற்றியிருக்கச் செய்தார். தம்முடைய கையசைப்பினுல் கற்கண்டு — பூக்கள் முதலியவற்றைத் தோற்றுவித்து தம்மைச் சூழ்ந்திருந்தவர்களுக்குக் கொடுத்தார். அன்று அவர் மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டார். அயலவர்கள் இந்நேரத்தில் உள்ளே வந்து குவிந்தனர். எல்லோருக்கும் பாலன்னம், கற்கண்டு, புஷ்பம் ஆதியவற்றைத் தோற்றுவித்துக் கொடுத்தார். இந்தவேளையில் இதனை அறிந்து அங்கு வந்த தந்தையார் வெங்கப்பராஜு, ஒரு தடியை எடுத்துக்கொண்டு வந்து, இது ஒரு மந்திரசாலமாக இருக்கலாமெனக் கூறித் தண்டிக்க முனைந்தார். ''நீ பேயா,? கடவுளா? அல்லது பைத்தியக்காரனு?—யார் நீ சொல்!'' என்று அதட்டினுர். ''நான் சாயிபாபா'' என்று சத்தியா உடனே சடுதியில் கூறினுர். மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு விவாதிப்பது பயனற்றதாகியது. வெங்கப்பராஜு மௌனியானார். கையிலிருந்த தடிவிழுந்தது. சத்தியா தொடர்பாகக் கூறினார்—

''நான் அபாஸ்தம்ப சூத்திரத்தைச் சேர்ந்தவன். பரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவன். நான் சாயிபாபா- உங்கள் கஷ்டங்களை விலக்குவதற்காக வந்துள்ளேன். உங்கள் உங்கள் இல்லங்களைச் சுத்தமாகவும் துப்பரவாகவும் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தில் நான் பிறக்கவேண்டுமென உங்கள் சாது வெங்கவதூத விரும்பி பிரார்த்தித்தார். ஆகவே தான் நான் வந்துள்ளேன். ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் என்னை வணங்குங்கள். உங்கள் இதயங்களையும் வீடுகளையும் புனிதமாக வைத்திருங்கள்.''

''நீர் சாயிபாபா தான் என்பதை நிரூபிக்கவேண்டும்.'' என்று ஒருவர் ஒரு வியாழக்கிழமை வழிபாட்டின் போது கேட்டார். இதனைக் கேட்டதும் அவர் அங்கிருந்த மல்லிகைப் பூக்கள் சிலவற்றை எடுத்து நிலத்தில் வீசினார். எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக அந்த எழுத்துக்கள் ''சாயிபாபா'' என்று தெலுங்கில் தோற்றும்படி நிலத்தில் வீழ்ந்தன. படிப்படியாக சத்யசாயியின் யுகத்திற்கு அழைத்துச் செல்ல அவர் மக்களைத் தயார்ப்படுத்த ஆரம்பித்தார், உயர்கல்வித்துறைக்கு இவரைப் புகுத்திவிடுவது என்னும் நோக்குடன் தமையனார் சேஷமராஜு இவரை உரவகொண்டாவுக்கு ஜூன் மாதத்தில் அழைத்துச் சென்றார். இவர் தமது அற்புதச் செயல்களால் பாடசாலையில் எல்லோர் கவனத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்டார். இவருக்குப் பழங்களும் இனிப்புக்களும் பூக்களும் கொடுப்பதற்காக ஒவ்வொரு வியாழக்கிழமையும் வீட்டில் பலகிராமங்களிலிருந்தும் சனங்கள் வந்து குழுமினர். தலைமையாசிரியர் முதல் சாதாரணமனிதர் வரை இவரது அமுதமொழிகேட்டு உணர்வு பெற்றனர்.

உரவகொண்டாவில் வியாழக்கிழமைகள் முக்கியத்துவம் வகித்தன. பக்தர்களுக்கு சீரடி ஸ்ரீ சாயிபாபாவின் படங்களை பெற்றுக்கொடுத்தார். பூக்களையும் வந்து குழுமும் மக்களுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். அக்டோபர் மாத தசராவிடுமுறையின் போது பழைய விஜய நகரத்தின் தலைநகரான ஹம்பிக்கு அழைப்பின் பேரில் இவரையும் அழைத்துக் கொண்டு தமையனார் சென்றார். நீண்ட தூரப்பிரயாணம் இவரைக் குணப்படுத்துமென தமையனார் நம்பினார் அந்த நகரத்தின் பழைய உடைபாடுகளையெல்லாம் பார்த்துக் கொண்டு விருபாக்ஷகருடைய கோயிலுக்குள் தரிசனத்திற்காக எல்லோரும் சென்றனர். சத்தியா மட்டும் ஆலயத்திற்கு வெளியே அக்கோயிலின் வானளாவிய கோபுரத்தையும் அதன் அமைப்பையும் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டார். ஆலயத்தினுள் தரிசனம் செய்யச் சென்றவர்கள் தம் தரிசனத்தின் போது மூலலிங்கத்திற்குப் பதில் சத்தியா புன்னகையுடன் நிற்பதைக்கண்டனர். தமையனார் சந்தேகத்துடன் வெளிவாயிலுக்கு ஓடிச் சென்று தன் தம்பியைப் பார்த்தார். சத்தியாவோ மேலே வெறித்து நோக்கியவாறு முன் நின்ற இடத்திலேயே தூணொன்றிலே சாய்ந்தபடி நிற்பதைக் கண்டார். இதனை இவருடன் வந்தவர்களும் கண்டு ஆச்சரியமுற்றனர். அன்று வியாழக்கிழமையாக இருந்ததால் அவர்கள் சத்தியாவுக்கு விசேட பூசைகளைச் செய்து வழிபட்டனர். இத்தருணத்தில் தம்மை ஒடுக்கி வைத்திருக்கும் கால எல்லை முடிவடைவதை அவர் உணர்ந்தார்; தம்மை உலகுக்கு வெளிப்படுத்தும் காலம் வந்து விட்டதைக் கண்டார்.

> ''ஆண்டவன் எம்முடன் என்றும் எப்பொழுதும் இருக்கின்றார் என்னும் உணர்வோடு செய்யும் வேலைகளே உண்மையானவைகளாகும். மேலதிகாரிகளிடம் உள்ள பயம் காரணமாக ஆற்றப்படும் வேலைகளுக்கன்றி உண்மையாக - சந்தோஷமாக கடமைகளைப் புரிபவருக்கு தனது கருணைப் பிரவாகத்தினால் ஆண்டவன் அருள் புரிவார். உங்கள் இதயம் பரிசுத்தமாக இருக்குமாயின் உங்கள் செயல்களும் பரிசுத்தமாகும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா

விஜயநகர விஜயத்திலிருந்து திரும்பியபின்னர் 1940 அக்டோபர் 20ந் தேதி—வழமைபோல சத்தியா தனது பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டார். பாடசாலை வாயில்வரை அவருடன் ஸ்ரீ ஆஞ்சநேயுலுவும் சென்றார். இவர் ஒரு கலால்துறை பரிசோதகர். அன்று சத்தியாவின் முகத்தில் தெய்வீகக்கலை—ஒளிவீசுவதை அப்பரிசோதகர் கண்டார். சில நிமிடங்களின் பின் சத்தியா தன்வீட்டுக்குத் திரும்பிவிட்டார். வீட்டுவாசலில் நின்று கொண்டு, தன்னிடமிருந்த புத்தகங்களை பக்கத்தே வீசிவிட்டு, ''நான் இனிமேல் உங்கள் சத்தியாவன்று. நான் சாயி. நான் போகின்றேன்; உங்களுக்குரியவனல்ல. மாயை என்னை விட்டு அகன்றுவிட்டது. என் பக்தர்கள் என்னை அழைக்கின்றார்கள். எனது வேலைகள் என்னைக் காத்திருக்கின்றன - இனிமேல் என்னால் நிற்கமுடியாது'' என்று கூறிக்கொண்டு வெளியேறினார். எத்தனையோபேர் வேண்டி அழைத்தும் அவர் நிற்கவில்லை. இதனை அறிந்து அங்கு வந்த தமையனாருக்கும், ''என்னைக் குணப்படுத்தும் எல்லா முயற்சியையும் இனிவிட்டுவிடலாம். நான் சாயி. உங்களுக்கு நான் உறவினனென்றி நான் கொள்ளவில்லை', என்று கூறிவிட்டார். அவர் திருமுகத்தைச் சுற்றி தேஜோமயமான ஒரு ஒளிவட்டம் பிரகாசித்ததை எல்லோரும் கண்டு வியந்தனர்.

பதினான்கு வயதுப்பாலகன் ஒருவன் பேசும் பேச்சுக்களா இவைகள் என சேஷமராஜு திடுக்கிட்டார். பேச்சிழந்து, செயலிழந்து நின்றார். ஸ்ரீ ஆஞ்சநேயுலுவின் வீட்டிற்குமுன் ஒரு தோட்டம். அத்தோட்டத்தில் இருந்த பாறையின்மேல் சத்தியா போய் ஏறியிருந்தார். மக்கள் கூட்டம் கூட்டமாக அங்குக் குழுமினர். பஜனைகள் நடந்தன. நண்பர்கள் அழுதனர்; தோட்டத்திற்கு வந்து வணங்கினர்.

ஒரு நாள் மாலை, ''ஓ மாயை வந்துவிட்டது'' என்று சத்தியா கூறினார். அவரது தாயார் புட்டபர்த்தியிலிருந்து வந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடைய வேண்டுகோள்களுக்கும் இணங்க உறவகொண்டாவிலிருந்து புட்டபர்த்திக்கு அவர் வந்து சேர்ந்தார். புட்டபர்த்தியில் இவர் சுப்பம்மா என்னும் பெண்மணியின் இல்லத்திலிருந்து பக்தர்களுக்குத் தரிசனம் கொடுக்க ஆரம்பித்தார். அன்று முதல் பாலசாயி அல்லது சத்தியசாயிபாபா என்று அவர் அழைக்கப்பட்டார்.

ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் தெய்வீகத்தன்மையில் சந்தேகித்து வந்தவர்களெல்லோரும் அவர் ஆற்றிய பல அற்புதச் செயல்களினால் நம்பிக்கையடைந்தனர். வியாழக்கிழமைகளில் மட்டுமன்றி தினசரி தமது சமூகத்தை வெளிப்படுத்தினர். நாலுபக்கங்களிலிருந்தும் வந்து குவியும் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுப்பதற்காக அவர் தினசரி இருமுறைகூட ஆயத்தமானர். 1944-ம் ஆண்டில், இன்று பழையகோயில் என்று அழைக்கப்படும் மண்டபம் கட்டப்படும்வரை, சுப்பம்மாவின் இல்லத்திலேயே இருந்து பக்தர்களுக்கு அவர்தரிசனம் கொடுத்து வந்தார். வயது முதிர்ந்த சுப்பம்மா, அங்கு தரிசனத்துக்கு வந்து குவியும் பக்தர்களுக்கு எல்லாவசதிகளேயும் தயங்காது—சோர்வின்றி செய்து கொடுத்துவந்தார். அடிக்கடி இவர் தம் இருப்பிடத்தைவிட்டு வெளியே மலைப்பிரதேசத்திற்குச் சென்றுவிடுவதுண்டு. இவரைத்தேடிச் செல்வோர், மலைப்பிரதேசத்தில் குன்றுகளிடையேயோ அல்லது கற்பாறைகளின்மீதோ அமர்ந்து சிந்தித்தவாறு இருப்பதைக் காண்பர்.

நாலுபக்கங்களிலுமிருந்தும் வந்து குவிந்த பக்தர்களுக்கு உணவு வழங்கவேண்டுமென்று பாபா வற்புறுத்துவார். பல சமயங்களில் சமைக்கப்பட்ட உணவு போதுமானதாக இருக்கமாட்டாது. இந்தவிடயம் பாபாவுக்குத் தெரிந்ததும் இரண்டு தேங்காய்களேக் கொண்டுவரச் செய்து, அவற்றை உடைத்து, சமைக்கப்பட்டிருக்கும் உணவுகள் மீது இளநீரைத் தெளிப்பார். பின்னர் எல்லோருக்கும் பரிமாறுமாறு கூறுவர். சாயந்தரம்வரை உணவு பரிமாறப்படும். உணவு தீர்ந்தது என்று கூறப்படமாட்டாது. அள்ள அள்ளக் குறையாது உணவு வந்துகொண்டேயிருக்கும். இது மாதிரி பல சமயங்களில் நடந்துள்ளன. ஒருமுறை பஜனேக்குக் கூடியிருந்தவர்களுக்கு வெட்டிக் கொடுக்குமாறு தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கரத்தை அசைத்து ஒரு அபூர்வ பழத்தைப் பெற்று தம் சகோதரியிடம் கொடுத்தார். அவர் சகோதரியோ எல்லோருக்கும் ஒவ்வொருபழம் கொடுக்கும்படி வேண்டினர். பாபா, ஒரு கூடையைத்தருவித்து அதனை ஒரு துணியால் மூடினர். பின்னர் தம்கையால் அக்கூடையை லேசாகத்தட்டினர். அந்தக் கூடையில் அபூர்வமான பழங்கள் நிறைந்திருந்தன. வந்திருந்தவர்களுக்கு அப்பழங்களை விநியோகிக்க ஆரம்பித்தபோது கூடையில் இருந்த பழங்கள் பக்தர்களுக்கு கொடுக்கபோதியவல்லவென்று தெரியவந்தது உடனே பாபா, பிரசாதவிநியோகத்தை தாமே ஏற்றுக்கொண்டார். கூடியிருந்த பக்தர்களெல்லோருக்கும் ஒவ்வொரு பழம் கிடைத்தது.

ஒருமுறை இவர் தமது பழைய பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவரது வீட்டுக்குச் சென்றிருந்தார். அவருடன் நகரசபை ஆணையாளர் ஸ்ரீ நரசமராஜுவும் அவர் மனைவியும் பிரயாணிகளுமாக முப்பதுபேர் பஸ்ஸில் சென்றனர். ஆசிரியரின் மனைவியோ தமது குடும்பத்திற்குப் போதியளவே சிற்றுண்டி தயாரித்திருந்தார். பஸ்ஸில் வந்த எல்லோருக்கும் தேநீரும் சிற்றுண்டியும் தரவேண்டுமென பாபா கூறினர். ஆசிரியரின் மனைவி குழம்பினள்—தயங்கிய நிலையில் பாபாவைப் பார்த்தாள். அப்புனிதவதியின் தடுமாற்றத்தை உணர்ந்த பாபா—''கவலைப்படாதீர்கள் முதலில் இவர்களுக்குக் கொடுங்கள். எல்லாம் போதிய அளவு கிடைக்கும்'' என்று அபயமளித்தார். சிற்றுண்டி எல்லோருக்கும் வயிறு நிறையக் கிடைத்தது. ஆறுபேருக்கெனத் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி ஆறுமடங்கு வளர்ந்து எல்லோருக்கும் உண்டி கொடுத்தது. பாபா ஊர்வலமாகச் செல்லுங்காலங்களில் தாம அணிந்திருக்கும் மாலைகளில் உள்ள பூவிதழ்களை எடுத்து மக்கள்மீது தூவுவார். அவையெல்லாம் இனிப்புப்பட்சணங்களாக மாறி மக்களுக்குக் கிடைத்துவந்தன. அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தை மணிமேகலைக்கு மணிமேகலா தெய்வம் கொடுத்தது. இந்த பக்தகோடிகளுக்கு பகவானே அட்சய பாத்திரமாக விளங்கினர்.

இவரது சகோதரி வெங்கம்மா, சீரடி சாயிபாபாவின் படம் ஒன்று தரும்படி இவரிடம் கேட்டிருந்தார். குறித்த ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழக்கிழமை அதனைத் தருவதாக பாபா கூறியிருந்தார். ஆனால், அத்தினத்தில் இவர் உறவகொண்டாவில் இருந்தார். படம் எப்பொழுதாவது வரும் என்று எண்ணிக்கொண்ட வெங்கம்மா பின்னர் அதனைப்பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் அன்றிரவு புட்டபர்த்தியில் எல்லோரும் படுக்கைக்குச் சென்றபின், "அம்மா! அம்மா!!" என்று வெளியிலிருந்து யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. பக்கத்து வீட்டில் யாரோ கூப்பிடுகின்றார்களென எண்ணிக்கொண்டு வெங்கம்மா பேசாதிருந்து விட்டார். சிறிது நேரத்தில் வீட்டின் உள்ளே எலி பிராண்டுவது போன்ற சத்தம் கேட்டது. உடனே விளக்கேற்றி அச்சத்தம் வந்த இடத்தினைச் சோதித்தார். என்ன ஆச்சரியம்! சீரடி சாயிபாபாவின் படமொன்று அங்கு திணிக்கப்பட்டிருந்ததை அவர் கண்டார். பாபா தாம் கொடுத்தவாக்கை நிறைவேற்றி விட்டார்.

பாபா, தமது முதற் பதினாறு வயது வரையுள்ள காலம் லீலைகளுக்கும் அடுத்து பதினாறுவயது வரையுள்ள காலம் அற்புதங்கள் புரிவதற்கும் மீதியான காலம் போதனைகளுக்கும் உரிய காலமென்று கூறியுள்ளார். இவர்தாம் இருந்த இடம் போதாதென மாலை வேளைகளில் பக்தர்களையும் கூட்டிக்கொண்டு ஆற்றங்கரை மணலுக்குச் சென்று தமது கூட்டங்களை நிகழ்த்துவார். தமது ஒவ்வொரு பிறவித் தோற்றக் காலத்திலும் லீலை தொடர்ந்து இருக்குமென்றும் அவர் கூறியுள்ளார். ஆற்றங்கரை மணற்பரப்பில் கூட்டங்கள் நடக்கும்போது பல அற்புதங்களைச் செய்வதுண்டு, கமலாபுரத்திலுள்ள ஒரு பக்தரின் குடும்பத்திற்கு திருமாலின் பத்து அவதாரங்களையும் காட்டியருளினர். சுப்பம்மாவும் பேனுகொண்டாவிலிருந்து வந்த பக்தர்களும் சீரடி சாயிபாபாவின் சமாதியைத் தரிசிக்க விரும்பிய போது, அவர்களை தாம் இருந்த வீட்டு அறைக்குள் கூட்டிச் சென்று சமாதியைக் காட்டினர். சீரடியில் காணப்படுவது போலவே சமாதிதோற்றங்கொடுத்தது. இதன் பின்னர் எல்லோரும் இவர்தான் சீரடி சாயிபாபா என நம்பினர்கள்.

1941ம் ஆண்டில் புட்டபர்த்திக்கு ஒரு நிர்வாணச் சாமியார் வந்தார். உலகப்பற்றெல்லாம் ஒழித்தவரென்று மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றினர். அந்த யோகியும் மௌனவிரதத்தைக் கடைப் பிடித்துவந்தார். இவரது இருகால்களும் வழங்கப் பெருநிலை மையிலிருந்தமையால் இவரைப் பிறர் கொண்டுவந்து சுப்பம்மா வின்வீட்டு வாயிலில் இறக்கிவிட்டனர். பாபா அந்தயோகிக்கு உடுப்பதற்குத் துணியும் கொடுத்து அறிவுரைகளும் கூறினர். 'உண்மையான திரிகரண சுத்தியுடன் ஆண்டவனைத் தொழுதால்எங் கேயிருந்தாலும் எந்த நேரத்திலும் ஆண்டவன் துணை செய்வான். இமாலயத்தின் உச்சியிலும்சரி — ஆழ்ந்த நடுக்காட்டிலும் சரி— எங்கேயிருந்தாலும் அங்கே உங்களுக்கு உணவுதருவேன். அதற் கான தைரியம் இன்றேல் — அதற்கான உண்மை விசுவாசம் இன்றேல், இங்கேயே இந்த இடத்திலேயே இருந்து பிரார்த் திக்குக. ஆனல் இந்தவிதமாக நிரவாணமாக எங்கும் அலைந்து திரிந்து இடத்துக்கிடம் மக்கள் காலித்திரிவதற்கு இடமளிக்க வேண்டாம்'' என்று பாபா கூறினர். இதே அறிவுரைகளையே மீண்டும் மீண்டும் பலருக்கும் பாபா கூறிவருகின்றார்.

1958 ம் ஆண்டு சுவாமி சச்சிதானந்தா, பாபாவைச் சந் தித்தார். அப்பொழுது அந்த எழுபது வயதான யோகியைப் பார்த்து, யோகாப்பியாசங்களை முறையாகச் செய்து அதனை வளர்க்கும்படியும் இயக்கங்களை அமைப்பதில் வீணைக் காலத் தைச் செலவிடவேண்டாமென்றும் பாபா எடுத்துக்கூறினர். ''நீங்கள் எங்கிருந்தாலும் உங்களுக்கு உணவும் இருப்பதற்கு இடவசதியும் நான் செய்து தருகின்றேன்'' என்று கூறினர். இதே கூற்றையே ஆத்மீக ஈடேற்றத்தை நாடித் தேடிவருப வர்களுக்கு இன்றும் பாபா கூறிவருகின்றார்.

புட்டபர்த்தியில் சீரடி சாயிபாபாவின் மறு பிறப்பாக ஸ்ரீ சத்தியசாயிபாபா திருக்கோயில் கொண்டுள்ள செய்திபரவப் பரவ நாலுபக்கங்களிலிருந்தும் மக்கள் திரள்திரளாக வரத் தொடங்கினர். இவ்வாறு வந்து குவியும் பக்தகோடிகளுடைய மனோ — தேக வருத்தங்களை யெல்லாம் தீர்த்துவைப்பதில் பகவான் ஊக்கமுடையவராக இருந்தார். தேக வருத்தமோ — மனவருத்தமோ ஒருவருக்கு இருப்பின் அவரால் சமய சாதனை களில் ஊக்கங்கொள்ள முடியாதென்றும் அவர்களது வருத்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நீக்கி சமய சாதனைக்கு வழிவகுத்துக் கொடுப்பது தமது அவதாரத்தின் நோக்கமென்றும் கூறியுள்ளார். அவர் தமது வியத்தகுவன்மையால் உண்டாக்கிய ஆயுதங்களால் சத்திர சிகிச்சைகள் கூடச் செய்து பல பிணியாளருக்கு உதவியுள்ளார். பலர் தங்களுடைய இடங்களுக்கு பாபாவை விஜயம் செய்யு மாறும் அழைத்தனர். பெங்களூர், மிர்சாபூர், கோலபுரம், பீதாபுரம், சந்தூர், சென்னை மற்றும் நகரங்களுக்கெல்லாம் பாபா விஜயம் செய்துள்ளார். அவரை வந்து தரிசித்தவர்களுக்குள் மைசூர் இராஜ்யத்தைச் சேர்ந்த அரசபரம்பரையின ரும் இருந்துளர்.

பாபாவைத் தரிசிக்க வரும் பக்தர்கள் எண்ணிக்கை வரவர அதிகமாகிக் கொண்டே வந்தது. இதனுல் பக்தர்களை வசதியாக இருப்பதற்குக் கூடியதாகவும் பாபா வசிக்கக் கூடியதாகவும் தகுந்த ஒரு பெரிய ஆலயத்தின் தேவை ஏற்பட்டது. இப்படியாகவேதான் 1945 ல் பெங்களூரைச் சேர்ந்த திருமலராவும் மற்ருேரும் கூடி திட்டமிட்ட முதலாம் ஆலயம் எழுந்தது. கிராமத்திலிருந்து சிறிது தூரத்தில் — சத்தியம்மா, கோபால கிருஷ்ணர் கோயில்களுக்கு இடைப்பட்ட இடத்தில் தசார முதலிய விழாக்காலங்களில் சில காலங்களாக மக்கள் கூடாரங்களும் குடிசைகளும் அமைத்து தங்கிவந்த இடத்தினை இந்த ஆலய அமைப்புக்காகத் தேர்ந்தெடுத்தனர். பகவான் சாயிபாபா ஆலயத்துக்காகக் காட்டிய இடத்தில் கூனி வெங்கட என்பவர் கிடங்கை அகழ்ந்தபோது லிங்க பீடங்கள் கண்டு பிடிக்கப்பட்டனவாயினுர் லிங்கமெதுவும் கிடைத்திலது. பாபாவைச் சூழ்ந்து நின்ற மக்கள் இதுபற்றி உண்மை அறிய விரும்பினர். பாபாவும் தம் வயிற்றைச் சுட்டிக்காட்டி, 'எல்லா லிங்கங்களும் இங்கேயிருக்கின்றன' என்ருர். இந்த விடையின் உண்மையை மகா சிவராத்திரி விழாக்காலங்களில் பாபா தமது வாயினூடாக எடுக்கும் லிங்கங்களைக்கண்டவர் உணர்வர்.

சென்னைக்கும் முசலிப்பட்டணத்திற்கும் பாபா சென்ருர். மக்களுக்கு தரிசனங் கொடுத்து, தன்னைத் தரிசிக்கவந்த பக்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு மனச் சாந்தியையும் ஆத்மீக உபதேசங்களையும் அளித்து அவர்களுக்கு வழிகாட்டியும் காப்பாற்றியும் வருவதாக உறுதியும் அளித்தார். சென்ற இடமெங்கும் ஆத்மீக நெறியை உபதேசித்தும் சமாதானத்தைப் பரப்பியும் வந்தார். முசலி பட்டணத்துக் கடற்கரையில் நின்றபோது ஒருநாள் பாபா நேரே கடலுக்குள் நடந்து சென்றார். கரையில் நின்ற பக்த கோடிகள் நிலைமையை உணரு முன்னர் கடல் அலைகளின் பக்கமாக ஒரு சத்தம் கேட்டது. ஆதிசேஷன் மீது வீற்றிருக்கும் திருக்கோலத்தினை மக்கள் கண்டாநந்தித்தனர். அடுத்த நிமிடம் பாபா பக்தர்களுடன் பக்கத்தில் நின்றார். அவரது உடையெதுவும் ஈரமாக இருக்கவில்லை. மற்றொருநாள் இவர் கடற்கரைக்குச் சென்றபோது கையிலிருந்த ஒரு கோப்பையை கடலுக்குள் வீசினார். உடனே அந்த கோப்பையை அலைகள் கொண்டுவந்து கரையில் ஒதுக்கியது. பாபா உப்புநீர் நிறைந்த அதனை எடுத்து, கூடிநின்ற பக்தர்களுக்கு தீர்த்தமாக வழங்கினார். கடலும் அவருக்கு தேவாமிர்தத்தை வழங்கியது. இந்த அமிர்தமுண்ட பக்தர்கள் அமைதியின் உறைவிடமான பிரசாந்தி நிலையத்தில் இருக்கின்றனர். தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு ஆலோசனை — புத்திமதிகூறி அவர்களை ஆத்மீகத்துறையிலீடுபடுத்தி சமுதாயத்தில் நல்லவர்களாக வாழ வழிகாட்டி விடுவார். எல்லையற்ற கருணைக் கடலான பரம்பொருளிடம் உண்மை விசுவாசமும் திட நம்பிக்கையும் கொண்டு நடக்குமாறு எல்லோருக்கும் கூறுவார்.

## எல்லோரும் சமம்

இவரது கருணை எல்லையற்றதென்பதை பெங்களூரில் நடந்த ஒரு சம்பவம் உணர்த்தும். ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரே தன்மையாக அவர் நடத்தியமை இதனால் தெளிவுறும். இவர் தமது பாலபருவத்தில் பெங்களூரில் ஒரு வீட்டில் தங்கியிருந்தபோது அவர் தங்கியிருந்த வாசஸ்தலத்துக்கு எதிரில் செருப்புத்தைப்பவன் ஒருவன் தனது தொழிலைச்செய்து கொண்டிருந்தான். பாபா வந்து அந்த வீட்டில் தங்கியிருப்பதை அறிந்ததும் அவருக்கு அளிப்பதற்காக ஒரு மாலையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அந்த வீட்டு வாயிலில் காத்து நின்ருன். வீட்டினுள்ளே ஒரு பக்கம் ஆண்களும் மறுபக்கம் பெண்களும் வரிசையாக இருக்க நடுநாயகமாக பாபா வீற்றிருப்பதைக் கண்குளிரத் தரிசித்தான். அவன் பாபாவை நோக்கியபோது பாபாவும் அவனைக் கண்டார், உடனே எழுந்து வந்து, அவன் கையில் வைத்திருந்த வாடிய மாலையைத் தாமாகவே பெற்றுக்கொண்டு என்ன வேண்டுமென்று அவனைக்கேட்டார். அவனும், பாபா தனது வீட்டுக்கு எழுந்தருளி ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். பாபாவும் தான் அப்படியே செய்வதாக மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டார். அவர் பங்களூரிலிருந்து புறப்படுமுன்னர், ஒரு நாள் மாலை, அந்த ஏழையின் வீட்டுச்குச் சென்று அவன் அன்போடு அளித்த வாழைப் பழத்தைப் பெற்றுக்கொண்டு அவனையும் அவன் குடும்பத்தையும் ஆசீர்வதித்தார். அன்று முதல் அந்த ஏழையின் குடிசை அந்தச் சேரிப்பு மக்களின் யாத்திரைத் தலமாக அமைந்துவிட்டது. பாபாவின் அன்பானது இத்தகையதே. சிலர் தமது அறியாமையால் இவருக்கு விஷமிட்டுக் கொல்லவும் முயற்சித்தனர். இச்சம்பவங்களை தப்பாகக் கருதாது நஞ்சையுண்டும் வாழ்வதற்கு முடியுமா என்று தம்மைச் சோதிப்பதற்காக அவர்கள் கையாண்ட செயல் என்று பாபா கூறுவார். ஒரு விசேட திருநாள் தினத்தில் இரு பக்தர்களுடன் சொந்தக்கிராமத்தில் பாபா பல வீடுகளுக்குச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது ஒன்றைப்பெற்று வந்தார். ஒரு குறித்த வீட்டுக்குச் சென்றபோது, மற்றுமிடங்களிலும் பார்க்க உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் அவர்கள் அளித்த உணவை உண்டார்; தன்னுடன் வந்த பக்தர்கள் அந்த உணவை ஏற்காதவாறும் பார்த்துக் கொண்டார். நிலையத்திற்குத் திரும்பியதும் குறித்த வீட்டுக்காரர் தம்மை அழைத்தது ஏன் என்பதை விளக்கிவிட்டு, உண்ட உணவை வாந்தியெடுத்து விட்டார். எடுக்கப்பட்ட வாந்தியை பரிசோதித்தபோது உண்மையிலே அது நஞ்சூட்டியிருந்தது காணப்பட்டது.

புட்டபார்த்திக்கு வந்து குழுமும் பக்தர்களுக்கு உணவளிப்பது எவ்வாறென்பதும் பாபாவின் உடல்நலத்தைப்பற்றிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பதும் சுப்பம்மாவின் கவலையாகும். வந்து கூடும் பக்தர்களுக்காக சுப்பம்மா ஆற்றும் தொண்டுகளைப்பற்றி பேசிய பாபா அவருடைய அந்திமகாலத்தில் தரிசனம் கொடுப்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தார். சுப்பம்மாவுக்கு உடல்நலம் குன்றியது காரணமாக புக்கபட்டணம் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சுகயீனத்தோடும் அவர் அப்பொழுது கட்டப்பட்டு வந்த பிரசாந்தி நிலையத்தை பார்ப்பதற்கு மாட்டு வண்டியில் வந்திருந்தார். விரைவில் அவர் படுத்த படுக்கையில் கிடந்தார். வேறு இடத்திற்கு எடுத்துச்செல்ல இயலாதவாறு அவரது தேகநிலை பாதிக்கப்பட்டது. சாயிபாபாவும் பெங்களூரில் இருந்தார். அங்கிருந்து திருப்பதிக்குச் சென்றார். அதே வேளையில் புக்கபட்டணத்திலிருந்த சுப்பம்மாவின் ஆவி அகன்றுவிட்டதாக உறவினர் பேசிக்கொண்டனர். ஆனால் அன்புடையோர் சாயிபாபாவின் தரிசனம் காணுமல் சுப்பம்மா இறக்க மாட்டார் என்று கூறிவிட்டனர். திருப்பதியினின்றும் காரில் வந்த பாபா – மூன்று நாட்களுக்குப்பின் வந்து சேர்ந்தவர் சுப்பம்மாவை இருதடவை கூப்பிட்டதும் அவர் கண் விளித்தார். பாபாவின் கையைத் தன்கையால் பற்றினர். கங்கா நதித் தீர்த்தமென்று கூறி தனது கைவிரலிலிருந்து சுப்பம்மாவின் வாயில் சிறிதளவு நீர் ஊற்றினர். விடுதலை பெற்றவர்கள் வரிசையில் சுப்பம்மாவும் சேர்ந்துகொண்டார்.

நாலுபக்கத்திருந்தும் பக்தர்கள் பாபாவை நாடி வந்தனர். உடுமல்பேட்டையிலிருந்து தமது சொந்த விருப்பின்றி மற்றவர் தூண்டுதலுக்காக வந்த ஒருவர் மற்றவர்கள் செய்தது போன்று தாமும் ஒரு மாலையை பாபாவுக்கு கொடுக்க முன் வந்தார். ஆனல் பாபா அதனை ஏற்காது. ''இங்கு வருதற்கு உமக்கு மனமில்லை'' என்று கூறினர். இச்சம்பவம் அந்த நம்பிக்கையற்றவரைப் பக்தனுக்கியது. வேலூரில் சத்திரசிகிச்சைக்காக இருந்த ஒரு பெண் நோயாளியின் சகோதரன் மதுரையிலிருந்து பாபாவைத் தரிசித்து, தமது சகோதரியின் சத்திரசிகிச்சைக்கு பாபாவின் அனுமதியைப்பெற்றுச் செல்ல வந்திருந்தார். நோயாளி பாபாவின் பக்தர். பாபாவும் சில நாட்கள் அவருடன் பேசாதிருந்து விட்டு ஒருநாள் கூப்பிட்டு கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த பஸ்ஸில் வேலூருக்குப் போகும்படி கூறினர். வேலூரிலிருந்த டாக்டர், ஒரு சிறு அறியாப்பாலகனிடமிருந்து உத்தரவு பெற்றே சத்திரசிகிச்சை செய்ய தமது பெண் நோயாளி தீர்மானித்திருப்பதை கண்டித்து இகழ்ந்து கூறினர். சகோதரன் வேலூருக்குத் திரும்பிய பின்னர் மீண்டும் ஒரு பரிசோதனை நடத்தப்பட்டது. அப்பொழுது அந்தப்பெண் நோயாளிக்கு சத்திரசிகிச்சை நடவாதே நோய் குணமாகி விட்டது. டாக்டரே ஆச்சரியப்பட்டு "இந்தப் பெண்தானு அந்த நோயாளி" என்று கூறினர். இப்படியாக பாபா புரிந்த அற்புதச் செயல்கள் அநந்தமாகும்.

மைசூரில் மகாராஜாவின் மாளிகையில் பக்தனொருவனுடன் சாயிபாபாஒரு தீபாவலியின்போது தங்கியிருந்தார். சீரடி சாயிபாபாவின் அடியார்களுக்கும் கோயம்புத்தூர் மற்றும் இடங்களிலுமுள்ள அடியார்களுக்கும் தெரிந்திராத ஒரு அற்புதத்தை மைசூரிலிருந்தவாறே நிகழ்த்திக் காட்டினர். புட்டபர்த்தியில் கூடியிருந்த பக்தர்கள் பகவானின் பெரிய படம் ஒன்றை வைத்து அலங்கரித்து இரவு பகலாக தீபங்களேற்றி வழிபாடு செய்து வந்தனர். தீபாவலி இரவு கழிந்து மறுநாள் அதிகாலையில் புட்டபர்த்தியில் குழுமியிருந்த பக்தர்கள் தூரத்தே ஒரு வளைவில் காரின் வெளிச்சத்தைக் கண்டார்கள். இந்தக் கார் வெளிச்சத்தைக்கண்டு ஆற்றங்கரை வரை ஓடிச்சென்ற பக்தர்கள் ஒன்றையும் காணுது திரும்பி வந்தனர். அப்படி வந்தவர்கள் சாயிபாபாவின் படத்தைச் சுற்றியவாறு ஒரு நாகம் இருந்ததைக் கண்டு ஆச்சரியமுற்றனர். அன்று பகல் மூன்று மணி வரையும் இந்த நாகம் அப்படியே இருந்துள்ளது. பக்தர்கள் அதற்கு வழமையான பிரார்த்தனைகளைச் செய்து பாடல்கள் பாடி வழிபட்டனர். அன்று பிற்பகல் மூன்று மணிக்கு அந்நாகம் படத்திலிருந்து விலகி ஒரு யார் தூரத்துள் மறைந்து விட்டது. மைசூரிலிருந்தவாறே பக்தர்களுக்கு அவர் தீபாவலித் தரிசனம் கொடுத்தார். மைசூரிலிருந்து ஹைதராபாத், குப்பம், கரூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கெல்லாம் பாபா விஜயம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்பொழுது முதல் உங்கள் இதயங்களை பரிசுத்தமாக்கி இறைவன் குடிகொள்ளத் தகுந்த ஆலயமாக்குங்கள். உணர்ச்சிகளுக்கு இடங்கொடுத்து மேலும் மேலும் கெடுதிகளுக்குள் அமிழ்ந்தாதீர்கள். தைரியங்கொள்வீர்களாக. உங்களுக்குள்ளேயே குடிகொண்டிருக்கும் தெய்வத்தை நம்புங்கள். அவரே உங்களது உற்ற உறவினர்.''

இவ்வாறு பாபா திருச்சினுப்பள்ளியில் பக்தர்களுக்கு எடுத்துக் கூறினுர். திருச்சினுப்பள்ளியில் பாபா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகையில் ஊர்வலத்திலிருந்த கார் ஒன்றினுல் ஒரு சிறுவன் படுகாயமடைந்தான். பொலிசாரும் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். இந்த நேரத்தில் பாபாவும் வந்து அந்தச் சிறுவனைத் தொட்டார். சாயிபாபா தொட்டதும் சுகமாகிவிட்டதாக அந்தச் சிறுவன் எல்லோருக்கும் காட்டிக்கொண்டு அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்தான் பொலிசாருக்கு விசாரணை நடத்த எதுவும் இருக்கவில்லை. சாயிபாபா சென்றபின் மக்கள் கூடி அச்சிறுவனைப் பாராட்டினுர்கள். இதே ஊரில் பொதுக்கூட்டம் நடந்தபோது சாயிபாபாவின் தெய்வீகத்தன்மையில் சந்தேகங் கொண்ட ஒருவர் அங்கு இருந்தார். இதனை உணர்ந்த பாபா, அக்குறிப்பிட்ட ஆளுக்குப்பக்கத்தே இருந்த ஊமையும் செவிடுமான ஒரு சிறுவனை மேடைக்கு அழைத்து ஒலிபெருக்கிமுன் நிற்க வைத்து ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டதும் ஊமையும் செவிடுமான அச்சிறுவன் உடன் ''வேங்கடநாராயணன்'' என்று ஒலிபெருக்கியில் கூறினுன். சந்தேகப்பட்டவர் தலை குனிந்தார்.

திருச்சினுப்பள்ளியிலும் கரூரிலும் மக்கள் போட்டிபோட்டு பாபாவை வரவேற்றுபசரித்தனர். எங்கும் மகரதோரண அலங்காரம் காணப்பட்டது. ஆனுல் இந்த அலங்காரங்களை அவர் சட்டை செய்யாது மக்களுடன் சுதந்தரமாக கலந்துறவாடினுர். ஏழைகள் செல்வரென்ருே - உயர்ந்தவர் தாழ்ந்தவரென்ருே பாராது சகலருடனும், பிரதானமாக ஏழைகளுடன் கலந்து கொண்டார். ஆசையால் நிரம்பி வழியும் பெருமை படைத்தவர்களை விலக்கி, உள்ளன்போடு வழிபாடியற்றும் ஏழைகளுடன் கூடிக்குலவினுர். நற்செயல்கள் என்னும் பழங்களையும் பரிசுத்தமான இதயத்தையுமே தாம் விரும்புவதாக பன்முறை பாபா எடுத்துக் கூறினுர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி வழிபாடு

எந்த இடத்திற்குச் சென்றிருந்தாலும் தசரா விழாக்காலத்தில் (நவராத்திரி) பாபா புட்டபர்த்தியில் அநேகமாக தங்கியிருப்பார். சக்கம்மாவும் மற்றும் பக்தர்களும் சக்திவழிபாட்டிற்கான ஏற்பாடுகளைச் சிரத்தையுடன் சய்வர். பாபாவே மேலான சக்தியாக விளங்குவார். கலைச்செல்வியான சரஸ்வதியாகவும் திருச்செல்வியான இலக்குமியாகவும் சாரதை, அன்னபூரணி, காளி ஆகிய சக்திகளாகவும் பாபாவே தோற்றுவார். புட்டபர்த்தியில் நடக்கும் மிக உன்னதமான தசரா விழாவின் போது பக்தகோடிகளுக்கெல்லாம் அவரே அன்னையாகக் காட்சி தருவார். குழந்தைகளுடன் அவர் இருக்கும்போது அதிக ஆநந்தமடைவார். குழந்தைகளுக்கும் ஆநந்தத்தையளிப்பார். அவர்களுக்கு இனிப்புவகைகளை – லட்டுக்களைத் தமது கையசைப்பினால் பெற்றுக்கொடுத்து மகிழ்விப்பார். தமது பக்தர்களது குழந்தைகளுக்கு நாமகரணம் செய்வதும் வித்தியாரம்பம் செய்து வைப்பதுமுண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் அவரவர் பாரம்பரியத்துக்கு ஒத்தவகையில் ஆத்மீக பூரண பேற்றைக்காண திறவுகோல்களான "ஓம் நமோநாராயண", "ஓம் நமசிவாய" "ஓம் ஸ்ரீநிவாசாய" தாரகமந்திரங்களைப் போதித்து வைப்பார். இந்த நவராத்திரித் தினங்களில் ஒவ்வொரு தினமும் ஒவ்வொருமுறையில் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் பாபா பவனி வருவார். இப்பவனிக்காலத்தில் பக்தகோடிகளுக்குப் படங்கள், சின்னங்கள், இனிப்பு வகைகள் முதலியவற்றினைக் கொடுப்பார். பல்லக்கில் பவனிவரும்போதெல்லாம் அவரிலிருந்து விபூதி உதிர்வதைக் காணலாம். இவர் தன்னை நாடி வருபவர்கள் எல்லோரது வாழ்விலும் புரட்சிகரமான மாற்றங்களைச் செய்து வந்தார்.

சாயிபாபா ஒரு இரவு சித்திராவதி நதிக்கரையில் இருந்த குன்றின்மீது இருந்தபோது பதினேழு திருடர்கள் தாம் களவாடிய பொருள்களைப் பகிர்ந்துகொண்டிருந்ததைக் கண்டார். அவர்களும் இவரைக்கண்டு, இவரிடமிருந்து விபூதி, பிரசாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதும் அழிவற்ற சாட்சியாக உள்ள ஒருவர்முன் தாம் நிற்பதை உணர்ந்தனர். இவர்கள் சாயிபாபாவுடன் புட்டபர்த்திக்கு வந்து நேர்மையான முறையில் உழைத்து வாழ்ந்தனர். இங்கு திருடர்களேயும் அவர் நெறிப்படுத்திஞர்.

பக்தர்களுக்கு இடம் போதாமையால் கோயிலின் முன்புறத்தே ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது. அதுவும் போதாமையால் கோயிலின் பின்புறத்தே ஒரு அறையும் குளியலறையும் கொண்ட தனிக்கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இந்த இடத்திலேதான் சாயிபாபா சத்திரசிகிச்சைகள் பல செய்தார். சென்னேயிலிருந்த தமது பக்தரான ஒரு நோயாளி, தாம் கொடுத்த தாயத்தை காணமற் போக்கிவிட்டாரென்றும் அது தம்மிடம் வந்துள்ளதென்றும் அதனைத் தாம் சென்னைக்குக் கொண்டு சென்று நோயாளியிடம் சேர்ப்பிக்கப்போவதாகவும் ஒரு இரவு கூறிஞர். சுற்றியிருந்த பக்தர்கள் இந்தப் பிரயாணத்தை அவர் அந்த வேளேயில் மேற்கொள்வது ஆகாதெனத் தடுத்தனர். பாபாவோ குறித்த தாயத்தை அந்த நோயாளிக்குச் சென்னே சென்று கொடுத்துத் திரும்பிஞர். பழைய ஆலயத்தில் மக்களுடன் ஒருவராக தாராளமாக பாபா உலாவுவார் - பாட்டுக்களேத் தாமே இயற்றிப்பாடுவார். நான் காண்டுகளுக்குமுன் ஒரு பக்தை காணமற் போக்கிய ஜெபமாலேயொன்றை பாபா மணலிலிருந்து எடுத்துக்கொடுத்ததுடன் அப்பக்தையின் ஆத்மீக சாதனேயையும் பாராட்டிஞர். பக்தர் கூட்டம் பெருகப்பெருக, அடியார்கள் வேண்டுதலுக்கும் வற்புறுத்தலுக்கும் இணங்கி, புதிய மண்டபம் அமைக்க பாபா அனுமதித்தார். அமைதியின் உறைவிடம் என்னும் பிரசாந்தி நிலேயம் பக்தர்களின் முயற்சியால் உருவாகியது.

## அமைதியின் உறைவிடம்

பக்த கோடிகள் வந்து குழுமுதற்கு அற்புதங்களேச் செய்து அப்பக்தர்களது மனத்திலே நம்பிக்கையை ஊட்டுவதில் மாத்திரம் பாபா திருப்திப்படவில்லே. ஒழுக்க நெறி வழிவாழ்வு-பற்றின்மை - பொறுமை - சாதனே - ஜெபம்-தியானம் இவைகளேத் தான் அவர் பக்தர்களிடம் கேட்டுக்கொள்வார். நாலாபக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்களிலிருந்தும் பக்தர் கூட்டம் பெருகி வர வர – விழாக் காலங்களான நவராத்திரி (தசரா) - மகாசிவராத்திரி, பகவான் ஜனன தினமான (கார்த்திகைத் திருவாதிரை) நவம்பர் 23 ந் தேதிகளில் வந்து குவியும் பக்தர்களுக்கு இருக்கும் இடம் போதாதிருந்தது. பக்தர்கள் வேண்டினுர்கள்—பாபாவும் தலையசைத்தார்; புதிய உறைவிடம் எழுந்தது. அமைதியின் உறைவிடமான பிரசாந்தி நிலையம் மக்கள் மனத்தே பக்திப்பரவசச் சூழ்நிலையைத் தானுக உருவாக்கக் கூடிய முறையில் அமைந்துள்ளது. அதனைச் சூழவுள்ள இயற்கையமைப்புக்களும் அவ்வாறே. இந்நிலையத்தின் பூங்காவிலே வளர்ந்து வரும் ஆலமரத்தின் மகிமையும் ஒன்றுண்டு. 1959ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் பக்தர்களை சித்திராவதி ஆற்றுப்படுக்கைக்கு அழைத்துச் சென்று அங்கே புத்தபகவான் பற்றியும் போதிவிருட்சம் பற்றியும் ஆத்மீக உணர்வை அறிய விரும்புவோர் இத்தகைய போதிவிருட்சங்களின்கீழ் தபசியற்றி அருள்பெறுவரென்றும் பாபா கூறினுர். அந்த இடத்தில் மணலிலிருந்து சுமார் பதினைந்து அங்குல நீளமும் பத்தங்குல அகலமும் கொண்ட ஒரு செம்புத் தகட்டினை எடுத்த பாபா, அதனைத்தாம் ஒரு ஆலங்கன்றின் அடியில் வைக்கப்போவதாகவும் ஆத்மீக நெறியில் குறித்தளவு தகுதிபெற்ற யோகிகள் தாமாகவே இந்த மரத்தடிக்கு வந்து சேருவார்கள் என்றும் கூறினுர். இத்தகட்டில் பலருமறிந்ததும் புதியதுமான பல மொழிகளில் எழுத்துக்கள் காணப்பட்டன. 1959ம் ஆண்டு ஜூன் மாதம் 29ந் தேதி இந்தத் தகடு பூங்காவில் நாட்டப்பட்ட ஆலங்கன்றின் அடியில் வைக்கப்பட்டது.

1950ம் ஆண்டு நவெம்பர் 23ந் தேதி—பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 24வது அவதாரதினத்தில் அமைதியின் நிலையமான பிரசாந்திநிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பாபாவே சகல வேலைகளையும் நேரடியாக இருந்து செய்வித்தார். சுமார் இரண்டாண்டுகள் இதனைக் கட்டுதற்கு எடுத்தது. இக்கட்டட வேலைகள் நடந்தபோது மனித சாதனையினுல் ஆகாத பல செயல்களை பகவான் நிறைவேற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண்டபத்திலே மக்கள் பிரார்த்தனைக்காக, வழிகாட்டுதற்காக சீரடி சாயிபாபாவினதும் சத்யசாயி பாபாவினதும் வர்ணப் படங்களும், சீரடிசாயிபாபாவின் வெள்ளி உருவமும் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் ஒரு பிரார்த்தனை மண்டபமேயன்றி வேறல்ல. விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் நடப்பதுபோன்று ஒழுங்கான பூசைகள் நடைபெறுவதில்லை. காலை மாலை நேரங்களில் பஜனை மாத்திரம் நடைபெறும். பிரார்த்தனை மண்டபத்தில் தெய்வமூகூர்த்தங்களது பல்வேறு தோற்றங்களைக் கொண்ட படங்களும் ஸ்ரீ இராமகிருஷ்ணர்—ஸ்ரீவிவேகாநந்தர் —ஸ்ரீ இராமானுஜர்—ஸ்ரீசங்கராச்சாரியார் — குருநானக் — பக்தைமீரா போன்ற சாதகர்களதும் மகாபுருடர்களதும் படங்களும் வைக்கப்பட்டுள்ளன. இந் நிலையத்திலுள்ள இரு அறைகள் பக்தர்களுடன் பாபா உரையாடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. மாடியில் பாபா தங்கியிருப்பார். முகப்பிலுள்ள தலைவாயிலிலிருந்து மக்களுக்கு அவர் தரிசனமளிப்பார். அத்தரிசனமளிக்கும் முகப்பில்அழகான கிருஷ்ண விக்கிரகம் வைக்கப்பட்டுள்ளது. சமாதானக் கொடியென்னும் ''பிரசாந்திபத்க'' ஏற்றி வைக்கப்படும் காலத்தில் அக்கொடிச்சீலையிலுள்ள சின்னத்தின் கருத்தைப் பக்தர்களுக்கு பாபா விளக்குவார். யோகியின் சாதனைகளைக் காத்து நிற்க சக்திகளும் யோகசாதனைகள் மூலம் உள்ளத் தாமரை மலர்ந்து ஒளி வீசும் நிலையை அக்கருத்துக் கொண்டதாகவும் கொடியில் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் அந்தக் கொடியை தம் உள்ளங்களில் ஏற்றிவைக்கவேண்டுமென பாபா அறிவுறுத்துவார். பிரார்த்தனை மண்டபத்தின் மூன்று வாயில்களின் தத்துவங்களையும் பாபா விளக்குவார். சமாதானக் கோயிலுக்குப்புகும் 'சூட்சுமவாயில்' வழியாகப் புகுந்தவர் ஆனந்த வாழ்வை அடைவர். ''நான் உங்களுடன் இருக்கின்றேன். நான் இருக்கும்போது நீங்கள் ஏன் பயப்படவேண்டும்! என்னில் நம்பிக்கை முழுவதையும் வையுங்கள். உங்களை வழிப்படுத்தி நான் காப்பாற்றுவேன்'' என பக்தர்களுக்கு பகவான் அபயமளிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரசாந்தி நிலையத்தில் பிரார்த்தனை மண்டபத்திலுள்ள மணி காலை 4-30 மணிக்கு ஒலிப்பதுமுதல் தின சுபகருமங்கள் ஆரம்பிக்கின்றன. காலை 4-15 முதல் 6-00 மணிவரை பிரார்த்தனையானது ஓம் என்னும் நாத ஒலியோடு ஆரம்பித்து பின் மௌன பிரார்த்தனையாக நடக்கும். ஒவ்வொருவரதும் ஒழுக்க முறைகளுக்கு தெய்வபிரார்த்தனை அவசியமெனப் பாபா வற்புறுத்திக் கூறுவார். பக்தகோடிகள் பிரார்த்தனையிலிருக்க, பாபாவோ வந்துகுவியும் பக்தர்களுக்கு தரிசனமளித்தும் அபயமளித்தும் ஆசீர்வதித்தும் வருவார். நிலையத்துக்கு வரும் பக்தர்கள் அன்போடு பாகஞ்செய்து கொண்டுவரும் உணவையும் சாதாரண உணவையுமே உண்கின்றார். அவர் உல்லாச வாழ்வு வாழவில்லை. நிலத்தில் விரிக்கப்பட்ட படுக்கையிலே துயில்கின்றார். எல்லோருக்கும் மண்டபத்திலே தரிசனம் கொடுக்கின்றார். மண்டபத்திற்கு வரும்போது பக்தர்கள் அவரது பாதாரவிந்தங்களைத் தொடுவதற்கும் அனுமதிக்கின்றார். பக்தியோடு-நம்பிக்கையோடு பிரசாந்தி நிலையம் வருவோருக்கு பகவானின் அருட்கடாட்சம் கிடைக்கின்றது. பாடப்படும் பாட்டுக்கள் எல்லாம் ஸ்ரீ சத்ய சாயிபாபாவைப் பற்றியதாகவோ அல்லது சீரடி சாயிபாபாவைப் பற்றியதாகவோ மட்டுமன்றி காலாதிகாலமாக உள்ள எல்லாத் தெய்வங்களது உண்மைகளையும் அடக்கியவைகளாகவும் உள்ளன. இவைகள் எல்லாம் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய எல்லா மொழிகளிலும் படிக்கப்படும். ''ஆண்டவன் திருநாமங்களைச் சொல்லிச்சொல்லிப் பாடும்போது பலத்தசத்தத்துடன் கைகளைத் தட்டித்தாளம் போடுவதால் உள்ளத்திலே இருக்கும் ஆசைகளும் வெறுப்புக்களும் துரத்தப்பட்டுவிடும்'' என்று பகவான் கூறுவார்.

## எல்லையற்ற கருணை

''வாழ்க்கையென்னும் அடர்ந்த காட்டிலே ஆண்டவனின் நாமத்தைக் கூறி வழிபடுங்கள். அது போதும். இருதயமான உங்கள் பண்ணையில் நன்கு சாகுபடி செயயுங்கள். உள்ளமே உங்கள் கலப்பையாகட்டும். செயலும் நடுநிலைத்திண்மையுந்

தான் கலப்பையை இணைத்து உழுதற்குதவும் காளைகளாகும். பகுத்தறிவென்னும் சவுக்கை எடுத்துக்கொண்டு உங்கள் இதய மாரி பண்ணையை உழுங்கள். தைரியமே எல்லாப் பசளைகளிலும் சிறந்தது. தெய்வீக அன்பே விதைகளாகட்டும். பக்தியே மழையாகட்டும். உணர்ச்சிகள் தான் களைகள். சர்வவியாபகியான ஆண்டவனுடன் இணைவதே அறுவடையாகும்''. இவ்வாறெல்லாம் பகவான் பக்தர்களுக்கு அறிவுரை நல்குவார். முன்னைய நாட்களில் செய்ததுபோன்று பிரசாந்தி நிலயம் அமைக்கப்பட்ட பின்னரும் இடையிடை பக்தர்களை சித்திராவதி நதிக்கரைக்கு பாபா அழைத்துச் செல்வார். சித்திராவதி ஆற்றங்கரைக்கு மட்டுமன்றி, கோதாவரி-சுவர்ணமுகி—வைகை ஜமுனை முதலிய ஆற்றங்கரைகளிலும் பாபா பக்தர்களுக்கு கூட்டங்களை நடாத்தி போதனைகளை அருளியிருக்கின்றார். பக்தர்களோடு சென்னை— மசூலிபட்டணம்- கன்னியாகுமரி-கோவளம் முதலிய ஊர்களில் கடற்கரைகளிலும் இருந்து அருள் புரிந்தது மட்டுமன்றி படங்கள், சொரூபங்கள், விபூதி மற்றும் பொருள்களையும் பக்தர்களுக்கு வழங்கியுமுள்ளார். இவ்வாறு கூட்டங்கள் நடக்கும் காலத்தில் மணலுக்குள் கையைவிட்டு கிருஷ்ண விக்கிரகங்களை எடுப்பார். பின் அவற்றை பக்தர்களுக்கு வழங்கியும் விடுவார். சுவர்ணமுகி ஆற்றிலிருந்து இராமரது விக்கிரகத்தை எடுத்து வழங்கியுள்ளார். வேங்கடகிரியில் வழிபாட்டில் அது வைக்கப்பட்டுள்ளது. ஆற்றங்கரைகளிலோ அல்லது கடற்கரைகளிலோ பக்தர்களுடனிருக்கும் போது அவர்களுக்கு பாபா அமிர்தம் வழங்குவதுண்டு.

1958ம் ஆண்டு டிசம்பர் 21-ந் தேதி கேரளத்திற்குப் பாபா விஜயம் செய்தபோது திருவநந்தபுரத்திலிருந்து ஏழு மைல் தூரத்திலிருந்த கோவளம் கடற்கரைக்குச் சென்றிருந்தார். கடற்கரையில் பக்தர்களுடன் கூடியிருந்தபோது பஜனை நடந்தது. இடையில் மணலுக்குள்ளிருந்து சந்தணக்கட்டையில் செதுக்கப்பட்ட அழகிய கிருஷ்ண விக்கிரகமொன்றினையும் கிருஷ்ணருடைய உருவம் பொறித்த ஒரு மோதிரத்தையும் எடுத்தார். இங்கும் பக்தர்களுக்கு அமிர்தம் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவலி தினங்களில் பத்தர்களது குழந்தைகளுக்கு வெடிகள் கொடுப்பார். புத்தாண்டுக் காலத்திலும் தமது ஜனன தினத்திலும் பக்தர்களுக்கு தமது ஆசீர்வாதத்தைத் தெரிவிப்பார். நவராத்திரிவிழா (தசரா) வெகுவிமரிசையாக கொண்டாடப்படுவதுண்டு. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு விதமாக அலங்காரங்கள் விளங்கும். வெற்றித்தினமான பத்தாம் நாள் விஜயதசமி வெகுசிறப்பாகக் கொண்டாடப்படும்.

காவேரி நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமையால் குழந்தைப்பேற்றடைய தயாராக இருந்த ஒருதாய் உதவிக்கு மருத்துவச்சியைத் தருவிக்க முடியாது கஷ்டமடைந்தனள். அந்த வேளையில் சிவபெருமான் மருத்துவச்சியாக வேடந்தாங்கி அப்பெண்ணுக்கு உதவியளித்தார். இதேபோன்று பாபாவும் பன்முறை தாயாகிச் சேவை செய்துள்ளார். வயிற்று நோக்காடு கண்டு வேதனைப்படும் தாயின் நோக்காட்டை சில சமயங்களில் தாமே ஏற்றும், சில சமயங்களில் கூடுவிட்டுச் சென்று மருத்துவச்சியாக மாறி சேவை செய்துமுள்ளார். மிகத்தூரத்திலுள்ள பக்தைகள் கூட இத்தகைய வேளைகளில் பாபாவின் உதவியைப் பெற்று ஆறுதலடைந்துள்ளனர்.

பாபா இருந்த இடத்திலிருந்து இருநூற்றைம்பது மைல்களுக்கப்பால் ஆஸ்பத்திரியொன்றிலிருந்த பெண்ணுடைய குழந்தை பிறந்த ஆறுவது நாள் கொப்பூழ்க்கொடி முறையாக வெட்டப்படாமையால் ஏற்பட்ட ஏற்புக்காரணமாக இறந்துவிட்டது. தாய்க்கும் கடுமையான வருத்தமேற்பட்டது. இந்த வேளையில் புட்டபர்த்தியிலிருந்த பாபாவுக்கு நிலைமை விளங்கிவிட்டது அவர் கூடுவிட்டுச் சென்று அத்தாய்க்கு அபயமளித்து உதவி செய்தார். பாபா தமது கூட்டுக்குத் திரும்பியதும் விபரமாக இதுபற்றிக் கூறினார். மூன்றும் நாள் அந்த ஊரிலிருந்த நோயாளி தான் கண்ட காட்சியையும் தான் குணமடைந்துள்ளதையும் பாபாவுக்கு கடிதமூலம் அறிவித்தார். தசராவின்போது தாயாக தாய்க்கோலங்கொண்ட சாயி வழிபாடு நடப்பது பார்த்தனுபவிக்கக் கூடியகாட்சியாகும். சிவராத்திரியும் இதுபோன்று விசேடித்த ஒரு திருநாளாகும். பாபா சமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தந்திருப்பது சிவனே வந்து அமர்ந்திருப்பதுபோல் விளங்கும். அன்றைய தினத்தில் பாபாவின் கைகள் — முன்நெற்றி - கால்விரல்கள்-முகம் ஆகியவற்றிலிருந்து விபூதி சிந்திக்கொண்டேயிருக்கும். 1950-ம் ஆண்டுமுதல் புட்டபர்த்தியில் சிவராத்திரிவிழா விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. பாபாவின் வயிற்றிலிருந்து சிவலிங்கங்கள் இத்தினத்தில் வெளிவரும் இப்படியாக சிவராத்திரிக் காலங்களில் பாபாவின் வயிற்றிலிருந்து வாய் வழியாக வரும் லிங்கங்கள் அளவுகள் - பருமனில் வித்தியாசமுடையனவாகவும் தொகைகளும் வித்தியாசமாயும் இருக்கும். இப்படியாக வெளிவரும் லிங்கங்கள் மூன்று, ஐந்து ஏழு அல்லது ஒன்பதாக இருக்கும். எல்லா லிங்கங்களும் அடித்தளத்தோடு கூடியவைகளாக - விபூதி அணிவிக்கப்பட்டவையாக விளங்கும். எங்கு எந்த இடத்தில் எந்த நேரத்தில் எந்த விதமாக வழிபட்டாலும் ஆங்கு பாபா துணைநிற்பார். ''ஆண்டவனில் நம்பிக்கை வையுங்கள். அவரை அழையுங்கள். நான் இங்கே இருக்கிறேன்'' என்று பதில் உடன் தந்து பக்கத்தில் இருப்பார். நீங்கள் என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் உடன் வந்து நிற்பார்'' என்று பகவான் பக்தர்களுக்கு அறிவுறுத்துவார்.

## தேகபிணி — ஆத்மபிணி

பிரசாந்தி நிலையத்திற்குப் பின்னால் உள்ள மலைக்குன்றிலே 1957 அக்டோபரில் ஒரு ஆஸ்பத்திரி கட்டப்பட்டது. அந்தக் கட்டட அத்திவாரக்கல் நாட்டுவிழாவின்போது - எல்லோரும், பணக்காரனாகவோ, ஏழையாகவோ, கற்றறிந்தவனாகவோ மூடனாகவோ, (பத்திமானாகவோ) ஆஸ்திகனாகவோ நாஸ்திகனாகவோ — எப்படியிருந்தாலும் நோய்களுக்கு ஆட்பட்டவரே யாவர் என்றும் ஆண்டவனே மக்களுக்கு சேவைபுரிய வழிகாட்டியாக பலமுறைகளிலும் அவதாரம் எடுத்துக்காட்டிய நெறிப்படி மக்கள் நடப்பதற்குரிய தருணங்களை உதவுவதற்கு இத்தகைய ஆஸ்பத்திரிகள் வேண்டுமென்றும் தேக உபாதைகளுக்கு ஆஸ்பத்திரியை நாடும் மக்கள் அது முடிந்து ஆத்ம உபாதையேற்படும்போது பிரசாந்தி நிலையத்துக்கும் வந்துதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்வர் என்றும் பகவான் கூறினர். பாபாவின் மேற்பார்வையில் சகல கட்டட வேலைகளும் நடந்தேறின. மிகவும் கஷ்டமான நோய்களெல்லாம் சுலபமான முறையில் பாபாவின் அருளினல் தீர்க்கப்பட்டுள்ளன. பாபாவே ஒரு பெரும் வைத்தியராவர். நிலையத்திலுள்ள ஒவ்வொரு வேலையையும் நேரடியாக பாபாவே கவனித்து, கட்டளையிட்டு, வழிகாட்டி செய்விப்பார். பக்தர்களும் அவரது அறிவுறுத்தல்களை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருப்பர்.

இயற்கை எழிற் காட்சிகளை பாபா தாமும் விரும்பி அனுபவிப்பதுடன் பக்தர்களுக்கும் அக்காட்சிகளைக் காண்பிப்பார். அழகே ஆநந்த மென்பார். கால் நடைகளில் மிகவும் பற்றுள்ளவர். பிரசாந்தி நிலையத்திலுள்ள கால்நடைப் பண்ணை இப்பிராந்திய மக்களுக்கு ஒரு முன்மாதிரியாகும். ஜீவகாருண்ய சீலரான பாபா மிருகங்களையும் அன்போடு தாமே வளர்த்தும் வருகின்றார். இந்தத் துறையில் எத்தனையோ கதைகள்—அவரது அன்பையும், காருண்யத்தையும் விளக்குபவை இருக்கின்றன. படைக்கப்பட்ட சகல ஜீவராசிகளும் ஒன்றே என்பது பாபாவின் கொள்கை. எந்த ஜீவனையும் துன்புறுத்தலாகாது. ஒவ்வொரு மனிதனும் நாராயணனையே குறிப்பதால் மனிதன் தனது ஆத்மீக பயிற்சியால்—ஒழுக்கமான வாழ்க்கையினல் — சுயகட்டுப்பாட்டினல் — பயன்கருதாச் சேவையால் தமது அருளைப் பெறமுடியும் என்றும் ஒரு மிருகமோ மனிதனே தமது அருளைப் பெற்றால் அது அதன் விதியின் காரணமாகவே யென்றும் பாபா கூறுவார். பாபாவின் அருள் இருந்தால் எல்லாம் சித்திக்கும். அவர் அருள் கிடைக்காவிட்டால் புட்டபர்த்திக்குச் சென்று அவரைத் தரிசிக்கவும் இயலாது. அவரைத் தரிசிக்க பக்தியோடு முயன்றால் எல்லா இடர்களும் விலகி பிரயாணமே சகல வசதிகளுடனும் செய்யக்கூடியதாக அமைந்துவிடும். பாபாவை ஒருமுறை சந்தித்து அருள்பெற்றவர்–தனது குறைகளை உணர்ந்து திருந்தவும் தன்னில் உறங்கிக் கிடக்கும் ஆண்மை, தத்துவம், திறமை, சலகவற்றையும் வெளிக் காட்டவும், தனது கடமைகளை உணர்ந்து நடக்கவும் கூடியவராகிறார். எல்லாம் அறிந்து—எல்லாம் உணர்ந்து-எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக பக்தர்களுக்கு அருளும் அருளொளியாகி பிரசாந்தி நிலயத்தில் பாபா விளங்குகின்றார். மனித சமுதாயம் முற்னேற்றப் பாதையில் செல்ல பாபா ஒருதீப ஒளியாகத் திகழ்கின்றார்.

## உண்மை ஒளி

அகில இந்திய திவ்ய ஜீவன சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவின்போது (1957ல் வேங்கடகிரியில் நடந்தது) பகவான் பாபா தலைமை தாங்கினார். ஆத்மீக மலர்ச்சி மிக மிக அவசியமென்று சங்கொலி எழுப்பினார். திவ்ய ஜீவன சங்கத்தின் கிளைகள் அமைப்பாளராக இருந்த சுவாமி சச்சிதானந்தா, பகவான் பாபாவைப் பற்றிக் கொண்டிருந்த தவறான கருத்து இம் மகாநாட்டில் சிதறடிக்கப்பட்டது. மாநாட்டின் ஆரம்ப தினத்தன்று வேங்கடகிரி மாளிகைக்கு முன் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு பகவானுக்காக வைக்கப்பட்டிருந்தது. ஆனல், பகவானே, இம்மாநாட்டுக்குச் சமுகமளித்திருந்த சுவாமி சதானந்தா, சுவாமி சச்சிதானந்தா, சுவாமி ஆத்மசுவரூபானந்தா, சுவாமி ஸ்ரீநிவாசானந்தா போன்ற யோகிகளுடன் மாநாட்டுப் பந்தருக்கு நடந்து செல்வதையே விரும்பினார். ஆடம்பரத்தை அவர் விரும்பவில்லை யென்பதைக் கண்ணியமாக எடுத்துக்காட்டிவிட்டார். சுவாமி சச்சிதானந்தா கொடியேற்று விழாவை நடாத்த, பதஞ்சலி முனிவரின் யோகதரிசனம், சன்மார்க்கதீபம், மகாசக்தி முதலிய நூல்களின் ஆசிரியரான சுவாமி சதாநந்தா மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். பாபாவைப் பற்றிய தவறான பிரச்சார துண்டுப் பிரசுரம் சிலரால் இக்கூட்டத்தில் விநியோகிக்கப்பட்டது. பணக்காரருக்கே பாபாவின் அருள் உண்டென்றும் பாகுபாடு காட்டுபவரென்றும் கூறும் அத்துண்டுப் பிர்சுரங்கள் பற்றி மாநாட்டிலே சுவாமி சதானந்தா கண்டித்தார். ஆத்மீக வழியில் தங்களை வழி நடத்திச் செல்வதற்கு பகவான் சாயிபாபாவை அழைத்த அமைப்பளார்களையும் பிரதிநிதிகளையும் சுவாமி பாராட்டினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டிலே தலைமை தாங்கிய பாபா பேசியபோது, உலகத்தின் மிக நுண்ணிய ஜீவராசிமுதல் சகலத்திற்கும் சத்தியம்-அன்பு —ஜீவகாருண்யம் என்னும் முகிலிலிருந்து பெய்யும் மழையே திவ்விய ஜீவனம் என்றும், பாலில் நெய் இருப்பான் போன்று உலோகாயதத்திஞல் சூழப்பட்டு பொதிந்து கிடக்கும் மாயையின் பின்னே உண்மை அல்லது தெய்வீகம் உண்டென்றும் அதனை அடைவதே தெய்வ வாழ்வு என்றும், பாலைக் கடைந்து வெண்ணெயைப் பிரிப்பது போல நற்செய்கை—நல்லோர் சேர்க்கை என்பனவற்றால் மனத்தைத் துருவித் துருவி, எல்லையற்ற ஆத்மீகத்திற்கும் உலோகாயதத்துக்கும் இடையில் ஊசலாடும் மனிதனது மனத்தினை ஆக்கிரமித்துள்ள ஆசைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் நான் எனும் அகந்தையையும் கழைந்து பரிசுத்த நிலைமையை அவர்களது உள்ளத்தே புகுத்தி விடுதலே திவ்யஜீவன சங்கங்களது கடமைகளென்றும் வெகு அழகாக—ஆணித்தரமாக வற்புறுத்திஞர். ஆவல்—துக்கம்—அறியாமை ஆகியவற்றின் ஆணிவேரைக் கல்லியெறிந்து மக்களிடையே சமத்துவம்—அன்பு ஆகியவற்றைப் புகுத்தி எல்லோரையும் அருளுக்குப் பாத்திரர்களாக்குவதும் இத்தகைய சங்கங்களது தொண்டுகளாகுமென்றும் பாபா வலிந்துரைத்தார்.

## முக்குணம்

முக்குணங்களுக்கும் ஆட்பட்ட மனிதனை ஒரு மண்ணெய் விளக்கைச் சுட்டிக்காட்டி உதாரணத்துடன் பகவான் கூறியது மாநாட்டின் இரண்டாவது நாள் காலையில் நடைபெற்றது. சத்வகுணம், தமோகுணம், ரஜோகுணம் என்னும் மூன்றும் பற்றிக் கூறிய விடத்து, விளக்கின் சிம்மினிதான் சத்வகுணமென்றும் உள்ளேபடர்ந்துள்ள ஓட்டைதான் தமோகுணமென்றும் வெளியில் படிந்துள்ள தூசிதான் ரஜோகுணமென்றும் அழகாகக் கூறி முக்குண விளக்கத்தை மாநாட்டினருக்குத் தெளிவாக்கிஞர். சைவசமயமானது எந்தவிதமான தாக்குதல்களையும்—கலாச்சாரப் புரட்சிகளையும்—பிறநாட்டினர் படையெடுப்புக்களையும் எதிர்த்துச் சமாளித்து இன்றுவரை நிலவிவருதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் ஆத்மீகத் தலைவர்களது தொண்டுகளே முதற்கண் காரண மாகுமென்றும் அத்தலைவர்கள் சமயப்பொக்கிஷங்களைக் காத் தும் நிலையான சத்தியத்தை மக்களுடைய உள்ளங்களில் புன ருத்தாரணம் செய்தும் வந்தனரென்றும் அன்பெனும் தீபஒளி எல்லோர் இதயங்களிலும் பிரகாசிக்க வேண்டுமென்றும் பக வான் விளக்கினர். மறுதினம் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசியபோது, "தெய்வத்தின் கரங்களில் நீங்கள் எது வாக இருக்க விரும்புகின்றீர்கள்?" என்று கேள்விகேட்டு, அதற்கு விடையாக தாமே "புல்லாங்குழல்" என்றும் பதில ளித்து, எல்லாவற்றையும் துறந்து இறைவனையே கலந்தவிடும் வழியினை எல்லா மக்களும் நாடிக்கொள்வது அவசியமென்றார்.

"இறைவனுடன் இரண்டறக் கலத்தல்" பற்றிப்பேசிய சுவாமி சதானந்தாவும் ஆந்திரதேசத்தின் விற்பனரான பண்டி தரொருவரும் பகவானினுல் தாம் கவரப்பட்டதை ஒப்புக் கொண்டனர். "பாபாவைப்பற்றி பலவிதமான பேச்சுக்களைக் கேட்டேன். உண்மையறிய—அவரைப் பரிசோதிக்க எண்ணியே இம்மாநாட்டிற்கு வந்தேன். வந்தவிடத்தில் நானே பரிசோ திக்கப்பட்டேன். என்னுள்ளத்தினுள்ளே நிறைந்த தெய்வீகத் தினை உணர்ந்தேன். என் பிழைக்கு பாபாவிடம் மன்னிப்புக் கோருகின்றேன்" என்று அந்தப் பண்டிதர் கூறினர். மாநாட் டுக்குவந்த அறிஞருடனும் மக்களுடனும் பாபா கலந்துரையா டினர் எல்லோருக்கும் அன்னம் வழங்கினர். பாபா பிறப்ப தற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே தம் வாழ்க்கையில் நடந்தவொரு அந்தரங்கவிடயத்தை பாபா கூறினரென்றும் எவ்வாறு அந்தவிடயம் அவருக்குத் தெரியுமெனத் தாம் கேட்ட தாகவும் அதற்கு "நான்பிறந்தேனு? நான் இறப்பதுண்டோ?" என்று பாபா தமக்கு கேள்விமூலமே விடையளித்தாரென்றும் சுவாமி சச்சிதாநந்தா கூறியுள்ளார். பாபா ஒரு மந்திரவாதி என்னும் தவருன தமது அபிப்பிராயத்தையும் சுவாமி சச்சி தானந்தா மாற்றிக் கொண்டார். பகவான் புட்டபர்த்திக்குத் திரும்பியபோது அவருடன் சுவாமி சதானந்தாவும் சுவாமிசச்சி தானந்தாவும் வந்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தனுக்கபயம்

ஒரு நாள் மாலை சுவாமிசதானந்தாவையும் மற்றும் பக்தர்களேயும் நிலையத்தின் பின்னுக உள்ள இயற்கைச்சுனைக்கு பகவான் அழைத்துச் சென்றுர். அங்கு பல விடயங்களையும் பற்றி பேசியபோது மனிதனில்—மிருகங்களில்—தாவரங்களில்—கல்லில் சைதன்ய நிலைபற்றிக் கூறினுர். உபநிஷதங்களில் இருந்து பல மேற்கோள்களை சுவாமி சதானந்தா கூறி பாபா கூறிய கருத்துக்கள் இந்தியாவின் பண்டைய நூல்களில் பொதிந்துள்ளன வென்றுர். "அவற்றை பழமை என்று நீர் கூறுகின்றீரா? எல்லாம் யாம் அறிவோம், காலத்தையும் எல்லையையும் கடந்தவன் நான்" என்று உடனே பாபா அதிகாரத்தோடு பதிலளித்தார். இதன்பின் கோடைக்கானலுக்கு பாபா சென்று ஆறு வார காலங்கள் தங்கினுர். இவருடன் சுவாமி சதாநந்தா, சுவாமி சச்சிதாநந்தா ஆகியோரும் பிறரும் சென்றிருந்தனர், இங்கே பகவானின் ஆத்மீக ஜோதித்தன்மையை எல்லோரும் அறிந்தனர். புட்டபர்த்தியில் சுவாமி சச்சிதானந்தா 1957 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் தேதி நடை பெற்ற கூட்டத்தில் பேசிய போது —

"பாபாவைப் பற்றி மற்றவர்கள் எவ்வாறு எடுத்தாலும் அவர் ஜீவராசிகளின் உள் ஆத்மா — ஜீவராசிகளை இயக்குபவர். அவரேஆத்மீக ஜோதி என்பதை நான் பூரணமாக நம்புகின்றேன். ஒரு பிற்பகல் பாபாவின் அறையிலே இருந்தோம் பாபா படுக்கையில் சாய்ந்திருந்தார். சடுதியாக அவர் எழுந்து நின்று தெலுங்கிலே " சுடாதே" என்று கத்தினுர், படுக்கையிலே சமாதி நிலையில் மயங்கிவிழுந்தார். கூடுவிட்டுச் சென்றுவிட்டார் அவரது தேகம் விறைத்துக்கிடந்தது. சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பின் தமது கூட்டுக்குத் திரும்பிய பாபா எழுந்ததும். சுற்றிநின்றவர்களிடம் போபால் என்னுமிடத்தில் உள்ள ஒரு முகவரிக்கு உடன் தந்தி கவனமாகக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டார். பாபாவே செய்தியைச் சொன்னுர் "கவலை வேண்டாம். துப்பாக்கி எம்மிடம் இருக்கிறது — பாபா', என்னும் செய்தி தந்தி வசனமாகும். துப்பாக்கி என்னும் சொல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திக்காரியாலயத்தினர் ஏற்கமாட்டார்கள் என வாதிக்கப் பட்டது. இறுதியில் ஆயுதம் என்னும் சொல்லை துப்பாக்கிக்குப் பதிலாக இடப்பட்டு செய்தி அனுப்பப்பட்டது. ஆயிரம் மைல் களுக்கு அப்பாலுள்ள இடத்திற்கு இச்செய்தி அனுப்பப்பட் டது. என்ன விதமான விபத்தை பாபா தவிர்த்தார் என அறிய ஒவ்வொருவரும் ஆவலுடன் முயற்சித்தனர். பாபா எதுவும் கூறவில்லை. நான்காவது தினம் ஒரு தனிநபரது கஷ்டத்தை பாபா போக்கிய செய்தி ஒரு கடிதத்திலிருந்தது.

பாபாவுக்கு கடிதம் எழுதியவரின் மனைவி பாபாவின் பக்தை. இவர் இரண்டாவது உலகயுத்த காலத்தில் கடமை யாற்றி அரசாங்கத்தில் உயர்பதவியிலிருந்தவர். இராச்சியங்கள் புனரமைப்புக்காலத்தில் அவரக்குக் கீழ்ப்பட்ட ஒருவர் பதவி யில் உயர்த்தப்பட்டு தமக்கு மேலிடத்தில் வைக்கப்பட்ட அவமரியாதையைப் பொறுக்க முடியாமல் தமது கைத்துப் பாக்கியினுல் தற்கொலை செய்ய விரும்பினுர். அந்தச் சமயத் தில்தான் ''சுடாதே'' என்று பாபா கத்தியிருக்கின்ருர். துப் பாக்கியினுல் சுட முயன்றபோது அப்பக்தனுடைய வீட்டுக் கதவில் தட்டிக்கேட்டது. அந்த உத்தியோகத்தர் விரைவாகத் தம் கையிலிருந்த துப்பாக்கியை தனது படுக்கையில் வைத்து விட்டு வெளிக்கதவை ஓடிச்சென்று திறந்தார். தமது பாட சாலைப் பழைய நண்பன்—மனைவியுடனும் சாமான்களைத் தூக்கி வந்த வேலையாள் ஒருவனுடனும் நிற்பதைக் கண்டார். அதிசயப் பட்டார். பாபா தாம் ஒருவராகப் போகாது, அப்பக்தனு டன் கல்வி பயின்ற தோழனுகவும் அத்தோழனது மனைவியாக வும் வேலைக்காரனுகவும் மூவுருவெடுத்துச் சென்றிருந்தார். உத்தியோகத்தர் தன் கல்லூரித்தோழனேடு உரையாடினுர். அவரது நெஞ்சிலிருந்த பழுச் சிறிது சிறிதாக குறைந்து கரைந் தது. உத்தியோகத்தரது மனைவி வீட்டில் இல்லை. அவர் தன் பெற்ருேர் வீட்டுக்குச் சென்றிருந்ததால், இவர்கள் அங்கு தங்க முடியாதென்றும் வேறு ஒரு நண்பருடன் சென்று தங்குவதாக வும் கூறி தமது பொருள்களுடன் புறப்பட்டு விட்டனர். இவர் கள் சென்றதும் உத்தியோகத்தர் உள்ளே சென்று படுக்கையில் தமது துப்பாக்கியைத் தேடினுர். காணவில்லை. யார் எடுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கலாய்? இவர் புட்டபர்த்திக்கு தமது மனைவியுடன் ஒரு முறை போயிருக்கின்றார். அப்பெண் பகவானின் பக்தை. பகவானே எடுத்திருக்கலாமா? உத்தியோகத்தர் தமது வீட்டைப் பூட்டிவிட்டு வந்திருந்த விருந்தினர் தங்குவதாக கூறிய நண்பர் வீட்டுக்கு ஓடிச் சென்றார். அங்கு அவர்களில்லை. மாயமாக மூவரும் மறைந்து விட்டனர். இந்தச்சம்பவத்தை யோசித்த படி வீட்டுக்குத் திரும்பியிருந்த உத்தியோகத்தருக்கு, மீண்டும் கதவில் தட்டும் சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்த்தார். அங்கு தந்திச் சேவகன் ஒரு தந்தியைக் கொடுத்தான். கோடைக்கானலிலிருந்து தந்தி வந்திருந்தது. ''கவலைப்பட வேண்டாம் கருவி எம்மிடம் இருக்கிறது. பாபா'' என்று தந்தி கூறியது. புராண காலங்களில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் கூடு விட்டுக் கூடுபாய்தலாகும். இங்கோ வேறு கூட்டுக்குச் செல்லாது, தாமே வேறு உருத்தாங்கி, அதுவும் குறித்த நண்பன்—அவன் மனைவி—வேலையாள் போன்ற மூன்றுருத்தாங்கி, அவர்களது பழக்க வழக்க முறைகளை அப்படியே கையாண்டு பகவான் பாபா புரிந்த திருவிளையாடல் சாதாரண மானவர்களால் முடியாதது. இது பகவானின் அவதாரத்துக்கே சாத்தியமாகும்''.

## சிருஷ்டி அற்புதங்கள்

இதன் பின்னர் சுவாமி சதாநந்தாவும் சுவாமி சச்சிதானந்தாவும் ரிஷிகேஷத்திலிருந்த அவர்களது குருவான சுவாமி சிவாநந்தசரஸ்வதிக்கு பாபாவைப்பற்றியும் அவரது தெய்வீக ஆற்றலையும் எழுதியிருந்தனர். இரு சுவாமிகளும் பாபாவுடன் கோடைக்கானலிலிருந்து கன்னியாகுமரிக்குச் சென்றனர். ஒரு கிறீத்தவரை ஆசீர்வதிப்பதற்காக பரிசுத்த சிலுவையும் இயேசுவின் உருவமும் கொண்ட ஒரு பிரார்த்தனை மாலையை உண்டாக்கிக் கொடுத்ததையும் கன்னியாகுமரிக் கடற்கரையில் நடந்து செல்கையில் அவரது ஒவ்வோரடிக்கும் ஒவ்வொரு படிக மணியாக 108 மணிகள் தோன்றினதும் பக்தர்கள் அவற்றைச் சேகரித்ததும், பாபா தமது கையசைப்பினால் அந்த மணிகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து ஒரு மாலையாக்கித் நம்முடனிருந்த சுவாமி சதாநந்தருக்கு அளித்ததையும் அற்புதச் செயல்கள் என்று கூறுது விட முடியுமா?

புட்டபர்த்திக்கு வருமாறு தன்மகனை அழைத்தபோது அவன் வரமறுத்து திருப்பதிக்குச் சென்றுவிட்டானென ஒரு தாய் பாபாவுக்கு முறையிட்டாள். அப்பொழுது, எல்லாம் ஒன்றேயென்று கூறி விளக்கினர். ''எனது நோக்கத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எப்பொழுதும் இயங்கிக்கொண்டேயிருக்கின்றேன்'' என்று பாபா கூறுவார். பாபா ரிஷிகேஷத்துக்குப் புறப்படு முன்னதாக சுவாமி சச்சிதானந்தர் ஆங்குச் சென்றார். 1957 ஜுலை 14ந் தேதி பாபா காரிலே புறப்பட்டார். வழியில் அயோத்தியா ஆச்சிரமத்தில் சீரடி சாயிபாபாவின் வெள்ளிச்சிலையைப் பிரதிட்டை செய்து வைத்தார். இங்கு பாபா பேசியபோது, பக்தியோடு சுயநலமற்ற சேவை செய்ய வேண்டுமென்றார். கடவுளை அடைவதற்காக உடலை சாதனையால் வருத்துவதைக் கண்டித்தார்.

''மெய்யே தேவனின் உறைவிடம். அதுவே பிறப்பு-இறப்பு என்னும் சாகரத்தை, பகுத்தறிவு-நடுவுநிலைமை ஆகிய துடுப்புக்களைக்கொண்டு கரைசேர்வதற்காதாரமான படகாகும். ஆகவே, அதனை எந்நேரமும் இயக்கக்கூடிய நிலையில் தயாராக வைத்திருக்க வேண்டும்'' என்றும் பெண்களுடைய பக்கத்தினை நோக்கி, ''குழந்தைகளுக்கு பக்தி - தைரியம் - சுயமரியாதை - உண்மைப்பழக்கம் ஆகியவற்றை புகுத்துவது அவசியத்தேவை. பேரானந்தத்தை நாடி எங்குமே எவரும் அலைய வேண்டியதில்லை. அது உள்ளத்தே பொறி போன்றிருக்கின்றது. அதனை ஊதி சுவாலையாகவும் நெருப்பாகவும் மாற்றலாம்''. என்றும் ''உண்மையான பக்தன் உணர்ச்சியை வெற்றிகொள்ள வேண்டும். உண்மைத்துறவியும் அறிவின் கூர்மையை வளர்த்தல் வேண்டும். உண்மைத்தொண்டன் தன்மனத்திடத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டும்'' என்றும் பாபா கூறினர். இதன் பின் ஜுலை 15ந் தேதி சென்னை வந்து சேர்ந்து, தாம் தெரிந்தெடுத்த பக்தர்களுடன் டெல்லிக்கு விமானமூலம் சென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப் பிரயாணத்தின்போது பக்தன் ஒருவனுக்கு அவன் விரும்பிய பெண்ணையே விவாகம் செய்யலாமென்றும் பெற்ரோரின் மறுப்பு நீக்கப்படுமென்றும் ஆறுதல் கூறினர். பாலம் விமான நிலையத்திற்கு பிற்பகல் 4-30ற்கு வந்து சேர்ந்து சுந்தர நகர் மாளிகையில் தங்கியிருந்தார். இங்கு வந்த ஒரு மணி நேரத்துள் பெங்களூரிலிருந்த தமது பக்தருடைய பாரிசவாதநோயைக் குணமாக்கக் கூடுவிட்டுச் சென்றுதவி புரிந்தார். டெல்லியில் அவரது பக்தர்கள் கூடி பாபாவின் தரிசனம் பெற்று மகிழ்ந்தனர்.

## சிவாநந்த நகரில்

புதுடெல்லியிலிருந்து ஜுலை 22ந் தேதி ரிஷிகேஷத்துக்குக் காரில் புறப்பட்ட பாபாவை சுவாமி சிவாநந்தருடைய ஆச்சிரம சீடர்கள் ஹரித்துவாரத்தில் வைத்து வரவேற்றனர். சிவாநந்த நகருக்கு மாலை 6-30ற்கு வந்து சேர்ந்த பாபாவை சுவாமி சிவாநந்தர் தம் ஆச்சிரமத்தில் உள்ளன்போடு வரவேற்ருர். வழமைபோல சுவாமி சிவாநந்தர் தம் கைகளைக் கட்டியவாறு வரவேற்றபோது "பயம் வேண்டாம்" என்று அபயம் கொடுப்பதுபோல் தமது கையை உயர்த்தி வரவேற்பை பாபா ஏற்றுக்கொண்டார். பாபா வந்த காலத்தில் சுவாமி சிவாநந்த சரஸ்வதி நோய்வாய்ப்பட்டிருந்தமையால் ஒரு தள்ளு கதிரையில் பல இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டார். பாபா தம்மால் தோற்றுவிக்கப்பட்ட விபூதியையும் கங்கா தீர்த்தத்தையும் சுவாமி சிவாநந்தருக்கு மருந்தாகக் கொடுத்து அவரைப் பூரண சுகமடையச் செய்தார். சிவாநந்த நகர ஆச்சிரமத்தில் பகவான் நிகழ்த்திய உரையாடல்களும் பேச்சுக்களும் ஞானஒளி நிறைந்தனவாகும். பயனடைந்தோர் பலர். சுவாமி சிவாநந்தருக்கு அருமையான 108 உருத்திராக்க மணிகளடங்கிய ஒரு உருத்திராட்ச மாலையை பகவான் தோற்றுவித்துக் கொடுத்தார். அம்மாலை பவுண் வளையங்களோடு அழகாக — தேர்ந்தெடுத்த உயர் உருத்திராக்க மணிகளால் கொண்டு அமையப்பெற்றதாகும். 1957 ஜுலை 26ந் தேதி சிவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தாச்சிரம பக்தர்களுக்கு மகிழ்வூட்டும் அற்புதங்களை ஞாபகப்படுத்தும். அன்று பாபா பல இடங்களுக்கும் சென்று உண்மையான பக்தர்களை காப்பாற்றியும் தரிசனம் கொடுத்தும் வந்துள்ளார். வசிட்டர் குகைக்கு விஜயம்செய்து அங்கிருந்த துறவி சுவாமி புருஷோத்மாநந்தாவுக்கு தரிசனமளித்தார். துறவியின் வேண்டுகோளுக்கிணங்கி பாட்டுப் பாடினூர். அவருடைய வயிற்றுநோவை மாற்ற எங்கிருந்தோ கற்கண்டு எடுத்து அவருடைய நோய்க்கு மருந்தாகக் கொடுத்தார். பிரார்த்தனைக்காக ஒரு மாலையையும் தோற்றுவித்துக் கொடுத்தார். வசிட்டர் குகையிலிருந்து திரும்பும்பொழுது சிறிதுநேரம் பகவான் தமது கூட்டை விட்டுச் சென்ருர். அவர், ஒரு யோகி நீருடன் அள்ளுண்டு சென்றதைத் தடுத்து அந்த யோகியைக் கரைசேர்க்கவே சென்றிருந்தாரென்பது பின்னர் தெரியவந்தது. பாபாவின் உலகை வியாபித்த அன்பு இதனுல் மேலும் வெளியாயிற்று. சிவாநந்த நகரிலே உள்ளொளி பரப்பிய பின்னர் பாபா ஜூலை 28ந் தேதி அங்கிருந்து புதுடெல்கி திரும்பினூர்.

மகாபாகவதம் கூறும் மதுரை—பிருந்தாவனத்திற்கு ஜூலை 30ந் தேதி பக்தர்களுடன் பாபா சென்ருர். ஜமுனை நதி தீரத்தில் பாம்பின் கர்வம் அடங்கிய இடம், கோபிகளுடன் ஓடியாடிய இடம், இரணை மரங்களுக்கு நடுவில் உரலுடன் குழந்தையாக கண்ணன் வந்து வேரோடு மரங்களை சாய்த்த இடம் முதலியவற்றை பக்தர்களுக்குக் காட்டினூர். பின் காஷ்மீர் முதலான இடங்களுக்கும் சென்று பக்தர்களுக்கு அன்புமழை சொரிந்து ஆசிர்வதித்து ஆகஸ்ட் 14-ந் தேதி புட்டபர்த்திக்கு வந்து சேர்ந்தார்.

பக்தர்களுக்கு பாபா வழங்கும் விபூதி. எந்தெந்தத் தேவையை முன்னிட்டு வழங்கப்படுகின்றதோ அந்தந்தத் தேவைக்கு ஏற்றதாகவே இருக்கும். உயர் கல்வி கற்பதற்கு இங்கிலாந்துக்குச் சென்ற ஒரு பக்தனுக்கு வெள்ளிக்கவசத்தில் எடுக்க எடுக்கக் குறையாதென்று கூறி விபூதி அளித்தார். மண்ணை அள்ளித் தட்டில் தூற்றுவார். அது சுகந்த மணத்துடன் கூடிய விபூதியாக தட்டில் விழும். விஜயதசமியில் ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலமாக பாபா வரும்போது அவரது தேகத்திலிருந்து விபூதி சொரியும். தன்னுடைய கையசைப்பினுல் விபூதியைத் தோற்று விக்கும் அற்புதச் செயலை ஆயிரக்கணக்கான பக்தர்களும் தரிசிக்கச் சென்றவர்களும் பார்த்திருக்கின்றுர்கள். ஒரு பக்தனுடைய நெற்றியில் விபூதியை அணிய வேண்டுமாஞல் தன் கைப் பெருவிரலை உயர்த்தி நெற்றியில் தொட்டு விடுவார். எல்லோரும் கண்டு ஆச்சரியப்படக் கூடிய விதமாக அந்தப் பக்தனுடைய நெற்றியில் விபூதி தோன்றிக்கொண்டேயிருக்கும். தாம் விரும்பிய பொருள்களைத் தொட்டமாத்திரத்தில் அவைகளை அதிகரிக்கச் செய்யும் வல்லபம் பாபாவின் கைக்குண்டு. தமது பக்தர்களுடைய பிள்ளைகளின் விவாகங்களுக்கு தமது கையசைப்பினுல் மாங்கல்யத்தைத் தோற்றுவித்து பிரசாந்தி நிலையத்தில் தமது முன்னிலையில் நடைபெறும் திருமணத்தின்போது அதிட்டசாலியான மணமகளின் கழுத்தினிலணியுமாறு மணமகனிடம் கொடுப்பார். பிறருக்காகவே பொருள்களைத் தோற்றுவிப்பார். தாம் எதனையும் தன் நலனுக்குபயோகிக்க மாட்டார். ஒரு முறை ஒரு வீணை வித்துவானுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்க தமது கையசைப்பினுல் பதக்கமொன்றைப் பெற்றுர். பக்கத்திலிருந்தவர்கள் எல்லோருக்கும் காட்டினுர். அதில் கொடுப்பது யார்—வாங்குவதுயார்—தேதி விவரம் எதுவும் இல்லை. உடனே திரும்ப பாபா தமது கையை அசைத்தார். பதக்கத்தில் பகவான் சத்தியசாயிபாபாவினுல் வித்துவான் ரீ. சௌடியனுக்கு இன்னநாள்—இன்னதேதி வழங்கப்பட்டதென்ற எழுத்து ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்ததை எல்லோரும் கண்டனர். ஒரு பக்தனுக்கு கணேசரின் சிலையைப் பரிசாகக் கொடுத்தார். பாபா கொடுக்கும் பொருளுக்கு விலை மதித்தலோ அதனைத் தரம் அறிதலோ ஆகாது. அவ்வாறு நடந்த சம்பவங்கள் பல. ஒரு வித்துவானுக்கு பரிசளிக்கப்பட்ட கல் பதிக்கப்பட்ட தங்க மாலை இவ்வாறு விலைமதிக்கப்பட்டபோது மாயமாக மறைந்து விட்டது. பின் அந்த வித்துவான் பிரசாந்தி நிலையத்திற்குத் திரும்பி வந்தவிடத்து பாபாவினுல் கண்டிக்கப்பட்டு பின் அதே மாலை கிடைக்கப் பெற்றுர். பாபா கொடுத்த பொருள்களைப் பிறர் களவாடவும் முடியாது. பொருள்கள் களவாடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தும் பாபா கொடுத்த பொருள்கள் பாபாவிடமே வந்து சேர்ந்து திரும்பவும் உரியவர்களுக்கே போய்ச் சேர்ந்துவிடும். இதனை விளக்க எத்தனையோ சம்பவங்களுள.

## காருக்குப் பெற்ருேல்

சில சமயங்களில் பாபா சலத்தைக் கையால் தொடவே அது காரை பல மைல்களுக்கு ஓட்டிச் செல்ல உதவும் பெற்ருேலாக மாறியிருக்கும். பெங்களூருக்குச் சென்ற ஒரு சமயத்தில் வழியில் காருக்கு பெற்ருேல் தீர்ந்துவிட்டது. கூட வந்த ஒருவரை பக்கத்திலிருந்த நீர்த்தேக்கத்திலிருந்து நீரெடுத்து வருமாறு பணித்தார். நீர் வந்தது. பாபா தன் கையினுல் துளாவினுர். பின் அதனைக் காருக்கு விட்டு ஓட்டிச் சென்றனர். அந்த நீர் பெற்ருேலாக மாறி காரை இயக்கியது. மற்ருெருமுறை விழாவின்போது மின்சார இயந்திரத்திற்குரிய டீசல் எண்ணெய் தீர்ந்துவிட்டது. டீசல் எண்ணெய்க்கு இருபது மைல் செல்ல வேண்டும். ஆனுல், பாபா, தம் கையினுல் தொட்டநீரே டீசலாக மாறி அந்த நேரத்திற்கு உதவியது. ஸ்ரீமதி சக்கம்மா ஒருமுறை தமது மூக்குக்கண்ணுடியை உடைத்து விட்டார். பாபாவோ உடனே அதுபோன்றவொரு மூக்குக்கண்ணுடியைச் சிருஷ்டித்துக் கொடுத்தார். மற்ருெருமுறை ஏழு வைரக்கற்கள் பதித்த மோதிரத்தை ஸ்ரீமதி சக்கம்மா தொலைத்து விட்டார். பின்னர் அதனைப் பாபாவே கொடுத்தார். இப்படியாக அவர் புரிந்த அற்புதங்கள் பலவாகும்.

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டத்தின்போது பிருந்தாவனத்திலிருந்து வந்ததாக கூறி நாற்பத்திமூன்றுவகை இனிப்புக்களை பக்தர்களுக்கு அளித்தார். 1958ம் ஆண்டில் கன்னியாகுமரியிலிருந்தபோது, அங்கு கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அம்பாளின் மூக்குத்தியிலிருந்த வைரத்தை தன்னுடன் அங்கு வந்து இருந்த பக்தர்களுக்குக் காட்டினுர். மணலில் கையைப் புதைத்து வெளியிலெடுத்தபோது அந்த வைரம் அவரது கையில் ஜொலித்தது. பின் வந்தவழியே மறைந்தது. பக்தர்களுக்காக கீதை நூல்களும் சிவ-கிருஷ்ண விக்கிரகங்களும் கொடுப்பார், தமது புகைப்படங்களையோ சீரடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயிபாபாவின் படங்களையோ பக்தர்களுக்குத் தமது கைய சைப்பினுல் பெற்றுக் கொடுப்பார். எந்தத் தெய்வத்தை—எந்த ரூபத்தில் வைத்து வணங்கினுலும் எல்லாம் ஒன்றேதான் என்பது அவர்போதனையின் சாரம். பக்திவழியைப் பலப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்துவதே அவர் நோக்கமாகும். நோயாளிகளுக்கு மருந்து—பக்தர்களுக்கு விருந்து—வழிபாட்டுக்கு விக்கிரகங்களும் படங்களும்-இவ்வாறு பகவான் புரிந்த—புரிந்து வரும் அற்புதங்கள் பலப்பல.

## இருவரும் ஒன்றே

சீரடி சாயிபாபாவும் சத்தியசாயிபாபாவும் ஒன்றே என்பதற்கு எத்தனையோ சம்பவங்கள் கண்கூடாக நடந்தேறியுள்ளன-இன்றும் நடந்து வருகின்றன. குழந்தைப்பருவம் முதலே சீரடி சாயிபாபாவும் தாமும் ஒன்றேயென அவர் காட்டி வந்த அற்புதங்கள் பல. ''முன்பு சீரடி சாயிபாபாவாக வந்தவர் இப்பொழுது மீண்டும் சத்தியசாயி பாபாவாக வந்துள்ளார். மேலும், சாயிக்கள் தொடர்ந்து வருவார்கள். அடுத்ததாக மைசூர்ப் பிராந்தியத்திலே பிரேமசாயி அவதரிப்பார்'' என்று பகவான் அருளியுள்ளார். சீரடிசாயிபாபாபற்றி பேசும்போதெல்லாம் தமது முந்திய பிறப்பென்பதை ஞாபகமூட்டுவார். சீரடிக்கு யாத்திரை சென்ற பக்தர்கள் ஆங்கு சத்தியசாயி பாபாபற்றி கேள்வியுற்று புட்டபர்த்திக்கு வந்தால், அப்படி வருபவர்களிடம் சீரடி யாத்திரைபற்றி விசாரிப்பார். அதுமட்டுமன்றி ஆங்கு அவர்கள் பதில் பெருத பல கேள்விகளுக்கும் பாபாவே இங்கு பதில் கூறுவார். சீரடி சாயிபாபாவின் பக்தரான ஷிங்கோலி ராஜா காலமானபின் அவரது இராணியார் சத்தியசாயி பாபாபற்றி கேள்வியுற்று புட்டபர்த்திக்கு வந்தார். அப்பொழுது பாபா பதினைந்து வயதுச் சிறுவராக இருந்தார். தாம் முன்பு சீரடி சாயிபாபாவாக இருந்தபோது அங்கு இராணியின் மாளிகையில் கண்டவற்றை, அரசனுடைய வழிபாட்டுக்கு கொடுத்த விக்கிரகம்—படம் முதலியவற்றை அப்படியே எடுத்துக்கூறி எல்லோருக்கும் தாம் சீரடி சாயிபாபா தான் என்பதை வலியுறுத்தினர். பாபா ஒரே நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையிலும் பங்களூரிலும் புட்டபர்த்தியிலும் காட்சி தரக் கூடியவர். அவ்வாறு பல இடங்களிலும் அவர் வியாபித்திருந்த பல சம்பவங்கள் இருக்கின்றன. பிரசாந்திநிலையத்திலுள்ள மேடையில் இருபுறத்திலும் சீரடி சாயிபாபாவினதும் சத்திய சாயிபாபாவினதும் பெரியவர்ணப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா அஷ்டோத்தர நாமாவளியிலுள்ள 108 பெயர்களுள் சீரடி சாயிபாபாவின் வழிபாடுகளுக்குள்ள பெயர்களும் இருக்கின்றன.

''ஓம் ஸ்ரீ பர்திகிரா மோத்பவாய நம:
**ஓம்** ஸ்ரீ பர்த்தி க்ஷேத்திர நிவாசினே நம:
ஓம் ஸ்ரீ பசஃகாய ஷிர்டிவாசினே நம:
..........................................................
ஓம் ஸ்ரீ க்ஷிர்டி சாயி அபேத சக்தியவதாராய நம:
ஓம் ஸ்ரீ சங்கராய நம:
ஓம் ஸ்ரீ ஷிர்டிசாயி மூர்த்தயே நம:''

இவ்வாறெல்லாம் சீரடி சாயிபாபாவின் பிரார்த்தனைகள் வருகின்றன. புதுடெல்கியிலிருந்த சிதம்பரஐயர் என்னும் பக்தருக்கு இருவரும் ஒருவரே யென்றும் சத்தியசாயிபாபா, சீரடி சாயிபாபாவின் மறுபிறப்பேயென்றும் காட்டிய சம்பவத்தை அவரே விளக்கியுள்ளார். சென்னையிலிருந்த ஒரு பெண் தன் மகன் கடுமையான சுகயீனத்தாற் பீடிக்கப்பட்டிருந்தபோது, சீரடி சாயிபாபாவின் படத்தின்கீழ் அவனை வளர்த்தி வழிபட்டாள். அச்சிறுவன் சுகமடைந்து பல ஆண்டுகளுக்குப்பின் தாயும் மகனுமாக புட்டபர்த்திக்கு வந்தனர். இவர்களைக் கண்டதும் ''இச்சிறுவனை பதினைந்தாண்டுகளுக்கு முன் எனது பராமரிப்பில் விட்டுவிட்டாயல்லவா!'' என்று கேட்டார். சீரடி சாயிபாபாவின் சீடனொருவனின் அந்திய காலத்தில் சத்திய சாயிபாபா தமது கூட்டைவிட்டுச் சென்று அருள்பாலித்துள்ளார். இருவரும் ஒருவரேயென்பதில் எவ்வித சந்தேகமுமில்லையென யோகி சுத்தானந்தபாரதியார் கூறியுள்ளார். 1959ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சென்னையில் நடைபெற்ற அகில இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியசாயிசமாஜத்தின் பக்தர்கள் முன் பேசிய பகவான் சத்திய சாயி பாபா, ஸ்ரீஇராமரும் ஸ்ரீகிருஷ்ணரும் தனித்தனி வாழ்வில் வேறுபட்ட முறையில் இருந்தவரென்றும் இருவரும் ஒருவர் என்று கூறக் கூடியதாக இருக்காதபோதிலும் இருவரும் ஒருவரேதான் என்பதற்கு எவ்வாறு ஐயமில்லையோ அவ்வாறு இங்கும் சீரடி சாயிபாபாவும் தாமும் ஒருவரேயென்பதற்கு ஐயமில்லையென்றும் கூறியுள்ளார்.

பிரசாந்திநிலயத்துக்கு 1960ல் விஜயம் செய்த ஸ்ரீகாயாத்திரிசுவாமிகள், சீரடிசாயிபாபாவுடன் 1906ம் ஆண்டில் இருந்ததாகவும் ''சுடாதே'' என்று கூறிச் செய்த அற்புதம்போன்று பல சம்பவங்கள் அன்று நடந்தவைபோன்றே இன்றும் நடந்து வருவதாகவும் கூறியுள்ளார். லோகமான்ய பாலகங்காதர திலகருடன் தாம் சீரடிசாயிபாபாவைமுன்பு சந்தித்தபோது "துப்பாக்கி முனையில் அடையும் சுதந்திரம் பயனற்றது—பலத்தினுல் வென்றது, பலத்தினுல் அழியும். ஆத்மீக சக்தியினுலும் ஆத்மீக முன்னேற்றத்தினுலுமே சுதந்தரவெற்றி பெறவேண்டும்' என்றும் கூறினுர். சத்தியசாயி பாபாவும் முதலில் கருணையும் கருணைவழிவந்த இரக்கத்தின் அடிப்படையில் அன்பு வேண்டுமென்பதையுமே வற்புறுத்தி வருகின்றுர்.'' என்று யோகி சுத்தானந்தபாரதியார் எடுத்துக்கூறியுள்ளார்.

## விமானிக்கு அபயம்

காஷ்மீர் தேசத்திலே ஒரு விமானி 1949-ம் ஆண்டில் தற்கொலை செய்யமுயன்றுர். பாபா அவரை அம்முயற்சியினின்றும் காப்பாற்றியது மட்டுமன்றி அவர்மீது ஏற்பட்ட அபாண்டமான பழியையும் துடைத்தார். பாபா தமது தேகத்தை சமாதி நிலையில் விட்டு பன்னிரண்டுமணிநேரம் வெளியில் இருந்துள்ளார். அவர் தமது கூட்டுக்குத் திரும்பியதும், குறித்த விமானி குடிக்கவிருந்த விஷம்கலந்த பானமுள்ள கோப்பையை அவனுடைய கையிலிருந்து தட்டிவிட்டதுடன், பணம் கையாடியதாக அந்த விமானிமீது வழக்கு நடந்த நீதிமன்றத்திற்கும் பாபா சென்றிருந்தாரென்றும் வழக்கை விசாரித்த இராணுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதிகளிலொருவரின் மனத்தில் புகுந்து இந்த வழக்குச் சம்பந்தமான ஒரு ஆட்சேபனையைக் கிளப்புமாறு செய்து எதிரி குற்றமற்றவரென்று தீர்ப்பு வழங்கச் செய்தாரென்றும் தெரிய வந்தது. விமானி விடுதலையடைந்தார். இவ்வாறு அப்பாவியான மக்களைக் காப்பாற்றுவது பக்தர்களிடம் பாபா கொண்டுள்ள கருணைநெறியின் மாட்சியைத் துலாம்பரமாகக்காட்டுகின்றது. இதேபோன்று 1958 ம் ஆண்டு நவம்பர் 24ந் தேதியில் புட்டபர்த்தியில் நன்கு அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் பாபா உட்கார்ந்திருந்தார். திடீரென பாபா ஊஞ்சலில் திண்டின் மீது சாய்ந்து பிரக்ஞையின்றி இருந்தார். அந்தநேரத்தில் ஹைதராபாத்திலிருந்த தமது பக்தரொருவனைக் காப்பாற்ற அவர் கூடுவிட்டுச் சென்றிருந்தார். ஹைதராபாத்தில் அவரது பக்தன் மாரடைப்புக் காரணமாக மோட்டாரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அப்பக்தருக்கு பாபா தரிசனமளித்து ஆசீர்வதித்தபின் தமது கூட்டுக்குத் திரும்பியிருந்தார் எதுவுமே நடக்காததுபோல பாபாவும் இங்கு எழுந்தார்—பக்தனும் ஹைதராபாத்தில் உயிர் பிழைத்தான்.

இந்தியாவிலுள்ள பக்தர்கள் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளில்—இங்கிலாந்து, பிரான்சு, கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் இருக்கும் பக்தர்களுக்கும் அபயமளித்துப் பகவான் காப்பாற்றுகின்றார். புட்டபர்த்தியில் சுவாமி அமிர்தாநந்தா அடைந்த அனுபவமும் பாபாவின் தெய்வீகத்தன்மையை விளக்கும் அபூர்வமான உதாரணமாகும். பிரசாந்திநிலையத்திற்கு அமிர்தானந்தா வந்ததும், அவரை ''அம்ருதம்'' என்று பாபா அழைத்ததும், பழகிய பழையகுரலைக்கேட்டு தாம் ஆச்சரியமடைந்ததாகவும், தம்மை அவ்வாறு அழைத்தது பதினேழு ஆண்டுகளாக தாம் கூடவிருந்த ரமணமகரிஷிகளே யென்றும் அவர் கூறியுள்ளார். எண்பத்தைந்து வயதான சுவாமி அமிர்தானந்தா, அவரது ஏழுவயதில் நாற்பத்தொரு தினங்களுக்குச் செய்த கணபதி ஹோமம்பற்றி விசாரித்தாரென்றும் அதற்குப் பரிசாக கணபதி தரிசனம் கிடைக்குமென்றும் ஆனால் தரிசனம் தமக்குக் கிடைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையென்றும் தாம் கூறினாராம். பாபாவோ, இந்த ஹோமம் செய்த எழுபத்தெட்டு வருடங்கள் கழிந்ததன் பின் தமக்கு அந்தத் தரிசனத்தைக் காட்டினரென்று சுவாமி அமிர்தானந்தா கூறினார். ஸ்ரீ சுவர்ணமகா கணபதியைத் தரிசித்த சுவாமி அந்தச் சந்தோஷத்தில் நான்கு நாட்கள் அன்னஆகாரங்களும் நித்திரையுமின்றி சந்தோஷமாக இருந்தாராம்.

## இயற்கையின் அடக்கம்

பெங்களூரில் 1959 ஜூன் 21-ந் தேதி பிற்பகல் 1-30 மணிக்கு திடீரென பாபாவின் தேகஉஷ்ணம் 104.5 டிகிரிக்கு உயர்ந்தது. ஆனால் ஐந்து நிமிடங்களின் பின் தேகஉஷ்ணநிலை 99 டிகிரிக்கு குறைந்ததும் பக்தர்களது கவலை நீங்கியது. திடீரென பாபாவின் தேகஉஷ்ணநிலை உயர்ந்தகாரணம் ஒருவருக்கும் தெரியாது. இரவு உணவு வேளையின்போது, சென்னையிலிருந்து வந்த ஒரு இளைஞனைப் பார்த்து, "நாளை உனது தாயாரைச் சந்திக்கும்போது நெருப்பு விடயத்தில் அவதானமாக இருக்கவேண்டுமென்றும் பாபா எப்பொழுதும் கூடவேயிருப்பதால் எத்துன்பமும் நேரமாட்டாதென்றும் கூறுக" என்றார். இந்த இளைஞனது தாயாரின் சேலையில் பிரார்த்தனை காலத்தில் எண்ணெய் விளக்கிலிருந்து தீப்பிடித்துக்கொண்டதாக பாபா கூறினார். இதன் உண்மையை அறிவதற்காக இருநூற்றிருபது மைல் தூரத்திலிருந்த அந்த இளைஞரது தாயாருக்கு தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளப்பட்டது அந்தப்பெண் உடனே "தீயை அணைக்கும்போது உங்கள் கைகள் எரிந்தனவா" என்றே முதலில் கேட்டாள். அதற்கு —"இல்லை. எனது கைகள் எரியவில்லை. சிறிதுவேளை எனது தேகஉஷ்ணநிலைதான் சற்று அதிகரித்தது" என்று பதிலிறுத்தார். இதேவிதமாக சீரடிசாயி பாபாவும் முன்பு தீயில் தவறிவிழுந்த ஒரு குழந்தையைக் காப்பாற்றியிருக்கின்றார். நீண்டகால நோய்களையும் கண்குருடாக இருந்தவர்களையும் பகவான் குணமாக்கியிருக்கின்றார். இதே போன்ற சம்பவங்களும் சீரடிசாயிபாபாவின் வாழ்விலும் பல முறைகள் நடந்துள்ளன. இயற்கையையும் கட்டுப்படுத்தும் வன்மை இவர்கள் இருவரிடமும் இருந்துள்ளது. ஒரு விஜயதச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியின்போது பாபாவை நன்கு அலங்கரிக்கப்பட்ட இரதமொன்றில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டபோது வானமிருண்டு—மழைமேகங்கள் சூழ்ந்து காது செவிடுபடுமாறு இடி இடித்து—கண் பறிக்கும் மின்னல்கள் மின்னின. ஊர்வலமும் புறப்பட்டு பின் நிலையத்துக்கு வந்துசேர மூன்றுமணி நேரம் பிடித்தது. பக்தர்களும் அவரவர் தம் இருப்பிடம் சேர்ந்து பாபாவும் நிலையத்திற்குத் திரும்பியதும் பேய்மழை பொழிந்தது. இதேபோன்று குடகுப்பிரதேசத்தில் மெர்க்கரா என்னுமிடத்தில் ஒரு ஜூன் மாதத்தில் பாபா பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். ஒன்றரை மணிநேரம் பிரசங்கம் நடந்தது. நாற்புறத்திலும் மழை பெய்தபோதிலும் அந்தப்பிரதேசத்தில் மழையில்லை—இடியில்லை—மின்னலுமில்லை. எல்லோரும் சீக்கிரமாக வீடு செல்லவேண்டுமென்றும் பத்து நிமிடத்தில் அப்பிரதேசத்தில் மழை பொழியுமென்றும் பாபா கூறினார். எல்லோரும் சென்றனர். பாபா கூறியபடி பத்து நிமிடத்தில் மழை அந்தவிடத்திலே பொழிந்தது. காலநிலைகள் மீதும் பாபாவின் ஆதிக்கமிருந்ததை இச்சம்பவங்கள் விளக்குகின்றன.

மைசூர் இராச்சியத்தில் நந்திமலைப் பிரதேசத்தில் கடும் மழை பொழியுங்காலத்தில் சித்திராவதிநதி திடீரெனப் பெருக்கெடுத்துப்பாயும். அப்போதெல்லாம் வெள்ளம் பெருகிவரும். பாபா அந்த வெள்ளப்பெருக்குகளையும் அடக்கியுள்ளார். சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நவராத்திரி விழாவின்போது அன்னதானம் நடந்தது. எங்கும் மழை பொழிந்தது. ஆனால், அன்னதானம் நடந்த இடத்தில் ஒருதுளி மழையும் பெய்யவில்லை. ஆந்திரப் பிரதேசத்தில் 1963-ம் ஆண்டில் ராஜமகேந்திர புரத்தருகே பத்துமைல் தூரத்திலிருந்த மிருத்திபாடு என்னும் கிராமத்தில் பாபாவின் பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. நாற்புறமும் கடும்மழை—பெருவெள்ளம்—ஆனால், பிரசங்கம் நடந்த இடத்தில் மழையுமில்லை. கோதாவரி பெருகிவந்த வெள்ளமும் அண்டவில்லை. பாபாவின் கட்டளை அப்படியிருந்தது. பக்தர்கள் பரவசத்தில் மூழ்கினர்.

பாபாதமது பக்தர்களுடன் கனவுமூலம் தொடர்புகொள்வார். ஆத்மீக ஒழுக்கநெறி முறைகளைக்கூட தம்பக்தர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு மூலம் புகட்டியுள்ளார். பலருக்கு அழைப்புகள் விடுப்பார். அவர் அழைக்கப்பட விரும்பாதவர்கள் அங்கு சென்று தரிசனம் காணமுடியாது. அவரால் விரும்பிஞலன்றி நீண்ட நாட்களுக்கு அங்கு எவரும் தங்கவும் முடியாது. "என்முன் நீங்கள் வந்ததும் உங்கள் பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டு விட்டன,", "நான் இருக்கும்போது பயமேன்?", "நீங்கள் என்னைப் பாருங்கள்—நானும் உங்களைப் பார்க்கின்றேன்", "உங்கள் பாரத்தை நான் சுமக்கின்றேன்", "நீங்கள் சுமந்த துக்கமெல்லாவற்றையும் என்னிடம் விடுங்கள்—நீங்கள் சுமக்கக்கூடிய ஆநந்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள்". இவ்வாறெல்லாம் பாபா பக்தர்களுக்கு கூறுவார். முறையான யோகாப்பியாசங்களை யெல்லாம் பகவான் பலருக்கும் அருளியுள்ளார். பகவான் பொதுவாக தெலுங்கிலே பேசிஞலும் பக்தர்களுடன் தமிழ-கன்னடம்—ஹிந்தி-ஆங்கிலம் எல்லா மொழிகளிலும் பேசுவார். கல்லூரிகளில் கொண்டாட்டங்களில் பேசும்போது குழந்தைகளுக்கு அறிவுரைகளை அள்ளி அள்ளிக் கொடுப்பார்.

"நான் எவரையும் ஒதுக்கி விலக்குபவனல்லன். அப்படிச் செய்யவும்முடியாது. அது எனது இயற்கையுமன்று. பயமேதும் வேண்டாம். நான் உங்களுடையவன்—நீங்கள் என்னுடையவர்கள்," என்று பாபா அன்போடு அருளுகின்ருர். எல்லோரையும் அன்பிஞல்—அன்பு வழிதழுவி நிற்கின்ருர். "நிழலாக விளங்கும் உங்கள் மெய்யின் விதிபற்றி நீங்கள் கவலைப்பட எக்காரணமும் கிடையாது. இனிமேல் பாபச் செய்கையில் உழலமாட்டீர்களென்று திடசங்கல்பம் பூண்டு, முன்செய்தவைகளுக்கு உள்ளத்தில் உருகி மன்னிப்பு வேண்டிஞல் உங்கள் குற்றங்களை யெல்லாம் நான் மன்னிப்பேன். நீங்கள் அறியாமை வயப்பட்டு இருந்தபோது பழகிய பழக்கங்களை வெற்றிகொள்ள உதவுமாறு ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள்" என்று அறிவுறுத்துகின்ருர்.

## சுவாமி அபேதானந்தா

ஸ்ரீ ரமணுஸ்ரமத்தைச் சேர்ந்த 76 வயதுள்ள சுவாமி அபேதானந்தா 1961ம் ஆண்டு தாம்பெற்ற அனுபவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமாகக் கூறியுள்ளார். பாபா ஒரு தெய்வ அவதாரமா? இல்லையா? என்னும் சந்தேகம் இவரிடம் எழுந்தது. பாபாவைப் போய்ப்பார்ப்பதென்று தீர்மானித்து பிரசாந்தி நிலையத்திலிருந்த தமது அன்பரொருவருக்கு எழுதி தாம் பாபாவைத் தரிசிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருந்தார். அவர் கடிதம் எழுதிய மறுதினம் இரவு துயில்கையில், பொறுத்துக் கொள்ளக்கூடிய வகையில் தமது தலையில் யாரோ குட்டுவதை உணர்ந்தார். எழுந்து மின்சார விளக்கை ஏற்றிப்பார்த்தார். அப்பொழுது அவர்கண்ட காட்சி—பகவான் ஸ்ரீ ரமணமகரிஷியின் உருவம் புகைப்படலமாக தெரிந்தது. அந்த உருவம் சிறிது சிறிதாக பகவான் சத்தியசாயிபாபாவாக மாறியது. தனித் தனியாக உருவங்கள் தெரிந்தன. பின் இரண்டுமே ஒன்றாகக் கலந்ததும் தெரிந்தது. பின்னர் தேஜோமயமான ஒரு ஒளிப் பிளம்பாகி மறைந்துவிட்டது. சுவாமி அபேதானந்தா மனங் குழம்பி அப்படியே நின்றபோது, வெகு தெளிவாக ஆங்கிலத்தில் ஒரு குரல் ''பதட்டமடையாதே! தியானம் செய்யாது, வெறுமனே மனத்தைக் கவனி. அப்படிக் கவனிப்போன் தான் அறிவோனை உணரும் பிரக்ஞை. அது கலப்பற்றது—பரிசுத்தமானது—உருவமற்றது—பூர்ணமானது. இந்தப்பிரக்ஞையை அறிபவனே ஆத்மன். இந்த ஆத்மன் சச்சிதாநந்தன். இதுவே நீ. ஆர்வத்துடன் நீ தேடிக்கொண்டிருக்கும் இந்தச் சாந்திக்கு நிகரானது வேறு எதுவும் இல்லை. மன உறுதியோடு இரு. நீ தான் ஆநந்தம். ஒருவன் தன் உள்ளுணர்வைக் கொண்டுதான் இந்த இரகசியத்தை அறிய முடியும். அவதானி. இந்த அடி அந்த இரகசியத்தை உனக்கு வெளிப்படுத்தும்'' என்று கூறியது. இதன்பின்னர் சுவாமி அபேதாநந்தா புட்டபர்த்திக்கு வந்து சென்றார். பிரசாந்தி நிலையத்தில் தங்கிய காலத்தில் பகவான் முரளீதர கிருஷ்ணனாக காட்சி கொடுத்ததையும் தரிசித்தார். மேலும் சுவாமி அபேதாநந்தா கூறியுள்ளார்—

''உருவமற்றது—பரிபூர்ணமானது—அந்தப் பேரன்பு ஒரு மனித உருவெடுத்து வந்துள்ளது. உலகின் இன்றைய நிலை குலைந்த தன்மையைச் சரிசெய்து, மனிதனின் குறைபாடுகளைத் திருத்தி அவர்களுடைய உண்மையான சொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தையும் அவர்கள் ஆநந்தமயமானவர்கள் என்பதையும் காட்ட அந்த ஏக—பரிபூர்ண பரப்பிரம்மமே அவதார மெடுத்து வந்திருக்கின்றது. இதனை நான் நேரில் கண்டேன். அவரது கரம்பட்டமாத்திரத்தே என் கிழத்தன்மை—குறை பாடுகள் யாவும் நீங்கி, இழந்தபலத்தை மீண்டும் பெற்றேன்.''

தெய்வநியதியின்படியே பகவானின் அவதாரம் இந்த உலகில் ஏற்பட்டுள்ளது. அதர்மம் மேலோங்கி, தர்மம் குன்றும் போதெல்லாம் அவதாரங்களை ஆண்டவன் ஏற்கின்றான்.

''வாழ்க்கை ஒரு தியாகம் — ஒரு யாகம். செய்யும் ஒவ்வொரு சிறிய செயலும் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கும் அன்புப் பூ. இந்தச் சரணாகதி உணர்வோடு தினமும் செயல்களை ஆற்றுவீராயின் நித்திரையென்ன—அதுவே சமாதி நிலை''

— பகவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத ஒளி முத்துக்கள்

''பகவானுக்கு, காம—குரோத—லோப—மோக—துவேஷ—மத மார்ச்சரிய மென்னும் புழுக்களை விலக்கி, இருதய மலரை அர்ப்பணம் செய்ய வேண்டும். சாதாரணமான பூக்களை நாம் பகவானுக்கு அர்ச்சிக்கும்போது கூட தடி—இலை—காம்புகளை விலக்கி நல்ல பூக்களை மட்டுந்தான் அர்ப்பணிக்கின்றோம். அகிம்சை — இந்திரியநிக்கிரகம் — தயை — மன்னிப்பு—சாந்தி — தபசு—தியானம்—சத்தியம் என்னும் எட்டுப் பூக்களும் சாயிக்கு மிகவும் பிரீதியானவைகளாகும்.''

''என்னைப் புகழ்வதும் எனக்கு ஒவ்வாது. இருக்கப்பட்டவற்றை உள்ளது உள்ளவாறு கூறுங்கள். அப்பொழுது அதில் ஆனந்தம் இருக்கின்றது. அதிகமாகக் கூறினாலும் சரி—குறைவாகக் கூறினாலும் சரி இரண்டும் குற்றமே. என் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று பற்றுடன் கேளுங்கள். உங்கள் இருதயத்தைக் கொடுத்து ஆண்டவனின் இருதயத்தை வாங்கிக் கொள்ளுங்கள். வீண் பேச்சுக்கள் தருவது பேச்சுத்தான்—செயலல்ல. நீங்கள் எதனைக் கோருகின்றீர்களோ—உண்மை இருதய சுத்தியுடன் கேட்கின்றீர்களோ — அதனை நான் தருகின்றேன்.''

''எனக்கு சங்கற்பமே பிரதானமாகும். யாவரும் என்னுடன் ஆத்ம சம்பந்தமுடையவர்களேயாவர். பூசை செய்வதால் மட்டும் அப்படிச் செய்பவர்கள் யாவரும் என்னுடையவர்களென்று நான் நினைக்கமாட்டேன். எல்லோரும் என்னுடையவர்களே. என்னைப் பூசிக்கின்றார்களெனக் குதூகலப்படுவதோ, தூஷிக்கின்றார்களென்று கவன்றுகொள்வதோ, ஒடுங்குவதோ இல்லை, எந்தவிதமாகவாவது என்னை நினைக்கின்றார்களேயென்று நான் ஆநந்தமடைகின்றேன்.''

''சத்தியம்-தாய்; ஞானம்-பிதா: சாந்தம் மனைவி; தைரியம்—சகோதரன்; தயை—மித்திரன்; சகிப்புத்தன்மை—புத்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உண்மையான மானிட பந்துக்களை அன்புடன் நேசித்தால் அரிஷ்டவர்க்க எதிரிகள் வெகு தூரம் ஓடுவார்கள் இதனைக் கைக்கொண்டு—அனுபவத்தில் சாதனை புரிபவன் பக்தனாவான்.''

''இந்த உலக சாகரத்தைத் தாண்டவேண்டுமானால் பிரம்மாண்டமான யக்ஞா யாகங்கள் — அகோரமான தபசுகள் வேண்டியதில்லை. பகவான் நாமஸ்மரணை என்னும் சிறிய நாம உச்சரிப்பாய படகே போதும்; இச்சாகரத்தைச் சுலபமாகத் தாண்டி விடலாம்.''

''என்னை நாடித் தன் கவனத்தைத் திருப்புபவனுக்கு எதுவுமே தீங்கு நடக்காது—துன்பம விளையாது. நாஸ்திகர்களதும் ஒழுங்கீனமானவர்களதும் கெட்டவர்களதும் தொடர்புகளைத் தவிருங்கள். எல்லோருடனும் பணிவும் அன்பும் காட்டுங்கள். எல்லா உயிர்களிலும் என்னைக் காணுங்கள். எல்லாக் கிருமிகளும் எறும்புகளும் உலகிலுள்ள அசையும் அசையாப் பொருள்களும் எனது தேகம்—எனது ரூபம். எனது நாணய சாலை நிறைந்திருக்கின்றது. எவருக்கு என்ன தேவையோ அதனை—அந்த நாணயத்தினை நான் கொடுப்பேன். ஆனால், கொடுக்கும் நாணயத்தை ஏற்கக்கூடிய பாத்திரவானாக அவன் விளங்குகின்றானவென்பதை முதலில் நான் காணவேண்டும். முழுமனத்தோடு என்னை நோக்குங்கள் — அதே முறையில் உங்களையும் நான் நோக்குவேன்.''

''தாகமுடையவனுக்கு நீரைக் கொடுங்கள்; பசியுள்ளவனுக்கு அன்னமிடுங்கள்; படுக்கையற்றவனுக்கு உங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் ஒதுங்கி ஆறுதலடைய இடத்தைக் கொடுங்கள். கொடுக்கவேண்டுமென்னும் உள நோக்கு இருக்குமாயின் கொடுங்கள்; கொடுக்க வேண்டுமென்னும் நோக்கின்றி, கொடுக்கப்படாதென்னும் மனோபாவம் இருப்பின் நீங்கள் கொடுக்க வேண்டாம். ஆனால், நாய்போலப் பாய்ந்து கடிக்காதீர்கள்.''

''தன்னைத்தான் அறிவதற்கு தியானம் அவசியம்; தொடர்ந்து விடாப்பிடியாகத் தியானத்திலீடுபட்டு வருவீர்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் உங்கள் மனஅலைகள் அமைதியுற்று உங்களை நீங்களே அறியச் செய்யும். நான் என்னும் அகங்காரத்தையும் எனது என்னும் பெருமையையும் கைவிடுங்கள். உங்களை என்னிடம் சரணாகதியடையச் செய்யுங்கள். உங்கள் உள்ளத்திலே நான் கோயில்கொண்டெழுந்தருளியுள்ளேன். நான் உட்புகுதற்குக் கதவுகள் அவசியமன்று; நான் எப்பொழுதும் எங்கும் இருக்கின்றேன்.''

''ஆத்மீக சாதனை எந்த இடத்தில் திறம்படச் செயற்படுமோ அந்த இடத்தில் அவதாரமெடுக்கின்றேன். ஒரு சிறிய இடத்தில் குழப்பம் இருப்பின் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர் அதனை அடக்க வருவார். குழப்பம் ஓரளவுக்கு பெரிதாகுமென்று காணப்படும்போது பொலிஸ் பரிசோதகர் வருவார். அந்தக்குழப்பம் இன்னும் சற்று விஸ்தரிக்கும்போது பொலிஸ் அத்தியட்சகர் வருவார். அடக்கமுடியாத அளவுக்கு குழப்பம் விஸ்தாரமாகும்போது பொலிஸ் நாயகம் வரவேண்டியிருக்கின்றது. அதுபோன்றுதான் உலகிலே அளவுக்கதிகமாக ஒழுக்கக்கேடுகளும் தர்மம் குன்றி அதர்மமும் தலைதூக்கும் போது மனித உருவிலே ஆண்டவன் அவதாரமெடுக்க வேண்டியிருக்கின்றது. இந்த அவதாரத்தினால் தான் மக்களை நல்வழிப் படுத்தி—ஆனந்தங் கொடுத்து ஆத்மீக நெறியில் அவர்களைக் கொண்டு செல்லலாம்.''

''ஆண்டவனுக்கு ஆதியில்லை; — ஆனால், 'கடவுள் எனது, எனது'' என்று மக்கள் சண்டையிடுகின்றார்கள். தனிப்பட்டவர்களது ஆதிக்கத்தில் நல்லதும் கெட்டதுமான இரண்டுமுள; தேவதைகளது ஆதிக்கத்தில் நன்மைமட்டும் உள்ளது; ஆவிகளின் ஆதிக்கத்தில் இரண்டும் சமம்; ஆவிகளுடைய ஆதிக்கத்திற்கும் மேற்பட்ட தானத்தில் நல்லதுமில்லை—கெட்டதுமில்லை. ஆஸ்திகனுமில்லை — பாபியுமில்லை. எல்லோரும் ஆண்டவனை உணர்ந்து விடுவர்.''

''உங்களது நூறு குற்றங்களையும் நான் மன்னித்து விடுவேன். முதலில் நான் உங்களுக்குக் கூறிய அறிவுரைகளின்படி நீங்கள் நடந்துள்ளீர்களா என்பதை பரிசோதியுங்கள். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நான் கூறிய சொற்கள் உண்மையாயினவா என்பதைத் தீர்மானியுங்கள். பாடசாலைகளில் பிரதிவாரமும் மாதமும் கால் வருடமும் அரை வருடமும் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. ஆனால், இறுதிப்பரீட்சை நடந்து, எழுதிய விடைப்பத்திரங்கள் பார்க்கப்பட்டு, புள்ளிகள் போடப்பட்டு, நீங்கள் சித்தியடைந்தீர்களா இல்லையா என்பது முடிவுசெய்யப்படுகின்றது. ஒவ்வொரு பரீட்சையிலும் நன்றாகச் செய்து பரீட்சார்த்தியின் கருணையைப் பெறுங்கள். உங்கள் விதியை ஆக்குவதும் அழிப்பதும் உங்களிடமே இருக்கின்றது. நீங்கள் வளர்க்கும் மனோநிலை உங்களை வளர்க்கவோ எரிக்கவோ செய்யுமென்பதை மறக்க வேண்டாம்.''

ஆத்மீக போராட்டத்தில் மூன்று படிகளில் மனிதன் வாழ்கின்றான். சாதாரண மனிதன் — ஆத்மீகத்தை அடைய முயற்சிப்பவன்—ஆண்டவனோடு ஆண்டவனுக ஒன்றுபட்டிணைந்தவன். முதலில் உலகம், ஜீவராசிகள், ஆண்டவன் என்னும் மூலவஸ்துக்கள் மூன்றுள. பின், அவை ஜீவராசிகள் — ஆண்டவன் என இரண்டாகின்றன. இறுதியில் ஒன்றாகி இறைவன் மட்டுமே எஞ்சி நிற்கின்றான்.''

''ஒரு சிறு கண்ணாடியின் மையத்தில் கதிரவனின் கிரணங்களைக் குவியச் செய்வதால் நெருப்புண்டாகின்றது. இவ்வாறு ஆண்டவனது அருட்கிரணங்களை குவியச் செய்வதால், ஆத்மா ஞான ஒளி பெறுகின்றது.''

''ஆண்டவன் துக்கத்தை நியமித்துள்ளான், ஏனெனில், துக்கமின்றேல் மனிதன் ஆண்டவனைத் தேடமாட்டான். இது ஒரு மருந்தைத் தரும் வைத்தியன் தன் மருந்து தொழிற்படுதற்கு வேண்டிய உணவு வகைகளையும் அனுமானத்தையும் பத்தியத்தையும் வரையறுப்பதற்குச் சமானமாகும்.

''தியானிக்கும்போது உதடும் நாவும் அசையக் கூடாது. தியானம் மனத்தாற் செய்யப்பட வேண்டும். சத்தியத்தின் பாதையில் நீங்கள் சென்றால் தோல்விகள் தோல்வியாகத் தோன்றாது—துன்பம் துன்பமாகத் தோன்றாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் மனத்தை யாராவது நோக வைத்தால் கோபத்திற்கு இடம் அளிக்காதே. விவேகத்துக்கும் பகுத்தறிவுக்கும் முதலாம் விரோதி கோபமாகும். தனித்த இடத்திலிருந்து சிறிது நேரம் ஆண்டவனைத் தொழுக; அல்லது. உரத்த சத்தத்தில் ஆண்டவனைப்பற்றிய கீதங்களைப் பாடுக: அல்லது, இவை இரண்டையும் செய்ய முடியாதுவிட்டால் உனது படுக்கையை விரித்து நித்திரையைக் கொள்".

"உனது சொந்த அனுபவமே உண்மைக்குரிய உனது உத்தரவாதமாகும். மற்றவர்கள் தங்கள் அனுபவத்தைக் கூறுவதைக்கேட்டு அதன்படி நடக்காதே, உன்னுடையதைப்போல வேறெதுவும் உண்மையாயிருக்காது. தைரியம், நம்பிக்கை, ஆர்வம் ஆகியவற்றை வளர்த்துக்கொள். இவை உனது லௌகிக—ஆத்மீகத்துறைகளில் துணையாக இருக்கும்"

"உலகிலே எங்குமுள்ள மனிதன் சஞ்சலத்திலும் தொல்லைகளிலும் சூழப்பட்டுள்ளான். அந்த வேதனையை அதிகரிக்கச் செய்வது சரியா? கடல் ஏற்கெனவே கொந்தளித்துக் கொண்டிருக்கின்றது. அதன்மீது ஒரு சூறுவளியை உண்டாக்க உனக்கு மனம் ஏவுமா? முகத்திற்கு முகம் புன்னகையைப் பரப்புவதற்குப் பழகு. உனது சொந்தக் கஷ்டதுன்பங்களின் கதைகளைக் கூறி ஒப்பாரியிட்டு துக்கத்தில் சூழ்ந்துள்ள உலகை ஏன் மேலும் துக்க சாகரத்துள் ஆழ்த்துவான். ஆண்டவனின் நாமத்தைச் சொல்லி — ஆண்டவனின் உருவத்தை உள்ளத்தில் வகித்துச் சிந்தித்து உனது துக்கத்தைச் சாந்தப்படுத்து, உனது துக்கத்தை வெற்றி கொண்டு மற்றவர்களுக்கு உதாரணமாக விளங்குக".

"உனது மனம் உன்கட்டுப்பாட்டில் அடங்கியிருக்கும்வரை நீ தியானத்திலீடுபடு, மனம் எப்பொழுது எங்கும் அலையத் தொடங்குகின்றதோ அப்பொழுது அவதானமாக இரு. அது அலையுமிடமெல்லாம் சென்று, அதனைத் தண்டிக்க வேண்டாம். அமைதியாக இருங்கள். உன்னல் அது கைகடக்க விடப்பட்டதும் ஓடி ஆடி களைத்து தானுகத் திரும்பி வரும். உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது ஒரு சிறு குழந்தையைப் போன்றது. குழந்தையின் பின்னால் சென்று அதன் பெயரைக்கூறி அழைத்து, அதன் நடையில் சிறிது கரிசனை காட்டினால் 'அந்தத் தைரியத்தில் குழந்தையும் மேலும் சிறிது தூரம் நடக்கும். தாய் பேசாது ஒரேயிடத்தில் நின்றால் — போனவழியே தான் திரும்பினால் அந்தக் குழந்தையும் மனம் பயந்து தாயின் கரங்களை நாடி திரும்பி ஓடி வரும். ஆகவே சபலச்சித்தத்திற்கு இடமளி யாது அதனைக் கவனியாது நீங்கள் மிகவும் பிரீதியாக விரும் பும் இறைவனை நாடி அவன் உருவை உள்ளத்தே நினைத்து தியானியுங்கள். இப்படி நடந்தால் உங்கள் உள்ளம் விரும்பும் நோக்கை அடைவீர்கள்.

''மனிதனுக்குச் சேவை புரிவதற்காக, மனித உருவிலே ஆண்டவன் அவதாரமெடுத்துவரும்போது அதே சேவையில் மனிதன் ஈடுபட்டிருப்பதைக் கண்டால் அந்த ஆண்டவனுக்கு எத்துணை மகிழ்ச்சி ஏற்படும்? பயனெதுவும் பற்றி சிந்தியாது கருத்தே கொள்ளாது. உலகுக்காக சேவை புரிய உங்கள் நேரத்தைச் செலவிடுங்கள். மனிதனிலுள்ள தெய்வீகத்தில் ஒருவன் உள்ளார்ந்த நம்பிக்கைகொண்டு, தங்குதடையற்ற ஆண்டவனைப்பற்றிய தியானத்தோடு சேவையை மேற்கொள் ளல் வேண்டும்.

''ஆத்மீக ஒழுக்கவாழ்வுப் பாதையில் அடியெடுத்துவைக்க இதுதான் நேரமாகும். நாளை செய்யப்படவேண்டிய ஆத்மீக சாதனையை இன்றே ஆரம்பியுங்கள். இன்று செய்யவேண்டிய ஆத்மீகசாதனையை இப்பொழுதே ஆரம்பியுங்கள். ஒரு குழந்தை தன் பிற்கால உயர்கல்விக்கு முதலெழுத்துக்களை தன் ஆரம்ப வயதிலேயே தொடங்குவதுபோல, ஆத்மீகத்துறையிலீடுபடும் குழந்தையும் தனது பாதையில் இப்பொழுதே தாமதமின்றி அடியெடுத்துவைத்தல் வேண்டும். வயது முதிர்ந்த காலத்திலோ அல்லது மரணப் படுக்கையிலோ ஆத்மீகசாதனையை ஆரம்பிக்க லாமென்றிருப்பது சாதனைக்கு உதவாது. ஒவ்வொரு விநாடி யும் ஆயுள் குறுகிக்கொண்டே செல்கிறது. கழிந்தவிநாடி உங் களுடையதாகாது. இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் விநா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியும் உங்களுடையதாகுமா? ஆகவே, இப்பொழுதே - இந்த விநாடியே ஆதியந்தமற்ற ஆநந்தத்தை அடைய முயற்சிசெய்யுங்கள்.

":அர்ப்பணிக்கப்படும் தூய செயல் பக்தி. பக்தி தான் ஞானம். ஒவ்வொரு மனிதனும், அர்ப்பணிப்பு—பக்தி—ஞானம் மூன்றும் இனியவையாக இருத்தல் வேண்டும், பக்தியினின்றும் பிறப்பது ஞானம். இந்தப்பக்தியை வளர்ப்பது ஆண்டவனை அனுதினமும் தியானிப்பது. ஒரு பக்தனுக்கு தம்மைப்பற்றிய அறிவை ஆண்டவன் அளிப்பான். தானே மனிதனிடம் விரித்த மாயையை அவனே அகற்றிவிடுவான். ஒருபொருளும் அதன் இயற்கையும் ஒன்றுதான். பொருளைவிட்டு இயற்கையையோ, இயற்கையை விட்டுப் பொருளையோ பிரித்துப் பார்க்க முடியாது. அதுபோலவே ஆவியும் வஸ்துவுமாக இரண்டாகக் கூறப்படும் ஆண்டவனது இரு குணங்களை பேதப்படுத்திப்பார்க்கமுடியாது. இரண்டும் உண்மையில் ஒன்றே. சர்க்கரையில் இனிப்பு இருப்பதை அனுபவத்தினுல் உணர்வதுபோல, ஆண்டவனையும் உணரவேண்டும்.

''மனிதகுலத்திற்கு சேவை புரிவதே மாண்புடைச் செயல் சேவை செய்வதற்கு எல்லோரிடத்தும் முதலில் பிரேமையை வளர்க்கவேண்டும். நீ சேவை செய்யும் மக்கள் உன்னைப்போற்றலாம் அல்லது தூற்றலாம். ஆனுல் உனது கடமையை பொறுமையாக—அமைதியாகச் செய். மற்றவர்களது அமைதியைக் கெடுக்கும் எதனையும் செய்யாதே. அமைதியும் பொறுமையும் எத்தகைய மதிப்புடையவை என்பது உனக்குத் தெரியும். உன்னோடு மற்றவர்கள் எப்படி நடக்கவேண்டுமென்று விரும்புகின்ருயோ அவ்வாறு நீ அவர்களுடன் நட. அதுதான் உன் அன்பை அளவிடக்கூடிய அளவுகோலாகும், சேவைபுரிய முன்வருவோர் சேவைபுரியும் தருணம் தம்மைத் தேடிவர வேண்டுமென்று காத்திருக்கவேண்டாம். சேவையைத் தேடிச் செல்லுங்கள். எந்நேரமும் ஆநந்தத்தைப்பரப்புங்கள்; உங்கள் சொந்தத் துன்பங்களை—கவலைகளை மற்றவர்களுக்கு கூறவேண்டாம். எந்தவேளையிலும் புன்னகையுடன் உலாவுங்கள். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகன் தன் தியானத்தைச் செய்யும்போது அவனை பிறர் குழப்பாதவாறு பார்த்துக் கொள்வதால் அவனது நன்றியை மட்டுமன்றி, அந்தப் பயனிலும் நீங்கள் பங்குகொள்ளுகின்றீர்கள். நான் கூறுவனவற்றையெல்லாம் முன்வரிசையிலிருந்து கேட்டுத் தலையாட்டிக்கொண்டிருப்பதிலும் அத்தருணத்தைத் தியாகம் செய்து மக்கட்குலத்துக்குத் தொண்டுபுரிவதன் மூலம் எனது அருளைப்பெறுகின்றீர்களென்பதை மறக்கவேண்டாம். அமைதியாக — இனிமையாக பேசுக. சேவைபுரிய வேண்டுமென்னும் ஆர்வம் மட்டுமிருந்தாற் போதாது அதனை அறிவோடும் திறமையோடும் செய்தல் வேண்டும். திறமையற்ற ஆர்வம் நட்டத்தையும் துக்கத்தையும் தான் தரும். ஏழை அறியாமை வயப்பட்டவன்...பசியுள்ளவன்—தாகமுடையவன்—பெற்றோரைப் பிரிந்த குழந்தைகள்—நோயாளிகள்—அங்கவீனர்கள்—துயரத்திலுள்ளவர்கள் ஆகியோருக்காக இரங்கும் உள்ளமுடையவனே சேவையாளனாக முடியும். சேவைக்கு எல்லை வரம்பு கிடையாது. சேவைபுரியும் தருணங்களை—சம்பவங்களைத் தேடிச் செல்லுங்கள். எல்லோரையும் சாயியின் பிரதிரூபமே என்று எண்ணி எல்லோருக்கும் சேவை புரியும்போது உள்ளத்தால் தியானித்து—தெய்வ அருட்பெயர்களை மனத்திலே எண்ணி பக்தியை வளருங்கள். வருந்துவோருக்கு அனுதாபங்காட்டி, சந்தோஷப்படுவோருடன் ஆநந்தமாக சந்தோசித்து சேவையைப் புரியுங்கள். ஆண்டவன் எந்நேரமும் உங்களை—உங்கள் செயல்களைக் கண்காணிக்கின்றான்; உங்கள் சேவைக்கு ஆநந்தம் தருவான்.''

''அன்பு—பொறுமை—சகிப்புத்தன்மை— உறுதியான நிலை அறம் என்பவை களங்கமற்ற சீலத்தை உண்டாக்கும் அருங்குணங்களில் சிறியவைகளாகும். தன்னில் எத்துணை அன்பும் நம்பிக்கையும் உடையவனாக ஒருவன் வாழ்கின்றானே அத்துணை அன்பும் நம்பிக்கையும் ஏனைய சீவராசிகளிடத்தும் அவனுக்கிருத்தல் வேண்டும்.''

''இறுமாப்பும் அழுக்காறும் இறைவனிடத்தில் நீங்கள் வைக்கும் அன்பு ஒன்றினால் தூய்மையாகும். இவையிரண்டை

யும் வளர்த்தால் அந்த அன்பின் தூய்மையைப் பங்கப்படுத்தும். உங்களுக்குள்ளே இருக்கும் குற்றங்களையும் பெலவீனத்தையும் ஆராய்வதே சாதனையின் முதற்படி. உங்களுக்கு விரும்பும் எந்த நாமத்தைக் கொண்டும்—நீங்கள் விரும்பும் எந்த உருவத்தைக் கொண்டும் இறைவனை வணங்கலாம், இறைவன் சர்வ வியாபகமாக இருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.''

''அன்பே சதாகாலமும் இறைவனை நினைவு கூருவதற்குச் சிறந்த கருவியாகும். அந்தக் கருவியை திறம்பட வைத்துப் பாதுகாப்பதற்கு விவேகமென்னும் உறைபோதுமானது. பக்தியென்பது நீங்கள் பஜனை செய்யக்கூடும்போது மட்டும் அணிந்துகொண்டு, பஜனை முடிந்தபின் கழற்றி வைக்கும் உடைபோன்றதல்ல. பக்தி என்பது மனத்தில் என்றும் எப்பொழுதும் இருக்க வேண்டிய மனோபாவமாகும்.''

''எத்துணைப் பெரியவைகளாக இருந்தாலும் பிறருடைய குற்றங்கள் அற்பமானவைகளென்று புறத்தே ஒதுக்குதல் வேண்டும். எத்துணை அற்பமானவையாயினும் புறக்கணிக்கத்தக்கனவாகவுள்ள உங்கள் குற்றங்களை பெரியனவாக எண்ணி மனமுருகி மன்னிப்புப் பெறவேண்டும்; இதனால் பொறுமைக் குணத்தையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கும் சீலத்தைப் பெறுவீர்கள். மழை பெய்ததற்கு அடையாளம் நிலத்தின் ஈரலிப்பு. பக்தியின் அடையாளம் பக்தனின் சாந்தம்; வெற்றி—தோல்வி, இகழ்—புகழ், பேறு—இழப்பு ஆதியவற்றின் தாக்குதல்களினின்றும் அவனைச் சாந்தம் காப்பாற்றுகின்றது. அகங்காரம் என்பது அபாயகரமான மாயை. அது அழிக்கப்பட வேண்டும். பட்டுப்பூச்சி தான் நெய்த கூட்டிலேயே மடிவதுபோல தன் சொந்த மனத்திலெழும் எண்ணங்களான வலைக்குள் மனிதன் அகப்பட்டால் அழிவுதான் மிஞ்சும்.''

''நீங்கள் விழிப்பாயிருக்கும் காலங்களில் ஒரு இமைப்பொழுதையாவது பயனற்ற வார்த்தைகளைப் பேசுவதிலும் வீண் விவாதங்கள் செய்வதிலும் தன்னையே தாழ்த்திக் கொள்ளும் செயல்களிலும் வீணாக்கக்கூடாது. மரணம் உங்களைத் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது.—அது எந்த நேரமும் உங்களைக் கவர்ந்து கொண்டு போய் விடலாம். உயிருடன் வாழும்போதே நல்ல கருமங்களைச் செய்யுங்கள்: மென்மையாகவும் இனிமையாகவும் பேசுங்கள்: பிறரை நிந்தியாதீர். பிறருக்குத் தீங்கு விளையாதீர். தேவை எங்கெங்கு உண்டோ ஆங்காங்கு சேவை செய்யுங்கள்: இறைவனை உங்கள் இதயத்தில் இருத்துங்கள். நீங்கள் கடவுளை எங்கும் காணலாம்.

"உங்கள் தேவைகளை அதிகரிக்காதீர்; நேரத்தை வீணுக்காதீர். ஒன்றில் வைக்கும் இச்சை, ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத்தாவி, அதிலிருந்து வளர்ந்து கொண்டேபோகும். ஆகவே இச்சையை ஆணிவேரோடு அகற்றுங்கள். உங்களுக்கு நீங்களே அதிகாரியாகுங்கள். ஆசையை அறுத்தால் ஞானத்தின் சிகரத்திற்கு உங்களை இட்டுச் செல்லும். எப்பொழுதும் அன்பு செய்யுங்கள். பொய் நன்மை பயக்காது சத்தியம் என்றும் பயன் தரும். விளக்கு எரிவதற்கு எண்ணெய் அவசியம். அதுபோல ஞான விளக்குக்கு பக்தியென்னும் எண்ணெய் வேண்டும்.

"அறிவினுல் அறியாமை நீங்கும்—இருள் ஒளியினுல் அழிக்கப்படும். உங்களிடத்தில் ஒளி உண்டாகப் பிரயத்தனப்படுங்கள். உங்களுள்ளேயே ஒளியிருக்கின்றது. அதன் மீது உலோகாயதப் பற்றென்னும் பழு அழுத்துவதால் அதனுல் வெளித்தோற்ற முடியவில்லை, அந்த ஒளி தோற்றும்போது உங்களுக்கு ஏற்படும் விடுதலையே மோட்சம்."

"காலையில் சிறிது நேரம் தியானமும் ஜெபமும் காலைத் தேனீராகட்டும்; பூசையும் அர்ச்சனையும் நண்பகல் உண்டியாகட்டும்; சில நற்சிந்தனைகள் அல்லது சிறந்தநூற் பாராயணம் மாலைச் சிற்றுண்டியாகட்டும்; பத்துநிமிட மௌனம் படுக்கைக்குச் செல்லுமுன்னர் அருந்தும் பாலாகட்டும். இந்தச் சாதனைக் கிரமம் உங்கள் ஆத்மாவைச் சந்தோஷமாக—ஆரோக்கியமாக—ஆநந்தமாக வைத்திருக்கப் போதுமானதாகும்".

"சேற்றிலே வளரும் தாமரை. நீருக்குள்ளே வளர்கின்றது. ஆனுல், அதன் நுனி நீருக்குமேல் உயர்ந்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் அந்தத் தாமரைக்கு உயிர் கொடுக்கும் பூதசக்தியாக இருந்துங்கூட அத் தாமரை நுனி தண்ணீரில் நனைவதில்லை. உலக மாயையில் உழன்றாலும் நீங்களும் அந்தத் தாமரையைப் போல இருக்க வேண்டும்.''

''விடுதலைப் பாதையில் நீங்கள் எடுத்துவைக்கும் ஒரு அடிகூட உங்களை வாழ்விக்கும். நீங்கள் ஒரு அடி எடுத்து வைத்தால் ஆண்டவன் நூறு மடங்கு உதவி செய்வார். சிவராத்திரி உங்களுக்கு நம்பிக்கை ஊட்டும். மனிதனின் மனத்திற்குத் தலைமைதாங்கும் தெய்வமான சந்திரன் பூரணையின்பின் பதினான்கு தினங்களுக்குத் தேய்ந்து ஒரு நுண்ணிய ஒளிவளைவாகத் தோற்றமளிக்கும். மனமும் அந்த நிலைக்கு பட்டினி போடப்பட வேண்டும். அப்படிச் செய்தாற்றான் மனிதன் விடுதலையடைய முடியும். எல்லா நாட்களையும் சிவனுடன் கழியுங்கள். உங்கள் மனத்தை வெற்றிகொள்வது சுலபமாகும். தேய்பிறைக் காலத்தின் பதினான்காவது தினத்தைச் சிவனுடன் கழியுங்கள். ஆத்மீக முயற்சியின் இறுதி நாள் — அதி உச்சத்தை எட்டவேண்டிய நாள் — சிவனுடன் கழித்தால் வெற்றி உங்களுடையதே. இன்றைய தினம் சிவனுக்குகந்தது விசேடித்தது. சிவனை வழிபடுங்கள்; கருணையையும் ஆநந்தத்தையும் அடையுங்கள்.''

''இப்பொழுது நீ ஒரு கற்றுக் குட்டியாகவோ அல்லது நம்பிக்கையற்றவனாகவோ இருக்கலாம். ஆனால் தர்மவழிப்படி தெயவநம்பிக்கையுடன் சத்தியத்தை நாடினால் நீயும் ஒரு பரமஹம்சராகலாம். எனது அறிவுரைகளைப் பின்பற்றுங்கள். உங்களை நான் வெற்றிக்கு இட்டுச் செல்லுவேன்.''

''சத்யம்—தர்மம்—சாந்தி—பிரேமைகளுடன் உங்கள் ஜீவித யாத்திரையைச் செய்யுங்கள். மானிடரின் தர்மம் பிரயத்னங்கள் செய்வது. வெற்றியோ தோல்வியோ தெய்வாதீனம். பக்தி பூர்வமான முறையில் பகவானைப் பூசித்துக்கொண்டு தினந்தோறும் செய்ய வேண்டிய தர்மங்களைச் செய்தால் கிடைக்கவும் அருமையான ராஜயோகம் கிடைக்கும். பக்தர்களுக்கு அஷ்ட சித்துக்கள் எதற்கு? உங்கள் இதய பூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைச் சரிசெய்து—உங்கள் மனத்தை ஏராகவும் உங்கள் குணங்களை மாடுகளாகவும் விவேகத்தைச் சாட்டையாகவும் கொண்டு உங்கள் இருதயங்களை உழுதுவையுங்கள். மானிட தர்மங்களை நல்ல எருவாகவும், அன்பு—பிரேமை என்பனவற்றை விதை தானியங்களாகவும் கொண்டு பக்தி என்னும் மழையைப் பொழியச் செய்து நீரூட்டி, உங்கள் எண்ணங்களையே அர்ச்சிக்கும் மலர்களாகக் கொண்டால் அதில் விளையும் பயிர் பிரம்மானந்தமேயாகும்.''

''நீங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களையும் சுகங்களையும் கர்மவினை என்று கூறுதீர்கள். உறுதியுடன் அவர் பாதத்தை நீங்கள் பற்றினல் நீங்கள் அடையவேண்டியதை அடையச் செய்வார். முதன்முதலில் பற்றிய உங்கள் பிடியை நழுவ விடாதீர்கள். எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் பக்தியினல் அடையும் பகவத் சந்நிதியை விட்டு வீடாதீர்கள். அவரே கருணை. அவரை மறக்காது காத்திருந்து அவரை அடையுங்கள்.''

''பௌதிக ஆசைகளுக்காக—உலோகாயத ஆசைகளுக்காகப் போராடுவதே துக்கத்தின் மூலகாரணம். சுகதுக்கங்கள் இரண்டும் மேகங்களைப்போல வந்து ஆத்மசோதியின் பிரகாசத்தை மறைக்கின்றது. அவையிரண்டும் க்ஷணத்திலே மாறக்கூடியது. இரண்டுக்கும் அப்பாற்பட்டு நாம் செல்ல வேண்டும். ஆத்மாநந்தம் ஒன்றே நித்தியம்—சத்தியம்—சாஸ்வதம். அந்த ஆத்மாநந்தத்தை அடைய நீங்கள் ஒரு அடியை முன்வைத்தால், பரமாத்மா உங்கள் பேரில் கருணைவைத்து உங்களுக்கு அவரே வழிகாட்ட வந்து விடுவார். ஆநந்தம் இருதயத்திலிருந்து ஊற்றெடுத்துப் பிரவாகிக்க வேண்டும். இருதயத்தில் பிரேமை இருந்தால் பரமாத்மாவின் கருணை—சக்தி மகிமைகளைச் சிந்திக்கச் சிந்திக்க ஆனந்தம் நிறைந்துவிடும்.''

''உலக மாயைகளில் மூழ்கிவிடும் உன் மனத்தை ஜபம்—தியானம் என்னும் சுத்தியல்களால் நன்ருக அடித்துப் பெரிதாகச் செய்தால் அப்பொழுது அது உலக மாயைகளில் மூழ்காமல் உங்களைக் காப்பாற்றி, மனத்துக்குச் சாந்தியை உண்டாக்கும்.''

''என்னைப் புகழ வேண்டாம்; என்னில் நீங்கள் நம்பிக்கை வைத்தாலே எனக்குத் திருப்தியளித்தவராவீர்.''

''என்னை நீங்கள் அடைய வேண்டுமாயின் வெறுப்பு—பொருமை-கோபம் – வெகுளி-குறைகாணுந்தன்மை—பொய்மை ஆதியவற்றை நீக்கி அன்பை வளருங்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மக்களில் நெறி வழி நின்றோருக்கு பாபாவின் அற்புதங்கள் அவசியமன்று. ஆனால் நெறிவழுவி—ஆசையில் உழலும் பஞ்சை மக்களுக்கு பாபாவின் தெய்வீகத்தில் நம்பிக்கை ஏற்பட வைப்பதற்கு அற்புதச் செயல்கள் அவசியமாகின்றன. பாபாவின் அமுதமொழிகள் அவர் கையாளும் தனிவழி—மதம், மொழி, சாதி, கொள்கை, ஆண், பெண், பிராணி யென்னும் பேதமின்றி கருணை பொழியும் தன்மை—அவரை உலகுக்கே சொந்தமானவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. சனாதன தர்மநெறிப்படி மக்கள் வாழ—பலமும் உறுதியும் கொண்டு ஆத்மீகவழியில் முன்னேற—சத்தியம், தர்மம்; சாந்தி, அன்பு என்னும் நான்கையும் கைக்கொள்ள வேண்டுமென பகவான் வற்புறுத்துகின்றார். மக்கள் இந்த நான்கையும் சமர்ப்பித்து உள்ளன்போடு வழிபடவேண்டும். நான்கு சம்பத்தில் ஒன்றையாகுதல் அடைவதற்கு விசுவாசமாக ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் என்று எல்லோரிடமும் பாபா எதிர்பார்க்கின்றார். ''எனக்கு உரித்தாக இல்லாத எவரும் இவ்வுலகில் இல்லை'' என்று கூறும் பகவானின் உறுதிமொழி மக்கள் எல்லோருக்கும் அவர் உரியவர் என்பதைத் தெளிவுறுத்துகின்றது.

மனித சமுதாயத்தின் மீட்சிப் பொற்காலம் இன்று ஆரம்பித்துவிட்டது—உதயமாகிவிட்டதன் அறிகுறிகளை புட்டபர்த்தியில் கண்டுகொண்டோம் மனித சமுதாயம் எழுச்சி கொள்ளுகின்றது.

''உலகின் நல்லவர்கள்—யோகிகள்—அறிவாழிகள்—பக்திமான்கள்—இறைவனைத் தேடுவோர்—வழிகாட்டிகள்—என்னைக் காண ஆவலுடன் இருந்தவர்கள் எல்லோரும் வேண்டினார்கள் — நான் வந்தேன்'' என்று கூறிவரும் பகவான், தாம் அவதாரமெடுத்ததன் காரணமான வேலைகளை இனிமேலேயே ஆரம்பிக்கப்போவதாகவும் கூறுகின்றார். பகவானின் அற்புதங்களை இனிமேற்றான் நாம் காணவிருக்கின்றோம். தாயைப்போல நேசமும் தந்தையைப்போல தைரியமும் ஆசிரியரைப்போல ஞானமும் ஆண்டவனைப்போல அனைத்தும் அறிந்தவராக எங்களுடன் பாபா இருக்கின்றார். அவர் காட்டும் சத்திய-அன்பு வழி நாம் வாழ்வோமாக அன்பு—சாந்தி நிறைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை

"உண்மையாக இரு; தர்மநெறி வாழ்; அமைதி-சாந்தியோடு நட; அன்பைக் கடைப்பிடி; சத்தியமே உயர்ந்த விதி-அதனை அடையும் சாந்தி வழி அன்புதான். ஆண்டவன் எங்குமுள்ளான்; எல்லாவற்றிலும் உள்ளான். சத்தியத்தையும் அன்பையும் விடாது சாதனையில் அனுட்டித்தால் அவனைக் காணலாம். ஆண்டவனின் கருணையானது ஒரு குறித்த வகுப்பினருக்கோ சாதியினருக்கோ சமயத்தினருக்கோ தான் உரியது என்று எங்குமே கூறப்படவில்லை. உலகில் எங்கெங்குமுள்ள சகல ஜீவராசிகளுக்கும் ஆண்டவனின் கருணையுண்டு-சகல ஜீவராசிகளுக்கும் அக் கருணையைப் பெற உரிமையுண்டு. உண்மை என்னும் உரைக்கல்லில் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே பரிசோதிக்க வேண்டும். வீண்சொற்களால் மட்டுமன்றி உண்மைச் செயல்களால் எத்துணை தூரம் ஆசைகளைத் துறந்து சாதனையில் இப்புருஷார்த்தங்களைக் கடைப்பிடிக்கின்றீர்களோ—அவ்வளவுக்கு ஆண்டவனின் அருள்பெறலாம்."

— பகவான்

உரிமை: இந்நூல் சம்பந்தமான சகல உரிமைகளும் (Copyright) இதன் வெளியீட்டாளருக்கேயுரியது. எது செய்யவேண்டுமாயினும் அவர்கள் அனுமதியுடனேயே செய்யப்படவேண்டும்.

— அதிபர், தெல்லியூர் பப்ளிக்கேஷன்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org